T-UN-145

ஸ்ரீ:

நம்மாழ்வார் அருளிச்செய்த

# திருவாய்மொழி.

ஆசாரியர்களால்

V. K. ராமாநுஜதாஸனைக்கொண்டு

எழுதப்பட்ட

எளிய தமிழ் உரையுடன்

கூடியது.

இரண்டாம் பத்து.

—o—

இது

என். ராஜகோபாலாசாரியரால்

கும்பகோணம்

ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

விலை ] 1935 [ அணா-12

ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜ மஹாதேசிகாய நம: ||
ஜ்ஞாநவைராக்யாநுஷ்டாநஸேவதயே
ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜமஹாதேசிகாய நம: ||
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.
திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவடிகளே சரணம்,
ஸ்ரீமதே ஸத்வவதே பாஷ்யகாராய மஹாதேசிகாய நம: ||
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

# இரண்டாம் பத்து.

இதில், எம்பெருமான் அதிபோக்கியன் (மிகுந்த போகத்தைக் கொடுக்கத் தகுந்தவன்) என்று பத்துக் காரணங்களாலே ஆழ்வார் அருளிச்செய்கிறார். அந்தக் காரணங்களாவன-(1) தன் பக்தன் தன்னை விட்டு ஒரு க்ஷணம் கூடப் பிரிந்தால் தனக்கு மிகுந்த கிலேசமுண்டாகும்படியான தன்மை; (2) மனிதனாக அவதாரம்செய்யும்போதும் தன் மேன்மைக்குக்குறைவில்லாமை; (3) ரஸமுள்ள எல்லா வஸ்துக்களினுடைய ரஸம் தன்னிடத்தில் சேர்ந்திருப்பது; (4) ஆச்ரிதர் துக்கத்தைப் போக்குவது; (5) ஆச்ரிதர் தன்னை அடைந்ததைக்கொண்டு ஸந்தோஷப்படுகை; (6) தன்னை ஆச்ரிதர்கள் விடுவர்களோவென்று பயப்படுவது; (7) ஆச்ரிதரைச் சேர்ந்த ஜநங்களுக்குக்கூட ஸுஹ்ருத்தாயிருப்பது; (8) மோக்ஷத்தை அடையும்போது உயர்ந்த போகத்தைக் கொடுக்கும் தன்மை; (9) ஆச்ரிதர்கள் மேல்விழுந்து கைங்கரியம் பண்ண வேண்டும்படி ஆசைப்படும் தன்மை; (10) கைங்கரியம் பண்ணத் தகுந்தபடி ஸமீபத்தில் எழுந்தருளியிருப்பது.

## முதல் திருவாய்மொழி.

அவ:— கீழ்த்திருவாய்மொழியில் எம்பெருமானுடைய அளவில்லாத அழகையும், அவனுடைய நல்ல குணங்களையும் கண்ணாலே பார்த்ததுபோல் ஆழ்வார் மனதாலே அநுபவித்தார். 'அஞ்சிறைய' (1-4) என்கிற திருவாய்மொழியில்போல் * பாஹ்ய

* பாஹ்யஸம்ச்லேஷமாவது— எம்பெருமான் திருக்கண்களாலே குளிரக் கடாக்ஷிப்பதும், சோதிவாய் திறந்து ஒருவார்த்தை சொல்லுவதும், திருக்கைகளாலே கட்டிக்கொள்ளுவதும்,

ஸம்ச்லேஷத்தை ஆசைப்பட்டு, அது கிடைக்காமையால் மிகவும் துக்கப்பட்டார். அதினல் எம்பெருமானுடைய மாநஸ அநுபவமும் போய்விட்டது. அவர் தம்முடைய கண்ணில் பட்ட பக்ஷி முதலானவைகளைப் பார்த்து, தாம் எம்பெருமானைப் பிரிந்து வருத்தப்படுகிறதுபோல், அவைகளும் எம்பெருமானை விட்டுப் பிரிந்து வருத்தப்படுவனவாகப் பிரமித்து,இரக்கத்துடன் தன்னை நாயகியாகப்பாவித்துக்கொண்டு அவைகளைப்பார்த்துப்பேசுகிருர்-

(கலிவிருத்தம்)

வாயுந் திரையுகளும் கானல் மடநாராய்
ஆயு மமருலகுந் துஞ்சிலுநீ துஞ்சாயால்
நோயும் பயலைமையு மீதூர வெம்மேபோல்
நீயுந் திருமாலால் நெஞ்சங்கோட் பட்டாயே. (க)

(ப-ரை) வாயும் திரை - கிட்ட வருகிற அலைகளை, உகளும் - மேல் மேல் கிளம்பும்படி செய்கிற, கானல் - உப்புக்கழியிலிருக்கும், மடம் நாராய் - மடப்பமுள்ள நாரையே! ஆயும் - தாய் போலிருக்கிற உன் தோழியும், அமர் உலகும் - ஸ்வர்க்கலோகத்திலிருப்பவர்களும், துஞ்சிலும் - தூங்கினலும், நீ துஞ்சாய் - நீ தூங்குகிறதில்லை. நோயும் - வியாதியும்(எம்பெருமானை விட்டுப் பிரிந்தவருத்தமும்)பயலைமையும்-உடம்பு வெளுத்துப்போவதும், மீதூர-மேலே பரவும்படி,எம்மேபோல்-என்னைப்போல், திருமாலால் - லக்ஷ்மீபதியால், நீயும், நெஞ்சம் கோட்பட்டாய் ஏ-மனது அபஹரிக்கப்பட்டாயா ?

(கருத்து) நாரையே! நீ தூங்கினலும் தூங்காது உன்னை ரக்ஷித்துக்கொண்டிருக்கும் தோழியும், ஸ்வபாவத்தால் தூக்கமில்லாத தேவலோகத்திலிருப்பவர்களும் தூங்கினலும் நீ தூங்கவில்லையே! இதற்குக் காரணமென்ன? எம்பெருமானை விட்டுப் பிரிந்து நான் வருத்தப்படுகிறேன். என்னுடைய உடம்பின் காந்தி போய்விட்டது. அப்படியே எம்பெருமான் உன் மனதையும் அபஹரித்துக்கொண்டானு ? அவனை விட்டுப் பிரிந்து நீயும் என்னைப்போல் வருத்தப்படுகிருயா ?

குறிப்பு— (1)ஆழ்வார் தமக்கு உண்டான மனவருத்தத்தாலே பக்ஷிகளும் எம்பெருமானைப் பிரிந்து வருத்தப்படுவனவாகப் பிரமிக்கிருர். துக்கப்படுகிறவன் துக்கப்படுகிறவர்களுடன் சேர்ந்து

அழுவது உலக வழக்கம். அதுபோல தம்மைப்போல் வருத்தப்படுவதாக எண்ணப்பட்ட அவைகளுடன் அவர் புலம்புகிறார்.

(2) மீனைப் பிடிப்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கிற நாரையைப் பார்த்து அதுக்குத் தூக்கம் போய்விட்டதாக ஆழ்வார் எண்ணுகிறார்.

இலக்கணம்:— அமர் - அமர என்பதில் கடைக்குறை. துஞ்சிலும்—உம்மைக்கு தூங்குகிறதில்லையென்று எதிர்மறைப் பொருள். ஆல்— வருத்தத்தைக் காட்டும் இடைச்சொல். பயலைமையும் என்கிற சீரில் 'லைக்கு' ஒரே மாத்திரை. இதுவும் மூவசைச்சீர்.

---

அவ:— ஆண்பக்ஷியை விட்டுப்பிரிந்து கத்துகிற பெண் அன்றிலைப் பார்த்து தம்மைப்போல் எம்பெருமானை விட்டுப் பிரிந்து வருத்தப்படுவதாக நினைத்துப் பேசுகிறார்—

கோட்பட்ட சிந்தையாய்க் கூர்வாய வன்றிலே
சேட்பட்ட யாமங்கள் சேரா திரங்குதியா
லாட்பட்ட வெம்மேபோ னீயு மரவணையான்
றாட்பட்ட தண்டுழாய்த் தாமங்கா முற்றுயே. (உ)

(ப-ரை) கூர்வாய அன்றிலே - குரூரமான த்வநியையுடைய அன்றிலே! கோட்பட்ட சிந்தையாய் - (பலாத்காரமாய்) அபஹரிக்கப்பட்ட மனதையுடையதாயிருந்துகொண்டு, சேட்பட்ட- நீண்டதாகத் தோன்றுகிற, யாமங்கள்-யாமங்களிலே, சேராதே- படுக்காமல், இரங்குதி - கத்துகிறாயே, ஆட்பட்ட எம்மேபோல்- (எம்பெருமானுக்கு) தாஸனான என்னைப்போல், நீயும், அரவு அணையான் தாட் பட்ட - ஆதிசேஷனாகிய படுக்கையில் படுத்திருக்கும் எம்பெருமானுடைய திருவடிகளிலிருக்கிற, தண் துழாய் தாமம் - குளிர்ந்த திருத்துழாய் மாலையை, காமுற்றாய் ஏ - ஆசைப்பட்டாயோ ?

(கருத்து) குரூரமான த்வநியையுடைய அன்றிலே ! உன் மனதையும் எம்பெருமான் அபஹரித்துக்கொண்டானா? ராத்திரி முழுவதும் படுக்காமல் கத்துகிறாயே. என்னைப்போல எம்பெருமான் திருவடிகளில் சாத்தியிருக்கும் துளஸிமாலையை ஆசைப்பட்டு அது கிடைக்காமல் கத்துகிறாயா ?

குறிப்பு— (1) அன்றிலின் த்வநியானது நாயகனை விட்டுப் பிரிந்த நாயகிக்கும், நாயகியை விட்டுப் பிரிந்த நாயகனுக்கும் பொறுக்க முடியாமலிருக்கும். அதைப்பற்றி உரையில் 'க்ரூர மான' என்று சொல்லியிருக்கிறது.

(2) வருத்தப்படுகிறவர்களுக்கு ஒரு க்ஷணம் ஒரு யுகமாகத் தோன்றும். ஆகையால் ராத்திரியை 'சேட்பட்ட யாமங்கள்' என்று சொல்லியிருக்கிறது.

(3) 'நீயும்' என்பதற்கு கஷ்டப்படுவதற்காகப் பிறந்த நான் பிரிவைப் பொறுத்துக்கொண்டிருக்கிறேன். நீயோ துக்கம் பொறுக்கமாட்டாதவள். உனக்கு இந்த வருத்தம் வரவேண் டுமோ என்று கருத்து.

இலக்கணம்:— நீயும்—உம்மைக்கு எச்சப் பொருள். இரங் குதி— முன்னிலை வினைமுற்று; இ விகுதி. வாய் என்பது ஆகு பெயராய் அதில் உண்டான குரலைச் சொல்லுகிறது.

---

அவ:— ஓயாது இரைந்துகொண்டிருக்கிற ஸமுத்திரத் தைப் பார்த்துப் பேசுகிறார்—

காமுற்ற கையறவோ டெல்லே யிராப்பக
னீமுற்றக் கண்டுயிலாய் நெஞ்சுருகி யேங்குதியாற்
றீமுற்றத் தென்னிலங்கை யூட்டினான் றாணயந்த
யாமுற்ற துற்றாயோ வாழி கனைகடலே. (ரு)

(ப-ரை) எல்லே! - தோழியே! கனைகடலே - (அடிக்கடி சப்திக்கிற ஸமுத்திரமே! காமுற்ற கையறவோடு - ஆசைப் பட்ட வஸ்து கைக்கு வாராமையால், இரா பகல் முற்ற - ராத்திரி பகல் முழுவதும், நீ கண் துயிலாய் - நீ தூங்குகிறாயில்லை, நெஞ்சு உருகி ஏங்குதி - மனது உருகி துக்கத்துடன் கத்துகிறாய், தீ தென் இலங்கை முற்ற ஊட்டினான் - அக்கினிக்குத் தென்னி லங்கை முழுவதையும் சாப்பிடும்படி கொடுத்தவனாகிய எம்பெரு மானுடைய, தாள் நயந்த யாம்-திருவடிகளை ஆசைப்பட்ட நான், உற்றது - அடைந்ததை (துக்கத்தை), உற்றாயோ - அடைந்தா யோ, வாழி - வாழ்ந்திடுக (உன் துக்கம் போய் வாழ்ந்திரு)

(கருத்து) ஐயோ, ஸமுத்திரமே! நீ நாள் முழுவதும் தூங்காமல் மனது உருகி வருத்தத்துடன் கத்துகிறாயே. நீ எம்பெருமானை ஆசைப்பட்டு அது கிடைக்காமல் வருத்தப்படுகிறாயா? இலங்கையை நாசம் செய்த எம்பெருமானுடைய திருவடிகளை ஆசைப்பட்டு அவைகளை விட்டுப் பிரிந்து நான் துக்கப்படுகிறேன். நீயும் என்னைப்போல் துக்கப்படவேணுமோ? அதில்லாமல் நீ வாழ்ந்திரு.

குறிப்பு— (1) எல்லே என்பது ஒரு ஸ்திரீ தன் தோழியைக் கூப்பிடும்போது சொல்லப்படுகிறது. இங்கே ஸமுத்திரத்தைத் தமக்குத் தோழியாக ஆழ்வார் பாவித்துக் கூப்பிட்டபடி.

இ—ம். துயிலாய் - முன்னிலை எதிர்மறைவினைமுற்று - நீ துங்குகிறாயில்லையென்று பொருள். ஏங்குதி-முன்னிலை வினைமுற்று. வாழி-வியங்கோள்.

---

அவ:— ஓயாமல் அடித்துக்கொண்டிருக்கிற காற்றைப் பார்த்துப் பேசுகிறார்—

கடலும் மலையும் விசும்புந் துழாயெம்போற்
சுடர்கோ ளிராப்பகற் றுஞ்சாயாற் றண்வாடா
யடல்கோள் படையாழி யம்மானைக் காண்பானீ
யுடலநோ யுற்றாயோ வூழிதோ றூழியே. (ச)

(ப-ரை) தண் வாடாய் - குளிர்ந்த வாடைக்காற்றே! கடலும் மலையும் விசும்பும் - ஸமுத்திரத்தையும் மலையையும் ஆகாசத்தையும், துழாவி - தடவிக்கொண்டு, சுடர் கொள் இரா பகல்- ஸூரியனைக்கொண்ட பகலிலும், சந்திரனைக்கொண்ட இரவிலும், எம்போல் - (தூங்காத) என்னைப்போல், துஞ்சாய் - நீ தூங்குகிறாயில்லை. அடல் கொள்-பராக்கிரமத்தைக்கொண்ட(பாரதயுத்தத்தில் பீஷ்மருக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட) படை ஆழி அம்மானை - ஆயுதமான திருவாழியையுடைய ஸ்வாமியை (ஸ்ரீகிருஷ்ணனை), காண்பான் - காண, ஊழி ஊழிதோறு - ஒவ்வொரு கல்பத்திலும், உடலம் நோய் உற்றாயோ - உடம்பின் வியாதியை அடைந்தாயோ?

(கருத்து) குளிர்ந்த வாடைக்காற்றே! "எம்பிரானே எங்கேயிருக்கிருய்" என்று ஸமுத்திரத்திலும் மலேகளிலும் ஆகாசத்திலும் போய் தேடிக்கொண்டு, பகலிலும் ராத்திரியிலும் தூங்காத என்னைப்போல் நீயும் தூங்குகிருயில்லே. திருவாழியும் கையுமாயிருக்கும் அவனழகைப் பார்க்க ஆசைப்பட்டு, அது கிடைக்காமல் எல்லாக் காலத்திலும் உடம்பிலிருக்கும்படியான வியாதியை அடைந்தாயா?

குறிப்பு— (1) அடல் என்கிற சொல்லுக்குப் பராக்கிரமம் என்று பொருள். இங்கே அது ஆகுபெயராய் அதைக் காட்டின யுத்தம் சொல்லப்படுகிறது

(2) எம்பெருமான் திருப்பாற்கடலிலும் திருமலேயிலும் வைகுந்தத்திலும் இருக்கிருனென்று வேதம் சொல்லுகிறது. ஆகையால் காற்று அந்தவிடங்களுக்குப் போய் அவனேத் தேடுகிறது என்று கருத்து.

(3) ஊழி என்பது கல்பம்— பிரம்மாவின் ஒரு பகல்,

இ—ம். துழாய் - வினேயெச்சம். துழாவி என்பது துழாய் என்று மாறியிருக்கிறது. வாடாய் - வாடை என்பதின் விளிவேற்றுமை. காண்பான் - காண. வினேயெச்சம். (4)

---

அவ:—மழை பொழிகிற மேகத்தைப் பார்த்துப் பேசுகிருர்-

ஊழிதோ றூழி யுலகுக்கு நீர்கொண்டு
தோழியரும் யாமும்போ னீராய் நெகிழ்கின்ற
வாழிய வானமே நீயு மதுசூதன்
பாழிமையிற் பட்டவன்கட் பாசத்தா னேவாயே. (௫)

(ப-ரை) உலகுக்கு நீர் கொண்டு - உலகத்துக்காக (ஸமுத்திரத்திலிருந்து) நீரை எடுத்துக்கொண்டு வந்து, ஊழி ஊழி தோறு - எல்லாக் கல்பங்களிலும், நீராய் நெகிழ்கின்ற - மழை ஜலமாக உருகுகிற, வாழிய வானமே-(லோகத்தை) வாழும்படி செய்கிற மேகமே! நீயும், தோழியரும் யாமும் போல் - என் தோழிகளேயும் என்னேயும் போல், மதுசூதன் - மதுஸூதன் என்ற திருநாமமுடைய எம்பெருமானுடைய, பாழிமையில்-(புஜ)பலத்தில், பட்டு - அகப்பட்டு, அவன்கண் பாசத்தால் - அவனிடமுண்டான ஆசையால், நைவாயே - தளர்கிருயா?

(கருத்து) உலகமெல்லாம் நிறையும்படி எல்லாக் காலங்களிலும் நின்று மழைஜலமாய் உருகுகிற மேகமே! உலகத்துக்கு உபகாரம் செய்கிற நீயும் எங்களைப் போல எம்பெருமானுடைய குணங்களையும் அவன் செய்கிற வேலைகளையும் பார்த்து, அவனிடம் அகப்பட்டு அவனிடம் ஆசையாலே தளர்ச்சியை அடைகிறாயா?

குறிப்பு— (1) வாழிய என்கிற சொல்லை வினைமுற்றாக வைத்துக்கொண்டு நீ வாழு என்றும் பொருள் கொள்ளலாம். அப்போது இது வியங்கோள்.

இ—ம். கண் - ஏழாம் வேற்றுமை உருபு. நைவாய் - முன்னிலை வினைமுற்று. (5)

---

அவ:— கலைகள் குறைந்து பிரகாசமில்லாமலிருக்கிற சந்திரனைப் பார்த்துப் பேசுகிறார்—

நைவாய வெம்மேபோ லொண்மதியே நீயிந்நாள்
மைவா னிருளகற்றாய் மாழாந்து தேம்புதியா
லைவா யரவணைமே லாழிப் பெருமானார்
மெய்வா சகங்கேட்டுன் மெய்ந்நீர்மை தோற்றாயே. (சு)

(ப-ரை) நாள் மதியே - ஒரே கலையையுடைய சந்திரனே! நீ, இந்நாள் - இப்போது, மை வான் இருள் அகற்றாய்-மைபோல கருத்த பெரிதான இருட்டைப் போக்குகிறாயில்லை. மாழாந்து - மழுங்கி, தேம்புதி - குறைந்துவருகிறாய், நைவாய எம்மேபோல் - (எம்பெருமானைப்பிரிந்து வருத்தப்படுகையே ஒரு ரூபங்கொண்டு வந்திருப்பதுபோலிருக்கிற) என்னைப்போல, ஐ வாய் அரவு அணைமேல் - ஐந்து முகங்களையுடைய திருவனந்தாழ்வானாகிற படுக்கையின்மேலிருக்கிற, ஆழி பெருமானார் - திருவாழியை உடைய பெரியபெருமாளுடைய, மெய் வாசகம் - (நீ பிரமித்து) உண்மையானதென்று எண்ணின சொல்லை, கேட்டு, உன் மெய் நீர்மை - உன் உடம்பின் (பிரகாசமாகிய) ஸ்வபாவத்தை, தோற்றாயே - இழந்தாயோ.

(கருத்து) ஒரே கலையுள்ள சந்திரனே! நீ இப்போது நெருங்கியிருக்கிற இருட்டைப் போக்குகிறாயில்லை. பிரகாசமில்

லாமல் நீ குறைந்துவருகிறாய். எம்பெருமானை விட்டுப் பிரிந்து வருத்தப்படுகிற என்னைப்போல, எம்பெருமானுடைய வார்த்தைகளைக் கேட்டு திருவனந்தாழ்வான் முதலான நித்தியஸூரிகளுடன் பழகுவதினால் அவன் உண்மையையே பேசுவன் என்று நம்பி, அவனிடம் அகப்பட்டு உன்னுடைய பிரகாசத்தை இழந்தாயா ?

குறிப்பு— எம்பெருமான் வார்த்தைகளாவன- 'பெண்ணே உன்னைவிட்டுப் பிரியமாட்டேன்' என்றும், 'இது என்னுடைய விரதம்' என்றும், 'துக்கப்படாதே' என்றும் சொல்லப்பட்டவைகள்.

இ—ம். அகற்றாய் - எதிர்மறை முன்னிலை வினை முற்று. தேம்புதி - முன்னிலை வினை முற்று. (6)

---

அவ:— இருட்டைப் பார்த்துப் பேசுகிறார்—

தோற்றோ மடநெஞ்ச மெம்பெருமா னாரணற்கெம்
மாற்றாமை சொல்லி யழுவோமை நீநடுவே
வேற்றோர் வகையிற் கொடிதா யெனையூழி
மாற்றாண்மை நிற்றியோ வாழி கனையிருளே. (எ)

(ப-ரை) கனை இருளே - நெருங்கியிருக்கிற இருட்டே! எம்பெருமான் நாரணற்கு-என்னுடைய ஸ்வாமியான நாராயணனுக்கு, மடம் நெஞ்சம் - (அவன் விஷயத்தில்) சபலமுள்ள மனதை, தோற்றோம் - (அவனுடைய குணங்களைப் பார்த்து) இழந்தோம், எம் ஆற்றாமை - எங்களுடைய பொறுக்கமுடியாதிருப்பதை, சொல்லி-(ஒருவரோடொருவர்) சொல்லி, அழுவோமை- அழுதுகொண்டிருக்கிற எங்களை, நீ - (அவனை விட்டுப் பிரிந்து துக்கத்தாலே கருப்பாக ஆகி, வாயைத் திறந்து கதறவேண்டிய) நீ, நடுவே, (துக்கத்தை அநுபவித்துக்கொண்டிருக்கும்போது) வேற்றோர் வகையில் - சத்துருக்கள் ஹிம்ஸை செய்கிற விதத்தைக் காட்டிலும், கொடியதாய் - குரூரமாய், எனை ஊழி - எவ்வளவு காலம், மாற்றாண்மை - விரோதச் செய்கையில், நிற்றி - நிற்பாய்? வாழி - நீ க்ஷேமமாயிரு.

(கருத்து) நெருங்கின இருட்டே! என் ஸ்வாமியான நாராயண னுடைய ஆச்ரிதர்களுக்கு ஸுலபனாயிருப்பதுமுதலான குணங் களைப் பார்த்து, அவனிடத்தில் சபலமுள்ள என் மனது அவ னிடம் போய் படிந்துவிட்டது. அதை இழந்துவிட்டேன். என் னைப்போல துக்கப்படுகிற நாரை முதலானவைகளுடன் எம் பெருமானுடைய பிரிவினாலுண்டான துக்கம் பொறுக்கமுடியா திருப்பதைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இந்த ஸமயத்தில் அவனைவிட்டுப் பிரிவினால் உடம்பு கருத்து, வாயைத் திறந்து கத றவும் முடியாதேயிருக்கிற நீ உன் துக்கத்தைக் காட்டி எங்கள் துக்கத்தை அதிகப்படுத்துகிறாய். இதைப் பார்க்கும்போது சத்துருக்கள் செய்யும் ஹிம்ஸையை ஸுகமென்று சொல்லலாம் போலிருக்கிறது. எத்தனை காலம் இப்படி எங்களை வருத்தப் படுத்துவாய், உனக்கு க்ஷேமமுண்டாகட்டும்.

பாட்டுக்கு வேறு விதமாயும் கருத்து சொல்லலாம்:—நாங் கள் எங்கள் துக்கத்தை ஒருவரோடு ஒருவர் சொல்லிக்கொண் டிருக்கையில், ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கமுடியாதபடி எங்களுக்கு நடுவே வந்து சத்துருக்கள் ஹிம்ஸை செய்வது போல் எத்தனை காலம் சத்துருவின் வேலையைச் செய்துகொண் டிருப்பாய் ?—என்று

குறிப்பு— (1) முதல் யோஜனையில் இருட்டும் எம்பெருமானைப் பிரிந்து வருத்தப்படுகிறதென்றும், அதனாலே அதின் உடம்பு கருத்திருக்கிறதென்றும் அதின் துக்கத்தைப் பார்த்து ஆழ்வார் துக்கம் அதிகரித்தது என்றும் பொருள். இந்த யோஜனை ஆளவந்தாருடையது. இதில் சொற்களின் ஸ்வாரஸ்யத்திற்கு அதிக விரோதமில்லாத்தினாலும், தன்னைப்போல் எம்பெருமா னுடைய பிரிவினால் பக்ஷிகளும் வருத்தப்படுவதாக ஆழ்வார் நினைத்துப் பேசுகிற பிரகரணத்திற்கு ஒத்திருப்பதாலும் இந்த யோஜனையிலும் பிள்ளானுக்குத் திருவுள்ளம்.

இரண்டாவது யோஜனையில் இருட்டின் கருப்பு ஸ்வபாவ மாயுள்ளது. அது விரோதிகளைப் போல ஆழ்வாருக்கும் மற்றவர் களுக்கும் நடுவே வந்து, ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கமுடி யாதபடி பண்ணி, சத்துருவின் வேலையைச் செய்கிறதென்று பொருள். இது ஸ்ரீ பாஷ்யகாரரின் யோஜனை.

(2) சத்துருவும் துக்கப்படுகிறவனைக் கண்டு இரக்கப்படுவன். நீ எங்களுக்கு வருத்தத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமில்லை. சத்துருவைக் காட்டிலும் அதிகமாக வருத்தப் படுத்துகிறாய்.

இ—ம். அழுவோமை - வினையால் அணையும் பெயர். வினைமுற்றான சொல் பெயர்ச்சொல்லாய் வந்திருக்கிறது. நிற்றி- முன்னிலை வினைமுற்று. வேற்றோர் வகையில்— இல் - ஐந்தாம் வேற்றுமை உருபு; வகையைக் காட்டிலும் என்று பொருள்.

---

அவ:— எப்போதும் ஓடிக்கொண்டிருக்கிற நீர்க்கழியைப் பார்த்து பேசுகிறாள்—

இருளின் றிணிவண்ண மாநீர்க் கழியேபோய்
மருளுற் றிராப்பகற் றுஞ்சிலுநீ துஞ்சாயா
லுருளுஞ் சகட முதைத்த பெருமானா
ரருளின் பெருநசையா லாழாந்து நொந்தாயே. (௩)

(ப-ரை) இருளின் திணி வண்ணம் - இருட்டினுடைய ஸாரம்போன்ற வர்ணத்தையுடைய, மா நீர்கழியே-மிகுந்தஜலத்தையுடைய கழியே! போய்-மிகவும், மருள் உற்று - மோஹத்தை அடைந்து, இராப்பகல் - இரவும் பகலும், துஞ்சிலும் - முடிவை அடைந்தாலும், நீ துஞ்சாய் - நீ தூங்குகிறாயில்லை, உருளும் சகடம் உதைத்த-உருண்டு வருகிற (அஸுரன் உட்புகுந்திருந்த) வண்டியை (தன் திருவடிகளால்) உதைத்த, பெருமானார் - ஸ்வாமியினுடைய, அருளின் பெரு நசையால் - கருணையினாலுண்டாகும் சேர்க்கையில் மிகுந்த ஆசையாலே, ஆழாந்து - குறைப் பட்டு, நொந்தாய் - வருத்தப்படுகிறாயா ?

(கருத்து) கருத்த அதிக ஜலமுடைய கழியே! நீ மோஹத்தை அடைந்து இராப்பகல் முடிந்தாலும் தூங்குகிறாயில்லை. அஸுரன் புகுந்திருந்த வண்டியை உதைத்து அதைத் தூள் தூளாகப் பண்ணின ஸ்ரீ கிருஷ்ணனுடன் சேரவேண்டுமென்று நாங்கள் வருத்தப்படுவதைப்போல் நீயும் வருத்தப்படுகிறாயா ?

குறிப்பு— (1) துஞ்சு என்கிற சொல்லுக்கு மரணமென்றும் தூக்கமென்றும் பொருள். இராப்பகலுக்கு மரணத்தையும், கழிக்குத் தூக்கத்தையும் சொல்லுகிறது.

(2) அருள் என்கிற சொல் ஆகு பெயராய் அதின் காரிய மான சேர்க்கையைச் சொல்கிறது.

இ—ம். நொந்தாய் - முன்னிலை வினைமுற்று.

---

அவ:— ஸ்வபாவமாய் உஷ்ணமுள்ள விளக்கைப்பார்த்துப் பேசுகிறாள்—

நொந்தாராக் காதனோய் மெல்லாவி யுள்ளுலர்த்த
நந்தா விளக்கமே நீயு மளியத்தாய்
செந்தா மரைத்தடங்கட் செங்கனிவா யெம்பெருமா
னந்தாமத் தண்டுழா யாசையால் வேவாயே. (கூ)

(ப-ரை) நந்தா விளக்கமே - அணையாமல் மேல்மேல் பிரகாசிக்கிற விளக்கே! அளியத்தாய் - நம்முடைய இரக்கத்துக்கு விஷயமான நீ, நொந்து ஆரா - வியஸநப்பட்டு முடியாத, காதல் நோய் - ஆசையாகிற வியாதியானது, மெல் ஆவி - மிருதுவான ஆத்மாவை, உள் உலர்த்த - குருத்தும் உலர்ந்துபோகும்படி, செம் தாமரை தடம் கண் - சிவந்த தாமரைஇதழ்போல் நீண்ட திருக்கண்களையும்,செம் கனிவாய்-சிவந்த கோவைப்பழம்போன்ற திருப்பவளத்தையுமுடைய, எம்பெருமான் - என் ஸ்வாமியினுடைய, அம் - அழகிய, தாமம் தண் துழாய் - மாலையாகிய குளிர்ந்த துளஸியில், ஆசையால், வேவாய் ஏ - உன்னுடைய உடம்பே அக்கினியாகப் போய்விட்டதா ?

(கருத்து) நடுவில் அணைந்துபோகாமல் எரிகிற விளக்கே! தாமரைபோன்ற திருக்கண்களையும், கோவைப்பழம் போன்ற திருப்பவளத்தையுமுடைய எம்பெருமான் திருவடிகளில் சாத்தின துளஸிமாலையிலிருக்கும் ஆசையானது அது கிடைக்காமல் எவ்வளவு காலம் வருத்தப்பட்டும் தீராது. அந்த ஆசையாகிய அக்கினியால் உள்ளும் உலர்ந்துபோம்படி நான் வருத்தப்படுகிறேன். நீயும் அந்த ஆசையால் உள் உலரும்படி நெருப்பாகவே ஆகியிருக்கிறாயா ? இப்படி பாடுபடுகிறதற்கு உனக்குத் தகுதியில்லையே.

குறிப்பு— (1) மெல்லாவி-தொடுவதினாலேயே கெடும்படியாய் மிருதுவாயிருக்கிற ஆவி; இங்கே எம்பெருமானுடைய

குணங்களின் அநுபவத்தாலே வருத்தப்படுகிற ஆத்மா என்று பொருள்.

(2) கீழ்ப்பாட்டுவரையில் ஸமுத்திரக்கரையிலிருந்து அங்கிருந்தவைகளைப் பார்த்துப்பேசி, தம்முடைய திருமாளிகைக்குள் வந்து, அங்கே எரிகிற விளக்கைப் பார்த்து, எம்பெருமானிடத்திலிருக்கிற ஆசையால் அப்படி எரிகிறதென்று பிரமித்து அதைப் பார்த்துப் பேசினாள்.

இ—ம். ஆரா-எதிர்மறைப் பெயரெச்சம்; ஆராத என்பதில் கடைக்குறை. அளியத்தாய்-அளியத்தாள் என்பதின் விளிவேற்றுமை. விளக்கம்—விளக்கு என்பதுடன் அம் சாரியை சேர்ந்திருக்கிறது.

---

அவ:— இப்படி ஆழ்வார் வருத்தப்பட, எம்பெருமான் முன்போல் வந்து தோன்றினான். அவனைப் பார்த்து இனி ஒருபோதும் தம்மை விடக்கூடாதென்று பிரார்த்திக்கிறார்—

வேவாரா வேட்கைநோய் மெல்லாவி யுள்ளுலர்த்த
வோவாதி ராப்பக லுன்பாலே வீழ்த்தொழிந்தாய்
மாவாய் பிளந்து மருதிடைபோய் மண்ணளந்த
மூவா முதல்வா வினியெம்மைச் சோரேலே. (ம)

(ப-ரை) வேவு ஆரா - எரிந்துகொண்டிருப்பது ஒழியாத, (எப்போதும் எரிந்துக்கொண்டிருக்கிற), வேட்கை நோய் - ஆசையாகிய வியாதி, மெல் ஆவி உள் உலர்த்த - மிருதுவான ஆத்மாவை உள்ளே பிடித்து அது முழுவதும் உலர்ந்துபோகும்படி, ஓவாது - ஒழிவில்லாமல், இராப்பகல் - இராத்திரியும் பகலும், உன்பாலே வீழ்த்து - என்னை உன்னிடத்தில் விழும்படி செய்து, ஒழிந்தாய் - நீ செய்யவேண்டிய வேலையைச் செய்ததாக எண்ணிக்கொண்டிருக்கிறாய், மா வாய் பிளந்து - குதிரை ரூபமாய் வந்த கேசியின் வாயைப் பிளந்து, மருது இடைபோய் (இரட்டையான) அர்ஜுந மரங்களின் நடுவிலே போய் (அவைகளை கீழே தள்ளி) மண் அளந்த - பூமியை திருவடியால் அளந்த, மூவா - கிழத்தனமில்லாத, முதல்வா - உலகத்துக்குக் காரணமானவனே ! இனி எம்மை சோரேல் - இனிமேல் எப்பொழுதும் என்னைவிட்டுப் பிரியாதே.

(கருத்து) உன்னிடத்தில் எனக்கு இருக்கும் ஆசையானது, எரிந்துபோகத்தகாத என் ஆத்மா எரிந்து முடிந்தாலும் முடிகிறதில்லை. இவ்விதமான ஆசையானது அந்த ஆவியை உள்ளே பிடித்து அது முழுவதும் உலர்ந்துபோம்படி செய்ய, நீ செய்த வேலைகளையும் குணங்களையும் எனக்குக் காட்டி என் மனது உன்னிடம் எப்போதும் படிந்திருக்கும்படி செய்திருக்கிறாய். நான் இப்படி இனிமேல் வருத்தப்படாமல் இருக்கும்படி என்னை ஒருபோதும் விடாதிருக்கவேண்டும். வேலைகளாவன- கேசியின் வாயைப் பிளந்ததும், இரட்டை அர்ஜுநமரங்களைக்கீழே தள்ளினதும், உலகை அளந்ததும். குணமாவது- உலகத்துக்குப் பலவிதமான உபகாரங்களைச் செய்திருந்தபோதிலும், அவைகளை புதிதாகச்செய்கிறவன்போல் அதை அடிக்கடி உண்டுபண்ணி ரக்ஷிப்பது. இந்த விஷயத்தில் உனக்குக் கிழத்தனமில்லை.

குறிப்பு— இப்படி எம்பெருமான் தோன்ற, ஆழ்வார் அவனை வேண்டுகிறாரென்பது 'முதல்வா' என்று கூப்பிடுவதாலும், 'சோரேலே' என்பதாலும் ஏற்படுகிறது.

இ—ம். உன்பால்- பால் என்பது ஏழாம் வேற்றுமையுருபு. சோரேல் - எதிர்மறை வினைமுற்று. ஏ-தேற்றம். (10)

---

சோராத வெப்பொருட்கு மாதியாஞ் சோதிக்கே
யாராத காதற் குருகூர்ச் சடகோப
ஞேராயிரஞ் சொன்ன வவற்று ளிவைபத்துஞ்
சோரார் விடார்கண்டீர் வைகுந்தந் திண்ணனவே. (கக)

(ப-ரை) சோராத எ பொருட்கும் ஆதி ஆம் சோதிக்கு - ஒரு வஸ்துவும் விடாத எல்லா வஸ்துக்களுக்கும் காரணமாய் பரம் ஜ்யோதிஸ் (மிகவுமுயர்ந்த ஜ்யோதிஸ்) என்று சொல்லப்படுகிற எம்பெருமான் விஷயத்தில், ஆராத காதல் - ஒருபோதும் திருப்தி வாராதபடியான பக்தியையுடைய, குருகூர் சடகோபன், ஓர் ஆயிரம் சொன்ன-விலக்ஷணமாய் ஆயிரமாகச்சொன்ன, அவற்றுள் - அந்தப் பாட்டுக்களுக்குள்ளே, இவை பத்தும் சோரார் - இந்தப் பத்துப்பாட்டுக்களையும் விடாதே படிக்கிறவர்கள், வைகுந்தம் விடார் - வைகுந்தத்தை விடமாட்டார்கள்

(எம்பெருமானை விட்டுப் பிரியமாட்டார்கள்), திண்ணனவே - இது நிச்சயமே.

(கருத்து) இப்படி ஸர்வேசுவரனுயிருக்கிற எம்பெருமானிடத்திலுள்ள அளவில்லாத ஆசையாலே ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரத்துக்குள் இந்தப்பத்துப் பாட்டுக்களையும் விடாது படிக்கிறவர்கள் எம்பெருமானை விட்டுப் பிரியமாட்டார்கள். இது உண்மை.

குறிப்பு— (1) இப்படி ஆழ்வார் எம்பெருமானைவிட்டுப் பிரிந்த துக்கத்தாலே முடிவை அடையும்படியிருக்கும்போது, எம்பெருமான் வந்து தோன்றினன் என்றும், ஆழ்வார் அவனைப் பார்த்துப் பிழைத்தாரென்றும், தம்மைப் பிழைப்பித்ததாலே அவன் ஸர்வேசுவரனுயிருப்பதற்குக் குறைவு வருமோவென்கிற ஸந்தேஹம் போய்விட்டதென்றும், இதனுல் அவருக்குப் பிரீதி உண்டாயிற்றென்றும், அந்த பிரீதியினுல், அவன் ஸர்வேசுவரனுயிருப்பதற்குக் குறைவு வராதிருக்கும்படி நேர்ந்ததேயென்று சொல்லி, அதை அநுபவிக்கிருரென்றும் முதல் அடியால் தோன்றுகிறது.

(2) வைகுந்தமென்கிற சொல்லுக்கு எம்பெருமானென்றே பொருள். அதற்கு இடம் பொருளானுலும் ஏற்படுகிற அர்த்தத்தில் வித்தியாஸமில்லை.

இ—ம். விடார்-விடாதவர்கள், வினையால் அணையும் பெயர்; வினைமுற்று பெயர்ச்சொல்லாய் வந்திருக்கிறது. 'திண்ணன்' என்பது மகர னகரப்போலியாய் அகாச்சாரியை பெற்று நிச்சயப் பொருளைத் தந்தது.

---

𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌦𑍍𑌧𑍇 𑌸𑍍𑌵𑌕𑌙𑍍𑌗𑌾𑌨𑍍𑌤𑌰𑌜𑌨𑌨𑌘𑌟𑌾𑌟𑍋𑌪𑌸𑌂𑌕𑍍𑌷𑍋𑌭𑌕 𑌕𑍍𑌵𑌾𑌪𑌿 𑌦𑍇𑌶𑌂 𑌸𑍍𑌵𑌰𑌕𑌕𑍍𑌵𑌾𑌪𑌿 𑌵𑌿𑌦𑌾𑌰𑌣𑌾𑌃 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌸𑍇𑌨𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑍃𑌤𑍍𑌤𑌾𑌃 । 𑌵𑌿𑌤𑍍𑌤𑌾𑌕𑍍𑌷𑍇𑌪𑌾𑌦𑌿𑌸𑌂𑌶𑍀𑌕𑌰𑌣𑌤 𑌉𑌪𑌸𑌂𑌶𑍋𑌷𑌣𑌾𑌪𑌜𑍂𑌨𑌾𑌹𑍍𑌯𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌦𑌸𑍍𑌯𑌶𑍌𑌰𑍇𑌃 𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌰𑌹𑌦𑌶𑌾𑌦𑍁𑌃𑌸𑌹𑌕𑍍𑌵𑌂 𑌜𑌗𑌾𑌦 ॥

இந்தத் திருவாய்மொழியில் எம்பெருமானை ஒருக்ஷணம் விட்டுப்பிரிவதும் பொறுக்கமுடியாதது என்று காட்டி, அவன்

மிகவும் போக்கியமாயிருக்கிருன் என்பது சொல்லப்படுகிறது. பொறுக்கமுடியாததற்கு ஒன்பது அடையாளங்கள் காட்டப் படுகின்றன. (1) தூங்கமுடியாமை; (2) ஒன்றிலும் விருப்ப மில்லாமலிருப்பது; (3) எப்போதும் நெஞ்சு உருகி கதறுவது. (4) எப்போதும் தன்னை விட்டுப் பிரிந்தவனைத் தேடுவது; (5) நீராய் கரைந்துபோவது; (6) இளைத்து க்ஷீணிப்பது; (7) வேறு ஒன்றையும் நினைக்கமுடியாமை ; (8) பிரஜ்ஞையை இழப்பது ; (9) உடம்பு உலர்ந்துபோவது; (10) இப்படி ஒன்பது பாட்டுக் களாலே பிரிவினுலுண்டாகும் வருத்தத்தைச் சொல்லி, பத்தா வது பாட்டாலே எம்பெருமானுடைய குணங்களாலும் அவன் செய்த வேலைகளாலும் அவளிடம் மனதைப் போய் விழும்படி செய்யும் அவனுடைய போக்கியதை சொல்லப்படுகிறது.

---

## இரண்டாம் திருவாய்மொழி.

அவ:— கீழ்த் திருவாய்மொழியின் கடைசிப்பாட்டில் எம்பெருமான் ஸர்வேசுவரனுயிருப்பது சொல்லப்பட்டது. அது அவன் மனிதனுக அவதாரம் பண்ணும்போதும் இருக் கிறது என்று இந்த திருவாய்மொழியில் சொல்லப்படுகிறது. உயர்வற (1-1) என்கிற திருவாய்மொழியில் இந்த குணம் சொல் லப்பட்டபோதிலும்,மனித அவதாரத்திலும் அது இருப்பதைப் பார்த்து ஆழ்வார் அதிக பிரீதியை அடைந்து எல்லாரும் அதை அநுபவிக்கவேண்டுமென்று அதைப் புராணங்களில் சொன்ன காரணங்களைக் காட்டிச் சொல்லுகிறுர்—

(கலிவிருத்தம்)

திண்ணன் வீடு முதன்முழு துமா
யெண்ணின் மீதிய னெம்பெரு மான்
மண்ணும் விண்ணுமெல் லாமுட னுண்டநங்
கண்ணன்கண் ணல்ல தில்லையோர் கண்ணே. (க)

(ப-ரை) வீடுமுதல் முழுதும் ஆய் - மோக்ஷம் முதலான (எல்லா) புருஷார்த்தங்களையும் கொடுக்கிறவனுய், எண்ணில் மீதி யன் - நினைப்பதைக் காட்டிலும் மேலானவன்(உள்ளபடி நினைக்க

முடியாதவன்) எம்பெருமான் - என்னுடைய ஸ்வாமியாய், மண்ணும் விண்ணும் எல்லாம் உடன்உண்ட-பூமியையும் ஆகாசத்தையும் மற்ற எல்லா வஸ்துக்களையும் ஒரே காலத்தில் சாப்பிட்ட, நம் கண்ணன் - நம்முடைய கண்ணனே, கண்-நமக்கு வேண்டியதைச் செய்கிறவன், அல்லது அவனைத்தவிர, ஓர் கண் இல்லை-ஓர் நிர்வாஹகனில்லை. திண்ணன் - இது உண்மையே.

(கருத்து) நம்முடைய கண்ணன் மோக்ஷம் முதலான எல்லா புருஷார்த்தங்களையும் கொடுக்கிறவன்; அவனுடைய நல்ல குணங்களை மனதாலும் வாக்காலும் அளக்கமுடியாது; அவன் நமக்கு ஸ்வாமி; பிரளயகாலத்தில் மூன்று உலகங்களையும் தன் வயிற்றில் வைத்து ரக்ஷித்தவன்; அவனே நமக்கு ஈசுவரன், அவனைத்தவிர வேறொரு ஈசுவரனில்லை. இது நிச்சயம்.

குறிப்பு— (1) வீடுமுதல் முழுதுமாய் ஆயுர்வை க்ருதம் நெய்யே ஆயுஸ்ஸு என்பதுபோல இங்கு முழுவதுமாய் என்று சொல்லியிருக்கிறது. நெய்யைச் சாப்பிடுவதால் ஆயுஸ்ஸு வளரும். இது கட்டாயம் நேரிடுமென்று காண்பிப்பதற்காகக் காரணமான நெய்யையும் அதின் பலனான ஆயுஸ்ஸையும் ஒன்றாகச் சொல்லுகிறது உலகவழக்கம். அப்படியே இங்கேயும் புருஷார்த்தத்துக்குக் காரணமான எம்பெருமானையும் அவன் கொடுக்கிற புருஷார்த்தங்களையும் ஒன்றாகச் சொல்லியிருக்கிறது.

(2) இரண்டாவது அடியில் அளவில்லாத ஸ்வரூபத்தை உடையவன் என்று அர்த்தம் சொன்னால், காலத்தின் ஸ்வரூபமும் அளவிடமுடியாமலிருப்பதால், எம்பெருமானுக்கு ஒரு விசேஷம் சொன்னதாக ஆகாது. அதற்காக அளவில்லாத குணங்களை உடையவன் என்று அர்த்தம் சொல்லவேண்டும்.

இ—ம். கண் என்கிற சொல் ஆகுபெயராய்க் கண்ணைப் போல நிர்வாஹம் செய்கிறவனைச் சொல்லுகிறது. கடைசியில் ஏகாரத்திற்கு தேற்றப் பொருள் சொன்னது நிச்சயம் என்று கருத்து. எண்ணில்-இல் ஐந்தாம் வேற்றுமை உருபு. (1)

---

அவ:— சில புராணங்களில் ருத்திரனை ஸர்வேசுவரனென்று சொல்லியிருப்பதால் கீழ்ப்பாட்டில் சொன்னது உண்மையோ என்று உண்டாகும் ஸந்தேஹம் இதில் தீர்க்கப்படுகிறது—

ஏபா வம்பர மேயே ழுலகு
மீபா வஞ்செய் தருளா லளிப்பாரார்
மாபா வம்விட வரற்குப் பிச்சைபெய்
கோபால கோளரி யேறன் றியே. (௨)

(ப-ரை) மா பாவம் விட-பெரிய பாபம்விடும்படி, அரற்கு-ருத்திரனுக்கு, பிச்சை பெய் - பிச்சையைக் கொடுத்தவனை, கோபால கோள் அரி ஏறு அன்றியே - கோபர்களுக்குள்ளே பலமுள்ள சிங்க சிரேஷ்டம்போலே இருந்த எம்பெருமானைத் தவிர ஏழு உலகும் - ஏழுஉலகங்களையும் ஈபாவம் செய்து - நாசம் பண்ணப்பட்ட பாபங்களை உடையவைகளாய் பண்ணி, அருளால் - கருணையால், அளிப்பார் ஆர் - ரக்ஷிக்கிறவன் யார். ஏ பாவம் - பாபமே! பரமே - இந்த பாரத்தை நான் சுமக்கும்படியாய் வந்ததே!

(கருத்து) ஏழு உலகங்களையும் அவைகளின் பாபங்களைப் போக்கி, ரக்ஷிக்கிறவன் எம்பெருமானைத்தவிர வேறு யார்? எவர் தான் ரக்ஷிக்கச் சக்தியுள்ளவர்? தன் தகப்பனை பிரம்மாவின் தலையைக்கிள்ளின ருத்திரனுடைய மஹாபாபம் போகும்படி அவனுக்குப் பிச்சை கொடுத்தவன் யார்? அவன் ஸ்ரீ கிருஷ்ணனாய் அவதரித்த எம்பெருமானல்லவா? இந்த விஷயத்தைச்சொல்ல வேணுமோ? எம்பெருமானுடைய குணங்களை அநுபவித்துக் கொண்டிருக்கிற எனக்கு இந்த வேலையைச் செய்யும்படி நேர்ந்ததே!

குறிப்பு— (1) எம்பெருமானுக்கும் ருத்திரனுக்கும் வாசி உண்டென்பது ரத்நத்துக்கும் உலர்ந்த சாணிக்கும் வாசியுண்டு என்று சொல்வதுபோல் இருக்கிறது.

(2) இந்த விஷயம் ஸாத்துவிகமான விஷ்ணுபுராணத்தில் சொல்லியிருப்பதால், அதற்கு விரோதமான சைவபுராணங்களில் கௌரவம் செய்யக்கூடாது என்று கருத்து.

(3) ருத்திரனுக்கு உண்டான ஆபத்தை எம்பெருமானே தீர்க்கவேண்டியதாயிருந்ததாலே, ருத்திரன் ஸர்வேசுவரனன்று.

இ—ம். ஈ பாவம் என்பது அன்மொழித்தொகை. அதின் பொருள்-நாசம் பண்ணப்பட்ட பாபங்களையுடையவைகள் என்று. ஈபாவம் செய்து என்பதினால் பாபங்களைப் போக்கி என்று ஏற்படுகிறது.

ஏறனைப் பூவனைப் பூமக டன்னை
வேறின்றி விண்டொழத் தன்னுள் வைத்து
மேறன்னை மீதிட நிமிர்ந்து மண்கொண்ட
மாறனின் மிக்குமோர் தேவு முளதே. (ரு)

(ப-ரை) ஏறனை - காளைமாட்டை வாஹநமாகவுடைய ருத்திரனையும், பூவனை - பூவில் (நாபீகமலத்தில்) உண்டான பிரமனையும், பூமகள் தன்னை - தாமரைப்பூவில் அவதரித்த பிராட்டியையும், விண் தொழ-நித்தியஸூரிகள் ஸேவிக்கும்படி, வேறு இன்றியே -பேதமில்லாமல், தன் உள் வைத்து - தன் திருமேனியில் வைத்துக்கொண்டு, மேல் தன்னை மீதிட-பூமிக்கு மேலேயிருக்கிற உலகங்களுக்கு மேலே போகும்படி, நிமிர்ந்து - வளர்ந்து, மண் கொண்ட - (மஹாபலியினிடமிருந்து) பூமியை எடுத்துக்கொண்ட, மால் தன்னில் - ஸர்வேசுவரனைக் காட்டிலும்,மிக்கும் ஓர் தேவும் உளது ஏ - மேற்பட்ட ஒரு தைவம் உண்டோ ?

(கருத்து) எம்பெருமான், நித்தியஸூரிகள் தன்னுடைய ஸௌசீல்யத்தைப் பார்த்து ஸேவிப்பதற்காக, ஸர்வேசுவரியான பிராட்டியைத் தன் திருமேனியில்(திருமார்பில்)வைத்துக்கொண்டிருப்பதுபோல் மிகவும் தாழ்ந்த பிரம்மாவை நாபியிலும், ருத்திரனை இடது பக்கத்திலும் வைத்துக்கொண்டிருக்கிறான். எல்லா உலகங்களும் திருவடிகளுக்குள்ளே அடங்கும்படி தன் திருவடிகளால் அவைகளை அளந்தான். இந்த இரண்டு காரணங்களாலே அவனே ஸர்வேசுவரன்; வேறு ஒருவனுமில்லை.

இ—ம். விண் என்பது ஆகுபெயராய் விண்ணில்-வைகுந்தத்தில் இருக்கிறவர்களைச் சொல்லுகிறது. கடையிலிருக்கும் ஏகாரத்துக்கு எதிர்மறைப்பொருள்;இல்லை என்று கருத்து. மால் தன்னில் - இல் ஐந்தாம் வேற்றுமை உருபு; மாலைக் காட்டிலும் என்று பொருள். தன் என்பதற்கு தனியாகப்பொருள் இல்லை. இப்படியே மேலும் கண்டு கொள்வது. (3)

---

அவ:— முன் பாட்டில் எம்பெருமானே ஸர்வேசுவரன் என்று சொல்லப்பட்டது. இதில் அவனைத் தவிர வேறு அழகு உள்ளவன் இல்லை என்று சொல்லப்படுகிறது—

தேவு மெப்பொ ருளும் படைக்கப்
பூவி னான்மு கனைப்ப டைத்த
தேவ னெம்பெரு மானுக் கல்லாற்
பூவும் பூச னையுந் தகுமே. (ச)

(ப-ரை) தேவும் - தேவஜாதிகளையும், எ பொருளும் - எல்லா வஸ்துக்களையும், படைக்க - உண்டுபண்ண, பூவில் - தன்னுடைய நாபீகமலத்தில், நான்முகனை படைத்த - பிரம்மாவை உண்டுபண்ணின, தேவன் - அழகால் விளங்குகிற, எம்பெருமானுக்கு அல்லால் - எம்பெருமானைத் தவிர (மற்றொருவர்க்கு), பூவும் - புஷ்பங்களும், பூசனையும் - பூஜை செய்வதும், தகும் ஏ- தகுமோ ?

(கருத்து) பிரம்மா முதலான எல்லா வஸ்துக்களையும் உண்டுபண்ணி விளையாடுகிற எம்பெருமான், தன்னுடைய ஸௌந்தரியமென்கிற குணத்தை எனக்குக் காட்டி, எனக்கு ஸ்வாமியாயிருக்கிறான். அவனைத் தவிர வேறு எவனுக்கு புஷ்பங்களும் பூஜையும் தகும்? மிகுந்த அழகுள்ளவனாகையால் எம்பெருமானே புஷ்பத்துக்குத் தகுந்தவன்; ஸர்வேசுவரனானதால் அவனே பூஜைக்குத் தகுந்தவன்.

குறிப்பு:— புஷ்பமும் பூஜையும் வேறு ஒருவனுக்கும் தகாதவைகள் என்று சொன்னதினால் அவன் அழகனும் அல்ல, ஸர்வேசுவரனும் அல்ல என்று ஏற்படுகிறது. ஆகையால் எம்பெருமானே ஸர்வேசுவரன்.

(2) எம்பெருமான் பிரம்மாவை உண்டு பண்ணினான்; பிரம்மா விபஷ்டி உலகங்களையும் அவைகளிலுள்ள தேவர்கள் முதலான நாலு ஜாதிகளையும் உண்டு பண்ணினான். இதையும் எம்பெருமானே அவனுக்கு ஆத்மாவாய் இருந்து செய்தான்.

இ—ம். கடைசியில் ஏகாரத்திற்கு எதிர்மறைப் பொருள்; தகாது என்று கருத்து. தேவன்-வடமொழிச்சொல்; விளங்குகிறவன் என்று பொருள். இங்கு அழகால் விளங்குகிறவன் என்று கருத்து. (4)

---

அவ:— இதில் எம்பெருமானுடைய அழகைக் கொண்டாடுகிறார் —

தகுஞ்சீர்த் தன்றனி முதலி னுள்ளே
மிகுந்தேவு மெப்பொ ருளும் படைக்கத்
தகுங்கோலத் தாமரைக் கண்ண னெம்மான்
மிகுஞ்சோ திமே லறிவார் யவரே. (ரு)

(ப-ரை) தகும் சீர் - (தன்னுடைய ஸ்வரூபத்துக்குத்) தகுந்த கலியாணகுணங்களை உடையவனும், தன் தனிமுதலின் உள்ளே - தன்னுடைய ஒப்பில்லாத காரணமான ஸங்கல்பத்தினாலே, மிகும் தேவும் - (ஈசுவரனென்று ஸந்தேஹப்படும்படி) உயர்ந்திருக்கிற(பிரம்மா முதலான) தேவஜாதிகளையும், எ பொருளும் - எல்லா வஸ்துக்களையும், படைக்க தகும் - உண்டுபண்ணத் தகுந்தவனும், கோலம் தாமரை கண்ணன் - அழகான தாமரை இதழ்போன்ற திருக்கண்களையுடையவனுமான, எம்மான் - என் ஸ்வாமியினுடைய, மிகும் சோதி - மிகுந்த தேஜஸ் நிறைந்த திருமேனியின், மேல்-மேலிருக்கும் (அழகை,) யவர் அறிவார் - எவர் (இவ்வளவு) என்று அறிவார்?

(கருத்து) தன்னுடைய ஸ்வரூபத்துக்குத் தகுந்த குணங்களையுடையவனாய், தன் ஸங்கல்பத்தினாலேயே எல்லா உலகங்களையும் உண்டுபண்ணுகிறவனாய், தான் ஸர்வேசுவரனாயிருப்பதற்குத் தகுந்த கண்ணழகையுடையவனாய் இருக்கிற எம்பெருமானுடைய திருமேனியின் அழகை ஒருவன் இவ்வளவுதானென்று நினைக்கமுடியுமோ ?

இ—ம். சோதி என்கிற சொல் ஆகுபெயராய் அதை உடைய திருமேனியைச் சொல்லுகிறது. (5)

---

அவ:— ஆச்ரிதர்களை ரக்ஷிப்பதற்காக திருப்பாற்கடலில் எம்பெருமான் பள்ளிகொண்டிருப்பதை ஆழ்வார் இதில் அநுபவிக்கிறார்—

யவரும் யாவையு மெல்லாப் பொருளுங்
கவர்வின்றித் தன்னு ளொடுங்க நின்ற
பவர்கொண் ஞான வெள்ளச் சுடர்மூர்த்தி
யவரெம் மாழியம் பள்ளி யாரே. (சு)

(ப-ரை) யவரும் - எல்லா சேதநர்களும், யாவையும்-எல்லா அசேதநங்களும் எல்லா பொருளும் - இவைகளாகிய எல்லா

வஸ்துக்களும், கவர்வு இன்றி-ஒன்றோடொன்று நெருங்கி வருத்தப்படாமல், தன்னுள் - தன் ஸ்வரூபத்தின் ஒரு மூலேயிலே, ஒடுங்க நின்ற - இருக்கும்படி இருந்தவர், பவர் கொள் - விஸ்தாரத்தைக் கொண்டிருக்கிற (விஸ்தாரமான), ஞானம் வெள்ளம் சுடர் மூர்த்தி - ஞானபிரவாஹத்தை பிரபையாக உடையவர், எம் ஆழி அம் பள்ளியார்-நமக்காக திருப்பாற்கடலே தனக்கு அழகான படுக்கையாக உடையவர் (இப்படிப்பட்ட) அவர் ஏ - அந்த ஸ்ரீ கிருஷ்ணனே, மூர்த்தி - ஸ்வாமி, ஸர்வேசுவரன்.

(கருத்து) பிரளயகாலத்தில் எல்லாவற்றையும் ஒன்றோடொன்று நெருங்கி வருத்தப்படாமல் தன் ஸ்வரூபத்தில் ஒரு மூலேயில் வைத்துக்கொண்டவனாய், ஸ்வபாவமாகவே எல்லாவற்றையும் அறிவதற்கு ஸாதநமான ஜ்ஞாநம் என்கிற குணத்தை உடையவனாய் ஆச்ரிதர்கள் தன்னிடம் வரும்படி திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கிறவனாய் இருக்கிற கண்ணனே ஸர்வேசுவரன்.

இ—ம். கடைசி ஏகாரத்தை அவர் என்பதுடன் சேர்க்க வேண்டியது; அவரே என்று. அவரை மற்றவர்களிடமிருந்து பிரிப்பதாலே அதற்குப் பிரிநிலேப்பொருள். (6)

---

அவ:— எம்பெருமானுடைய ஆச்சரியமான வேலேகளே இதில் கொண்டாடுகிறார்—

பள்ளி யாலிலே யேழுலகுங் கொள்ளும்
வள்ளல் வல்வ யிற்றுப் பெருமா
னுள்ளு ளாரறி வார வன்றன்
கள்ள மாய மனக்க ருத்தே. (எ)

(ப-ரை) வல் வயிற்று - திருடமான தன்னுடைய வயிற்றிலே, ஏழு உலகும் - ஏழு உலகங்களேயும், கொள்ளும் - வைத்துக்கொண்டிருந்தவனாய், வள்ளல் - ஔதார்யத்தையுடையவனாய், பள்ளி ஆல் இலே - படுக்கையான ஒரு ஆலிலேயை உடையவனாய் இருந்த, பெருமான் அவன் தன் - ஸ்வாமியாகிய அந்த கிருஷ்ணனுடைய, உள்ளுள் - மிகவும் ஆழமான, கள்ளம் - ஒருவருக்கும் தெரியாததாயும், மாயம்-தெரிந்ததுவும் ஆச்சரியமாயும் இருந்த, மனம் கருத்து - மனதின் ஸங்கல்பத்தாலே செய்யப்பட்ட வேலேகளே, யார் அறிவார் - எவர் அறிவர் ?

(கருத்து) எல்லா உலகங்களையும் தூக்கும் சக்தியுள்ள தன் வயிற்றில் அவைகளை வைத்துக்கொண்டு தன் உதாரகுணத் தாலே அவைகளுக்கு வேண்டிய இடத்தைக்கொடுத்துக்கொண்டு பிரளயஸமுத்திரத்தில் ஒரு ஆலிலையில் படுத்துக்கொண்டிருந்த இந்த கிருஷ்ணனுடைய மனதாலே கருதப்பட்ட ஆச்சரியமான வேலைகளை யார் அறிவார்? அவைகளுக்கு முடிவு உண்டோ? முடிவு இல்லாமையினால் ஒருவரும் அறியமாட்டார்கள்.

குறிப்பு— ஆச்சரியமான என்பதற்கு, வேலைகள் அவன் ஸர்வேசுவரன் என்று காட்டும்படியானவைகள் என்று கருத்து.

இ—ம். பள்ளியாலிலை அன்மொழித் தொகை.

---

அவ:— ஸ்ருஷ்டியைப் பிரம்மாவும், ரக்ஷணத்தை விஷ்ணுவும் செய்வதாகப் புராணங்களில் சொல்லவில்லையா? அவைகளைக் கண்ணனே செய்கிறான் என்று எப்படிச் சொல்லக்கூடும் என்கிற ஸந்தேஹத்தை இதில் தீர்க்கிறார்—

கருத்திற் றேவு மெல்லாப் பொருளும்
வருத்தித்த மாயப் பிரானை யன்றியாரே
திருத்தித் திண்ணிலை மூவுலகுந் தம்மு
ளிருத்திக் காக்கு மியல்வி னரே. (அ)

(ப-ரை) கருத்தில்-தன் ஸங்கல்பத்தினாலே, தேவும்-தேவ ஜாதிகளையும், எல்லா பொருளும்-எல்லா வஸ்துக்களையும், வருத்தித்த-வரும்படிசெய்த (உண்டுபண்ணின) மாயப்பிரானை அன்றி-ஆச்சரியனான ஸர்வேசுவரனைத் தவிர, திண் நிலை-திடமான இருப்பை, திருத்தி - நன்றாகச் செய்து, மூவுலகும் - மூன்று உலகங்களையும், தம்முள் இருத்தி-தன் ஸங்கல்பத்திலே நிலையாயிருக்கும்படி செய்து, காக்கும் இயல்வினர் ஆர் - ரக்ஷிக்கும் ஸ்வபாவமுடையவர் யார்?

(கருத்து) பெற்ற தாயே பிள்ளையை ரக்ஷிக்கவேண்டியவள், அதுபோல எல்லா உலகங்களையும் உண்டுபண்ணின எம்பெருமானே அவைகளை ரக்ஷிக்கவேண்டியவன்; ஆகையால் உண்டு பண்ணுகிறவனும் ரக்ஷிக்கிறவனும் அவனே.

குறிப்பு— புராணங்களில் பிரம்மா வியஷ்டி ஸிருஷ்டியைச் செய்கிறுனென்று சொல்லுவதற்கு எம்பெருமானே பிரம்மாவுக்கு ஆத்மாவாயிருந்துகொண்டு அந்த வேலையைச் செய்கிருனென்று கருத்து. ஆகையால் புராணங்களுடன் விரோதம் இல்லை.

இ—ம். வருத்தித்து-வரும்படி செய்து, ௲து பிறவினை. அப்படியே 'திருத்தி, இருத்தி' என்பவைகளும். (அ)

அவ:— ஸம்ஹாரத்தையும் எம்பெருமானே செய்கிருன் என்று இதில் சொல்லப்படுகிறது—

காக்கு மியல்வினன் கண்ண பெருமான்
சேர்க்கை செய்துதன் னுந்தி யுள்ளே
வாய்த்த திசைமுக னிந்திரன் வானவ
ராக்கினுன் றெய்வ வுலகு களே. (௯)

(ப-ரை) காக்கும் இடல்வினன் - ரக்ஷிக்கும் ஸ்வபாவனுன, கண்ண பெருமான் - கண்ணனுகிய ஸ்வாமி, சேர்க்கைசெய்து - (பிரளயகாலம் வந்தபோது உலகத்தை தன்னுடன் சேர்க்கையைச் செய்து,பிறகு ஸ்ருஷ்டிகாலம் வரும்போது),தன் உந்தியுள்ளே-தன் நாபியிலே, வாய்த்த திசைமுகன் - உண்டான பிரம்மாவையும், இந்திரன் வானவர் - இந்திரனையும் தேவர்களையும், தெய்வம் உலகுகள் - தேவர்களின் உலகுகளையும், ஆக்கினுன் - உண்டு பண்ணினுன்.

(கருத்து) ஸ்ரீ கிருஷ்ணனுகிய ஸ்வாமி உலகத்தை ரக்ஷிக்கும் ஸ்வபாவமுள்ளவன் ; அவனே பிரளயகாலத்தில் உலகத்தை ஸம்ஹாரம் செய்து ஸிருஷ்டிகாலத்தில் பிரம்மா முதலானவர்களை உண்டுபண்ணுகிறுன். ஸிருஷ்டி, ஸ்திதி, நாசம் என்கிற மூன்று வேலைகளையும் அவனே செய்கிறபடியாலே அவனே ஸர்வேசுவரன்.

இ—ம். திசைமுகன்-வேற்றுமைத்தொகை. திசைகளில்-திக்குகளில் முகங்களையுடையவன் என்று பொருள். அவனுக்கு ஒவ்வொரு திக்கிலும் ஒவ்வொரு முகம் இருக்கிறது. ஆக்கினுன் ஆகும்படி-உண்டாகும்படி செய்தான். பிறவினை. (9)

அவ:— எம்பெருமானே ஸர்வேசுவரன் என்பதற்கு பிரம்மா முதலானவர்களுடைய வாக்கியமே பிரமாணம் என்று இதில் சொல்லுகிறுர்—

கள்வா வெம்மையு மேழு லகுநின்
னுள்ளே தோற்றிய விறைவ வென்று
வெள்ளேற ஞன்முக னிந்திரன் வானவர்
புள்ளூர் திகழல் பணிந்தேத் துவரே. (ய)

(ப-ரை) வெள் ஏறன்-வெளுப்பான காளைமாட்டை வாஹந மாகவுடைய ருத்திரனும், நான்முகன் - பிரம்மாவும், இந்திரன் வானவர் - இந்திரனும் தேவர்களும், புள் ஊர்தி - பக்ஷியாகிய (பெரிய திருவடிமேலே ஏறிக்கொண்டு) ஸஞ்சாரம் பண்ணுகிற எம்பெருமானுடைய, கழல் - திருவடிகளை, பணிந்து - வணங்கி, "கள்வா - வஞ்சகனே! (தேவரீர் ஈசுவரனுயிருப்பதை மறைத்துக்கொண்டு எங்களை வஞ்சிக்கிறவனே), எம்மையும் - எங்களையும், ஏழு உலகும்-ஏழு உலகங்களையும், நின்னுள்ளே தோற்றிய - தேவரீருடையஸங்கல்பத்தினலேதோன்றும்படிசெய்த, இறைவ- ஈசுவரனே!" என்று ஏத்துவர் - என்று சொல்லி ஸ்தோத்ரம் செய்வர்கள்.

(கருத்து) பிரம்மா முதலானவர்கள், பக்ஷிராஜன்மேல் ஏறிக் கொண்டு ஸஞ்சாரம் செய்கிற எம்பெருமானுடைய திருவடிகளை வணங்கி, "ஸர்வேசுவரனுயிருப்பதை மறைத்துக்கொண்டு எங்களை வஞ்சனை செய்கிறவரே! தேவரீரே ஸங்கல்பத்தாலே எங்களையும், ஏழு உலகங்களையும் உண்டுபண்ணினீர்" என்று ஸ்தோத்ரம் செய்கிறுர்கள். இதுவே பிரமாணம்.

இ—ம். தோற்றிய பிறவினை. புள்ளூர்தி-புள்ளின்மேல் ஊருகிறவன் - போகிறவன். தொழிற்பெயர் விகுதி பெற்று இங்கே கர்த்தாவைச் சொல்லுகிறது. (கய)

---

ஏத்த வேழுலகுங் கொண்ட கோலக்
கூத்தனைக் குருகூர்ச் சடகோ பன்சொல்
வாய்த்த வாயிரத் துள்ளிவை பத்துட
னேத்த வல்லவர்க் கில்லையோ ருனமே. (கக)

(ப-ரை) ஏத்த - எல்லாரும் ஸ்தோத்ரம் பண்ண, ஏழு உலகும் கொண்ட - ஏழு உலகங்களையும் (திருவடியால் அளந்து தன்னதாய்) எடுத்துக்கொண்ட, கோலம் கூத்தனை - அழகான வேலைகளைச்செய்த எம்பெருமானை, குருகூர் சடகோபன் சொல், வாய்த்த - தானாய்(பிரயத்நம் செய்யாமல்உலகத்துக்கு) கிடைத்த, ஆயிரத்துள் - ஆயிரம் பாட்டுக்களுக்குள், இவை - இந்த பத்து பாட்டுக்களை, பத்து உடன் - பக்தியுடனே, ஏத்தவல்லவர்க்கு - ஸ்தோத்ரமாகச் சொல்லச் சக்தியுள்ளவர்களுக்கு, ஓர் ஊனம் இல்லை-(எம்பெருமானை விட்டுப்பிரிவதாகிய) ஒரு குறைவுமில்லை.

(கருத்து) எல்லா உலகங்களும் தன்னுடைய விஜபத்தைக் கொண்டாடும்படி ஏழு உலகங்களையும் எடுத்துக்கொண்ட எம்பெருமானே ஸர்வேசுவரன் என்று பிரமாணங்களைக் காட்டி, ஆழ்வார் சொன்ன இந்தப் பத்துப் பாட்டுக்களையும் பக்தியுடன் படிக்கிறவர்கள் ஒருநாளும் அவனை விட்டுப் பிரிவதில்லை.

இ—ம். பத்துடன் என்கிறவிடத்தில் பத்து என்பது பத்தி என்பதின் கடைக்குறை. (கக)

---

வஞ்செணெஸ்வய்வதாரம் ஹவக்ஷ்மிதஹாரம் வாசேந
ஸெ்வ ஊஹாஸம் நாஹீவக்ஷாத்வீஸ்வம் தக்ஷ நாமணக்ஷ்யஸம் கஷ்வ
தவீகார்யதாப்யேம் । ஸாத்வம் ந்யக்ரோதவத்ரு ஜகத்வ நயீயம்
ரக்ஷணாயாவதீர்ணம் ராக்ஷாதிஸத்வத்யஸ்ஸம் வ்யவ்யணாத ம
ஹிதோத்தாஜூஹாவேந நாயம் ॥

இந்தத் திருவாய்மொழியில் எம்பெருமான் மனிதனாக அவதரிக்கும்போதும் ஸர்வேசுவரனாகவே இருக்கிறான் என்று பத்துக் காரணங்களால் சொல்லப்படுகிறது. அவைகளாவன— (1) கேட்ட புருஷார்த்தத்தைக் கொடுப்பதாகிய ஐசுவரியத்துடன் அவதாரம் செய்வது; (2) ருத்திரனுடைய பாபத்தைப் போக்கினது; (3) வாமனனாய் அவதாரஞ்செய்து உலகம் நிறையும்படி பெரிய ரூபத்தையெடுத்துக்கொண்டது ; (4) தன்னுடைய நாபீகமலத்தில் உலகத்தை உண்டுபண்ணினது; (5) தான் ஸர்வேசுவரனாய் இருப்பதற்குத் தகுந்த கண்ணழகு உள்ளவனா

யிருந்தது; (6) பிரளயகாலத்தில் ஸமுத்திரத்தில் படுத்துக்கொண்டிருந்தது; (7) பிரளயகாலத்தில் ஆலிலையில் படுத்துக்கொண்டு இருந்தது; (8) தன் ஸங்கல்பத்தாலே உலகத்தை ரக்ஷிப்பது; (9) உலகத்தை ரக்ஷிப்பதற்காக அவதரிப்பது; (10) ருத்திரன் பிரம்மா முதலானவர்களாலே ஸ்தோத்திரம் பண்ணப்பட்ட லீலைகளை உடையவனாயிருப்பது.

---

## மூன்றாம் திருவாய்மொழி.

அவ:—இரண்டாம் பத்து முதல் திருவாய்மொழியில் 10-வது பாட்டில், எம்பெருமான் தம்மோடு சேர்ந்ததை ஆழ்வார் அருளிச்செய்தார். அந்தச் சேர்க்கையின் போக்கியதையை (இனியதாயிருப்பதை) இந்தத் திருவாய்மொழியில் சொல்லுகிறார். நடுவிலிருக்கும் திருவாய்மொழிக்கு இந்தத் திருவாய்மொழியோடு நேரே ஸம்பந்தம் இல்லை. முதல் திருவாய்மொழி கடைசிப் பாட்டில் ஸர்வேசுவரனாயிருப்பதைச் சொன்னதால், அடுத்த திருவாய்மொழியில் அதைக் கொண்டாடினார். அதை முடித்துவிட்டு, * பிரகிருதமான சேர்க்கையைப் பற்றி இந்தத் திருவாய்மொழியில் பேசுகிறார்—

(கலிவிருத்தம்)

ஊனில் வாழுயிரே நல்லைபோ வுன்னைப்பெற்று
வானுளார் பெருமான் மதுசூத னேன்னம்மான்
றானும் யானுமெல்லாந் தன்னுள்ளே கலந்தொழிந்தோந்
தேனும் பாலுநெய்யுங் கன்னலு மமுதுமொத்தே. (க)

(ப-ரை) ஊனில் வாழ் போ உயிரே-(மாம்ஸம் நிறைந்த)உடம்பில் ஸுகமாயிருக்கிற ஓ மனதே! நல்லை - நீ நல்லது, உன்னை பெற்று-உன்னை அடைந்து, வானுளார் பெருமான்-பரமபதத்திலிருக்கும் நித்தியஸூரிகளுக்கு ஸ்வாமியாய், மதுசூதன்-(ஆச்ரிதனான பிரம்மாவுக்காக) மது என்ற அஸுரனைக் கொன்றவனாயிருக்கிற, என் அம்மான் தானும் - என் ஸ்வாமியான தானும்,

---

* எதைப்பற்றி பேசப்படுகிறதோ, அது பிரகிருதம்.

நானும் - நானும், எல்லாம் - எல்லாவிதத்தாலும், கலந்தொழிந்தோம் - ஒருவருக்கொருவர் போக்கியராயிருக்கும்படி சேர்ந்துவிட்டோம். போக்கியதை எப்படி இருந்ததென்றால்— தேனும் பாலும் நெய்யும், கன்னலும் - கருப்பஞ்சாறும், அமுதும், ஒத்து, இவைகள் சேர்ந்தால் எவ்வளவு போக்கியமாயிருக்குமோ அப்படி போக்கியமாய் எங்கள் சேர்க்கை இருந்தது.

(கருத்து) ஆச்ரிதருடன் சேருவதொன்றையே போகமாக எண்ணுகிறவனும் அவர்களுடைய விரோதிகளை நாசம் பண்ணும் ஸ்வபாவமுள்ளவனும், எனக்கு ஸ்வாமியாயிருக்கிற எம்பெருமானும் தாஸனான நானும் எல்லாவிதத்தாலும் இந்த சேர்க்கையில் எல்லா ரஸங்களும் உண்டாகும்படி சேர்ந்துவிட்டோம். இந்த எம்பெருமானுடைய போகமானது பரமபதத்துக்குப் போனால்தான் கிடைக்கும். அது இங்கேயே இந்த உடம்போடே இருக்கும்போதே எனக்குக் கிடைத்தது. அதுக்குக் காரணம் நான் நல்லதான உன்னைப் பெற்றது (என்று இப்படி தம்முடைய மனதைக் கொண்டாடுகிறார்.)

குறிப்பு— (1) 'கலந்தொழிந்தோம்' என்பதற்கு சேரும் விஷயத்தில் சேரவேண்டிய அம்சம் ஒன்றுமில்லையென்னும்படி எல்லாவிதத்தாலும் சேர்ந்தோமென்று கருத்து.

(2) பாட்டில் 'எல்லாம்' என்பதற்கு இருவர்களுடைய ஸ்வரூபங்களும் உடம்புகளும் ஒன்றோடொன்று சேர்ந்தன என்றும், இருவருக்கும் ஒரே அபிப்பிராயமுண்டாயிருந்தது என்றும் கருத்து.

(3) இந்த சேர்க்கையில் தம் மனது பிரதாநமாயிருந்தபடியால் 'உயிர்' என்கிற சொல்லால் அதைக் கொண்டாடுகிறார்.

இ—ம். போ என்பது வடமொழியில் ஹொ; ஒருவனை இப்படிச் சொல்லிக் கூப்பிடுகிறது. ஊன் என்பது ஆகுபெயராய் ஊனையுடைய உடம்பைச் சொல்லுகிறது. உயிர் என்பது இங்கே மனது. நல்லை-குறிப்பு முன்னிலை வினைமுற்று; நல் + ஐ.

---

அவ:— இப்படி சேர்க்கைக்கு முக்கியமான காரணம் மனது என்று அதைக் கொண்டாடுகையில், அதைக் காட்டிலும்

முக்கியமான காரணமாயிருந்த எம்பெருமான் நினைவு ஆழ்வாருக்கு வந்தது அவன் தமக்குச் செய்த உபகாரங்களை அவனிடம் சொல்லி அவனை இதில் அநுபவிக்கிறார் —

ஒத்தார் மிக்காரை யிலையாய மாமாய
வொத்தா யெப்பொருட்கு முயிரா யென்னைப்பெற்ற
வத்தாயாய்த் தந்தையா யறியாதன வறிவித்த
வத்தாநீ செய்தன வடியே னறியேனே. (உ)

(ப-ரை) ஒத்தார் மிக்காரை இலையாய - (உனக்கு) ஸமமானவரும் உயர்ந்தவரும் இல்லாதவனான, மாமாய - மிகுந்த ஆச்சரியமானவனே! எ பொருட்கும் ஒத்து ஆய் - (அவதாரம் செய்யும்போது) எப்படிப்பட்ட வஸ்துக்களுக்கும் ஒத்தவனாய், (எல்லா பிராணிகளின் ரூபங்கள்போல் ரூபங்களை எடுத்துக்கொண்டவனாய்), உயிராய் - (எனக்கு) ஆத்மாவாய். என்னைப்பெற்ற-என்னை உண்டாக்கின, அ தாயாய் - உலகத்தில் பிரஸித்தமான தாயைப் போன்றவனாய், தந்தையாய்-தகப்பனைப் போன்றவனாய், அறியாதன அறிவித்த அத்தா-நான் அறியாதவைகளை ஆசாரியனாய் இருந்து அறிவித்தவனாய் இருக்கிறஆப்தனே, நீ செய்தன-நீசெய்த உபகாரங்களை, அடியேன் அறியேனே-(இத்தனைஎன்று) நான் அறியமாட்டேன்.

(கருத்து) உனக்கு ஸமமானவனும் உயர்ந்தவனும் இல்லை. நீ மிகவும் ஆச்சரியமானவன், இப்படியிருந்தும் ஆச்ரிதர்களின் ஜாதியில் பிறந்து அவர்களுக்கு ஸுலபனாயிருக்கிறாய். புத்தியுள்ள ஒருவன் தனக்கும், தாயும் தகப்பனும் தங்கள் குழந்தைக்கும், ஆசாரியன் சிஷ்யனுக்கும் செய்யும் உபகாரங்களை அடியேனுக்கு நீ செய்திருக்கிறாய். இவைகள் இத்தனையென்று என்னால் எண்ணமுடியுமோ ?

குறிப்பு — (1) 'ஒத்தாரை மிக்காரையிலையாய' என்பது போக்கியமாயிருக்கிற விஷயத்தில்.

(2) 'மாமாய' என்பதற்கு, எப்போதும் அநுபவித்தாலும் திகட்டாமல் ஒவ்வொரு க்ஷணத்திலும் புதிதுபுதிதுபோல் எம்பெருமானுடைய போகம் தோன்றுகிறது என்று கருத்து.

(3) முன் பாட்டில் எம்பெருமானிடத்தில் எல்லா ரஸங்களும் சேர்ந்திருக்கின்றன என்று சொன்னார். இதில் பிரியமான எல்லா ஜனங்களும் அவனிடம் சேர்ந்திருக்கின்றன என்று சொல்லுகிறார்.

(4) ஒருவன் தான் தனக்குச் செய்யும் நன்மையாவது-தாயும் தகப்பனும் ஆசாரியனும் தனக்கு ஹிதமாகச் சொன்னதைச் செய்கை. தாய் பிள்ளைக்குச் செய்யும் நன்மையாவது-உண்டுபண்ணினதும், போஷித்ததும், பிரியமானதைச் செய்கையும். தகப்பன் பிள்ளைக்குச் செய்யும் நன்மையாவது— உண்டு பண்ணினதும், ஹிதத்தைச் செய்கையும். ஆசாரியன் சிஷ்யனுக்குச் செய்த நன்மையாவது — மோக்ஷத்துக்கு வேண்டிய தத்துவங்களையும் உபாயங்களையும் புருஷார்த்தத்தையும் அறிவிப்பது. இவைகளையெல்லாம் அவரவர்களுக்கு ஆத்மாவாயிருந்து எம்பெருமான் செய்கிறான். அவன் நேரே செய்யும் நன்மையாவது— ஆசாரியன் சொல்லிக்கொடுத்தவைகளில் தெளிவான அறிவையும், தன்னிடத்தில் பக்தியையும், மற்றவைகளிடத்தில் ஆசையில்லாமையையும் உண்டுபண்ணுவது; மோக்ஷத்தையும் கொடுப்பது.

இ—ம். ஒத்தாய்—ஒத்தான் என்பதின் விளிவேற்றுமை. இலை - முன்னிலைக் குறிப்பு வினைமுற்று. 'என்னைப் பெற்ற' என்கிற சீரில் 'னை' என்பதில் ஐகாரத்திற்கு ஒரே மாத்திரை. ஆகையால் 'னைப்பெற்' ஒரே அசை.

---

அவ:— முன் பாட்டில் எம்பெருமான் செய்த உபகாரங்களைப் பொதுவாகச் சொல்லி, அவைகளில் மிகவும் ஸாரமானவைகளை இன்னவைகள் என்று விசேஷித்துஇதில்சொல்லுகிறார்-

அறியாக் காலத்துள்ளே யடிமைக்க ணன்புசெய்வித்
தறியா மாமாயத் தடியேனை வைத்தாயா
லறியாமைக் குறளாய் நிலமாவலி மூவடியேன்
றறியாமை வஞ்சித்தா யெனதாவி யுள்கலந்தே. (ரு)

(ப-ரை) அறியாமை - (ஒருவனும் உன்னை ஈசுவரனென்று) அறியாதபடி, குறளாய்-வாமனனாய், 'நிலம் மாவலி மூவடி' என்று-என்று சொல்லி, அறியாமை வஞ்சித்தாய் - (இவன் விஷ்ணு,

உன்னை வஞ்சிக்க வந்திருக்கிறுன் என்கிற அவன் ஆசாரியனுடைய வார்த்தை) அவன் நெஞ்சில் படாதபடி அவனை வஞ்சித்தவனே! எனது ஆவியுள் - என் மனதுக்குள்ளே, கலந்து - சேர்ந்து, அறியா மா மாயத்து-அறியவொட்டாத(ஜ்ஞாநமுண்டாகாதபடி செய்கிற)பெரிய பிரகிருதியில்(இருக்கிற) அடியேனை,அறியா காலத்துள்ளே-ஜ்ஞாநமுண்டாவதற்குத் தகுதியில்லாத காலத்தில், அடிமைக்கண் - உனக்குக் கைங்கரியம் செய்வதில், அன்பு செய்வித்து - ஆசையை உண்டுபண்ணி, வைத்தாய்.

(கருத்து) வாமநனுய் அவதாரஞ்செய்து மஹாபலியை வஞ்சித்தவனே! இந்தப் பிரகிருதியிலிருக்கிற அடியேனுக்கு ஜ்ஞாநமுண்டாவதற்குத் தகுதியில்லாத பால்யத்தில் உனக்குக் கைங்கரியம் செய்வதில் ஆசையை உண்டுபண்ணி அந்த ஆசை ஒரு நாளும் மாறுமல் இருக்கும்படி செய்தாய். இந்த உபகாரத்தின் பெருமையை உன்னுலும் அளக்கமுடியாது

குறிப்பு— 'நிலம் மாவலி மூவடி' என்று ஒரு குழந்தை போல் ஒன்றேடொன்று சேராத முடிவில்லாத வாக்கியத்தை எம்பெருமான் சொன்னுனென்று கருத்து.

இ—ம். அடிமைக்கண் — கண் ஏழாம் வேற்றுமை உருபு. அறியா - அறியாத; பெயரெச்சம். அறியாமை - அறியாமல்; எதிர்மறை வினையெச்சம். வலி என்பது வடமொழி பலி (பலி). ஆல் - அசைநிலை (3)

---

அவ:— எம்பெருமான் செய்த உபகாரத்தினுல் ஸந்தோஷமடைந்து, அதினுல் எல்லாம் அவனது என்கிற அறிவு உண்டாகாமல், இதற்குப்பதில் உபகாரமாக ஆழ்வார் தம்முடைய ஆத்மாவை அவனுக்குக் கொடுத்து, பிறகு தன் ஸ்வரூபத்தை அறிந்து, அது ஏற்கனவே அவனுடையது ஆயிற்றே என்று இதில் சொல்லுகிறுர்—

எனதாவி யுள்கலந்த பெருநல்லுத விக்கைம்மா
றெனதாவி தந்தொழிந்தே னினிமீள்வ தென்பதுண்டே
யெனதாவி யாவியுநீ பொழிலேழு முண்டவெந்தா
யெனதாவி யார்யானுர் தந்தநீகோண் டாக்கினையே. (ச)

(ப - ரை) எனது ஆவி உள் கலந்த - என் மனதில் நெருங்கிச் சேர்ந்த, பெரு நல் உதவி - பெரிய நல்ல உபகாரத்திற்கு, கைம்மாறு - பதில் உபகாரமாக, எனது ஆவி தந்தொழிந்தேன்- என்னுடைய ஆத்மாவை (என்னை உனக்கு)க் கொடுத்துவிட்டேன், இனி மீள்வது என்பது உண்டே - இனிமேல் அதைத் திரும்பி வாங்கிக்கொள்வது உண்டோ? பொழில் ஏழும் உண்ட எந்தாய் - பிரளயகாலத்தில் ஏழு உலகங்களையும் உண்ட என் ஸ்வாமியே! எனது ஆவி ஆவியும் நீ - என் ஆத்மாவுக்கு ஆத்மாவும் நீ, யான் ஆர் - (கொடுக்கிற) நான் யார்?, எனது ஆவி யார் - (கொடுக்கப்பட்ட) ஆத்மா யார்?, தந்த நீ-கொடுத்த நீ, கொண்டு - எடுத்துக்கொண்டு, ஆக்கினை - உன்னதாகச் செய்துகொண்டாய்.

(கருத்து) நீ என்னுடன் சேர்ந்து எனக்குச் செய்த பெரிய நல்லதான உபகாரத்துக்குப்பதிலாக அடியேனை உனக்குக் கொடுத்துவிட்டேன். அதை நீ திருப்பிக்கொடுத்தாலும் நான் வாங்கிக்கொள்ளமாட்டேன் (என்று சொல்லி, தன் ஸ்வரூபம் இன்னதென்று நினைவுக்கு வந்து மேலே சொல்லுகிறார்). ஏழு உலகங்களையும் பிரளயகாலத்தில் வயிற்றில் வைத்துக்கொண்டு ரக்ஷித்தவனே! நான் என்ன வேலை செய்தேன், ஆத்மாவைக் கொடுத்த நான் யார்? கொடுக்கப்பட்ட ஆத்மா யார்? இது ஏற்கனவே உன்னுடைய வஸ்து அல்லவா? அதைக் கொடுத்தது எப்படி பதில் உபகாரமாகும்? நீ நித்தியமான இச்சையாலே என்னை ஒரு வஸ்துவாகப் பண்ணினாய். அதை உனக்குக் கைங்கரியம் செய்வதற்காக எடுத்துக்கொண்டாய்.

குறிப்பு— (1) ஆழ்வாருக்கு எம்பெருமான் மயர்வற மதியைக் கொடுத்திருக்கிறான். ஆகையால் தன்னுடைய ஸ்வரூபத்தைத் தன்னதாக எண்ணக்கூடாது. ஆனபோதிலும் எம்பெருமானை அநுபவித்த அளவில்லாத பிரீதியினாலே இந்த விஷயம் ஆழ்வாருடைய நினைவுக்கு முதலிலே வரவில்லை.

(2) 'பெரு நல் உதவி' என்பதில் உதவி - உபகாரம். அதின் நன்மையாவது— பிரயோஜநத்தை எதிர்பாராமல் செய்வது. அதின் பெருமையாவது உபகாரம் செய்வதை தனக்குப் பிரயோஜநமாக நினைத்துச் செய்வது.

இ—ம். உண்டே என்பதில் ஏகாரத்துக்கு எதிர்மறைப் பொருள்; இல்லையென்று பொருள். ஆக்கினே - முன்னிலைப் பிற வினை வினைமுற்று. (4)

---

அவ:— எம்பெருமானைப் பஜநம் செய்கிறபொழுதே அவன் மிகவும் போக்கியமாயிருப்பதை ஆழ்வார் இதில் அநுபவிக்கிருர்—

இனியார் ஞானங்களா லெடுக்கலெழாத வெந்தாய்
கனிவார் வீட்டின்பமே யென்கடற் படாவமுதே
தனியேன் வாழ்முதலே பொழிலேழு மேனமொன்றாய்
நுனியார்கோட் டில்வைத்தாய் நுனபாதஞ் சேர்ந்தேனே. (ரு)

(ப-ரை) ஆர் ஜ்ஞாநங்களால் - (ஆச்ரயிக்காதவர்களுடைய) பூர்ணமான ஜ்ஞாநங்களாலே, எடுக்கல் எழாத - அறியமுடியாத, எந்தாய் - என் ஸ்வாமியே! கனிவார் - (உன்னிடத்தில் பக்தியாலே) நைகிறவர்களுக்கு, வீடு இன்பமே - (அவர்களிருக்கும் வீட்டிலே) வந்து போக்கியமாயிருக்கிறவனே, கடல் படா என் அமுதமே - திருப்பாற்கடலில் உண்டாகாத அமிருதமே! ஏனம் ஒன்றாய் - ஒரு வராஹமாய், பொழில் ஏழும் - ஏழு உலகங்களையும், நுனி ஆர் கோட்டில் - கூர்மை நிறைந்த (மிகவும் கூர்மையான தெத்துப்பல்லிலே, வைத்தாய் - வைத்து மேலே கொண்டுவந்தவனே, தனியேன் வாழ்முதலே - (என்னை ரக்ஷிக்கிறவனில்லாமல்) தனியாயிருந்த என்னுடைய வாழ்வுக்குக் காரணமானவனே! நுன பாதம் இனி சேர்ந்தேன் - உன்னுடைய திருவடியை மேலுள்ள காலமெல்லாம் சேர்ந்துவிட்டேன்.

(கருத்து) உன்னை ஆச்ரயிக்காதவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களானலும் அவர்களுடைய பூர்ணமான ஜ்ஞானத்தால் அறியமுடியாதவனே! உன்னிடத்திலேயே பக்தியுள்ளவர்களுக்கு அவர்கள் இருந்தவிடம் வந்து அவர்களுக்கு இன்பமாயிருக்கிறவனே! இவ்விதமான பக்தியில்லாத எனக்கும் பிரயாஸப்படாமல் கிடைத்த அமிருதம்போல் போக்கியமாயிருக்கிறவனே! கிருபையைத் தவிர வேறு ஒரு காரணமில்லாமல் வராஹாவதாரம் எடுத்துக் கொண்டு பூமியை மேலே கொண்டுவந்து அத்துடன் ஸமுத்திரத்தில் அழுந்திக்கிடந்த எல்லா ஆத்மாக்களையும் பிழைப்

பித்ததுபோல, வேறு கதியில்லாமலிருந்த எனக்கும் பிழைத்திருப்பதற்குக் காரணமானவனே ! உன்னுடைய திருவடிகளை விட்டு இனி ஒருநாளும் பிரியாதபடி சேர்ந்தேன்.

குறிப்பு— சேருகிறேன் என்று சொல்லாமல் சேர்ந்தேன் என்று போனகாலச் சொல்லுக்குக் கருத்து— இந்தச் சேர்க்கைக்கு ஒருபோதும் முடிவில்லை; இந்த விஷயத்தில் ஸந்தேஹமில்லை என்று.

இ—ம். படா -படாத; பெயரெச்சம். வைத்தாய் - வைத்தான் என்பதின் விளிவேற்றுமை. சேர்ந்தேனே ஏகாரத்திற்கு தேற்றப் பொருள்.

---

அவ:— எம்பெருமானை அநுபவிக்கிற ரஸத்தாலே அவனுடன் சேர்க்கை புதிதாய் உண்டானதை மறந்து, அது எப்போதும் இருந்ததென்று இதில் சொல்லுகிறார்—

சேர்ந்தார் தீவினைகட் கருநஞ்சைத் திண்மதியைத்
தீர்ந்தார் தம்மனத்துப் பிரியாத வவருயிரைச்
சோர்ந்தே புகல்கோடாச் சுடரை யரக்கியைமூக்
கீர்ந்தாயை யடியே னடைந்தேன் முதல்முன்னமே. (சு)

(ப-ரை) சேர்ந்தார் தீவினைகட்கு - தன்னை ஆச்ரயித்தவர்களுடைய கொடுமையான பாபங்களுக்கு, அரு நஞ்சை - (அவைகளால்) பொறுக்கமுடியாத விஷமாய் (அவைகளைப் போக்குகிறவனாய்), திண் மதியை - திடமான ஜ்ஞானத்தை அவர்களுக்குக் கொடுக்கிறவனாய், தீர்ந்தார்தம் மனத்து - (எம்பெருமானே ப்ராப்யமென்றும் அவனே அதற்கு உபாயமென்றும்) நிச்சயம் உள்ளவர்களுடைய மனதிலிருந்து, பிரியாத - (ஒரு காலமும்) விட்டுப்பிரியாதவனாய், அவர் உயிரை-அவர்களுடைய ஆத்மாவை, சோர்ந்து புகல்-புகுந்து சோர்வை (வருத்தப்படுவதை) கொடா - கொடுக்காத சுடரை-ஜ்யோதிஸ்ஸாய்,அரக்கியைமூக்குஈர்ந்தாயை-(சூர்ப்பணகையாகிய)ராக்ஷஸியின் மூக்கை அறுத்தவனாய்(ஆச்ரிதர்களுடைய விரோதிகளை நாசம் செய்கிறவனாய் இப்படியிருந்த எம்பெருமானை) அடியேன், முதல் முன்னமே-முன் காலத்துக்கு முன்னமே (அநாதிகாலமாக), அடைந்தேன் - அநுபவிக்கப் பெற்றேன்.

(கருத்து) ஆச்ரிதர்களுடைய ஜ்ஞாநத்துக்கு விரோதிகளான கொடுமையான பாபங்களைப் போக்கி, அவர்களுக்கு திடமான ஜ்ஞாநத்தைக் கொடுக்கிறவனை, இப்படி அவனுடைய அநுக்கிரஹத்தாலே நல்ல ஜ்ஞாநத்தை அடைந்தபடியால், அவனே ப்ராப்யனென்றும்,ப்ராப்திக்கு உபாயமென்றும் உறுதியாய் எண்ணுகிறவர்களுடைய மனதைவிட்டு ஒருபோதும் போகாதவனை, அவர்கள் ஸம்ஸாரத்தில் அகப்பட்டு வருத்தப்படாதபடிசெய்கிறவனை, ஆச்ரிதர்களுடைய விரோதிகளை நாசம் செய்கிற ஸ்வபாவமுள்ளவனை இருக்கிற எம்பெருமானை நான் இன்றைக்கா அநுபவிக்கிறேன். என் ஆத்மா இருந்த காலமெல்லாம் அவனை அநுபவித்துக்கொண்டிருக்கிறேன்.

குறிப்பு— ஏழையாயிருந்து புதிதாய் பணம் கிடைத்தவன் அந்த ஸந்தோஷத்தாலே முன் ஏழையாயிருந்ததை மறந்து எப்போதும் பணக்காரனாயிருந்ததாக எண்ணுகிறான். அது போல ஆழ்வாரும் எம்பெருமானை அநுபவிக்கிற ஸந்தோஷத்தாலே அவனை எப்போதும் அநுபவித்துக்கொண்டிருந்ததாக நினைக்கிறார்.

இ-ம். ஈர்ந்தாயை, தீர்ந்தார், வினையால் அணையும் பெயர்கள்.

---

அவ:— எம்பெருமானுடன் தமக்கு உண்டாயிருந்த சேர்க்கை ஒருவேளை முடிந்துவிடுமோ என்று பயந்து, தம்மை விடாதே என்று ஆழ்வார் அவனை இதில் ப்ரார்த்திக்கிறார்—

முன்னல்யாழ் பயினூ னரம்பின் முதிர்சுவையே
பன்னலார் பயிலும் பரனே பவித்திரனே
கன்னலே யமுதே கார்முகிலே யென்கண்ண
நின்னலா லிலேன்கா ணென்னைநீ குறிக்கோள்ளே. (எ)

(ப-ரை) முன் - வெகுநாளாயிருப்பதாயும் நல்-நல்லதாயும், யாழ் பயில் - வீணையின் விஷயமாக அடிக்கடி படிக்கப்படுகிறதாயும் இருக்கிற, நூல் - சாஸ்திரத்தில் சொன்ன, நரம்பின் - தந்தியினாலுண்டாகும், முதிர் சுவையே - மிகுந்த ரஸமே! பல் நலார் பயிலும் - பல ஜ்ஞாநிகளால் அடிக்கடி அநுபவிக்கப்பட்ட, பரனே-அளவிடமுடியாத ஆநந்தமாயிருப்பவனே! பவித்திரனே-பரிசுத்தியைச் செய்கிறவனே! கன்னலே - கருப்பஞ்சாறே,

அமுதே - அமிருதமே! கார் முகிலே - நீலமேகம் போன்றவனே! என் கண்ணா! நின்னலால் - உன்னை விட்டு, இலேன் காண் - வேறு(போக்கிய வஸ்து) இல்லாதவனாய் இருக்கிறேன்; நீ என்னை குறிக்கொள் - (உன்னை விட்டு நான் பிரியாதபடி) எண்ணத்தைக் கொள் (ஸங்கல்பத்தைச் செய்யவேண்டும்)

(கருத்து) வீணாகானத்தைப்போலே காதுக்கும், கருப்பஞ் சாறுபோல் நாக்குக்கும், அமிருதம்போல் குளிர்ந்தும் வாஸனை யுள்ளதாயும் த்வகிந்திரியத்துக்கும் மூக்குக்கும், நீலமேகம் போல் கண்ணுக்கும், ஆக இப்படி எல்லா இந்திரியங்களுக்கும் மனதுக்கும் போக்கியமாயும் ஜ்ஞானிகளால் எப்போதும் அநுப விக்கப்படுகிறவனாயும் அளவில்லாத ஆநந்தமாயும் அவர்கள் உன்னை அநுபவிப்பதற்கு விரோதியான பாபங்களைப் போக்குகிறவனா யுமிருக்கிற என் கண்ணனே! மேகம் தானாகவே எங்கும் பேய் வதுபோல் நிர்ஹேதுகமாய் உன்னை எனக்குக் கொடுத்திருக்கிறாய். உன்னைத் தவிர என்னை தரிக்கும்படியான போக்கியவஸ்து வேறு ஒன்றும் இல்லை. உன்னை விட்டு ஒருபோதும் நான் பிரியாதபடி ஸங்கல்பத்தைச் செய்யவேணும்.

குறிப்பு— (1) ஒரு வஸ்துவினிடத்தில் அதிக ஆசை யிருந்தால் அது ஒருவேளை தன்னை விட்டுப் போய்விடுமோ என்று ஸந்தேஹம் உலகத்தில் உண்டாகிறது. அதுபோல ஆழ்வார் எம்பெருமானிடத்தில் மிகுந்த ஆசையை வைத்தி ருந்ததால் எங்கே அவனை விட்டுப் பிரியும்படி நேரிடுமோ என்று பயப்படுகிறார். இதினால் எம்பெருமான் மிகவும் போக் கியன் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

இ—ம். இலேன்- தன்மை ஒருமைக் குறிப்பு வினைமுற்று.

---

அவ:— இப்படி ஆழ்வார் பிரார்த்திக்க, எம்பெருமான் நான் உம்மை விட்டுப் பிரிவேனோ என்று ஸந்தேஹப்பட என்ன காரணமிருக்கிறது என்று கேட்க, ஆழ்வாரும் ஸந்தேஹம் போனவராய், பக்தியோகம் செய்யாமலே கொஞ்சகாலத்திலேயே இவனுடைய அநுபவம் தமக்குக் கிடைத்ததே என்று தான் அடைந்த லாபத்தைச் சொல்லி, இதில் அவனை அநுபவிக்கிறார்—

குறிக்கொள்ஞா னங்களா லெனையூழி செய்தவமுங்
கிறிக்கொண் டிப்பிறப்பே சிலநாளி லெய்தினன்யா
னுறிக்கொண்ட வெண்ணெய்பா லொளித்துண்ணு மம்மான்பின்
னெறிக்கொண்ட நெஞ்சனாய்ப் பிறவித்துயர் கடிந்தே. (அ)

(ப-ரை) குறி கொள் - கவனத்தைக்கொண்ட(மிகுந்த ஜாக்கிரதையோடு செய்யவேண்டிய) ஜ்ஞாநங்களால் - ஜ்ஞாநரூபமான பக்தியோகங்களால், எனை ஊழி செய் தவமும் - வெகுகாலம் செய்து உண்டுபண்ணப்படும் (மோக்ஷமாகிய) தபஸ்ஸையும், கிறி கொண்டு - (அல்பமான) உபாயத்தைக் கொண்டு, இ பிறப்பே - இந்த ஜந்மத்திலேயே, சில நாளில் - கொஞ்சகாலத்தில், யான் எய்தினன் - நான் அடைந்தேன். (எப்படியிருந்து என்றால்), பிறவி துயர் கடிந்து - ஸம்ஸாரத்தில் உண்டாகும் துக்கங்களைப் போக்கி, உறி கொண்ட - உறியால் கொள்ளப்பட்ட (உறியில் வைக்கப்பட்ட) வெண்ணெய் பால் - வெண்ணெயையும் பாலையும், ஒளித்து உண்ணும் - (திருடி) ஒளித்துக்கொண்டு சாப்பிடும், அம்மான் - என் ஸ்வாமியினுடைய, பின் நெறி கொண்ட - பின் வழியைப்பற்றின (அவன் பின்னாலே போகும்படியான), நெஞ்சனாய் - மனதை உடையவனாய், (அடைந்தேன்).

(கருத்து) மிகவும் கஷ்டப்பட்டு அநேககாலம் செய்யவேண்டிய கர்மயோகத்தாலும் ஜ்ஞானயோகத்தாலும் உதவி செய்யப்பட்ட பக்தியோகத்தாலே கிடைக்கக்கூடிய எம்பெருமானுடைய அநுபவத்தை கொஞ்சமான பிரயத்நத்தாலே கொஞ்ச காலத்தில் இப்போதே ஸம்ஸார துக்கங்களைப் போக்கி கண்ணனாய் அவதாரம் செய்து உறியில் வைத்த வெண்ணெயையும் பாலையும் திருடி ஒருவருமறியாமல் மறைத்துச் சாப்பிட்ட அவனையே நினைத்துக்கொண்டிருக்கிற மனதுள்ளவனையடையப்போகிறேன்.

குறிப்பு— (1) பக்தியோகம் பலவிதமாயிருப்பதாலே 'ஜ்ஞானங்கள்' என்று பன்மைச்சொல்.

(2) 'ஊழி' என்பதற்குக் கல்பமென்று பொருள். வெகு காலம் அதைச் செய்யவேண்டியதென்று கருத்து.

(3) 'தவம்' என்கிற சொல் பக்தியோகத்தைச் சொல்லி, அதின் காரியமான மோக்ஷாநுபவத்தை இங்கே சொல்லுகிறது.

(4) எய்தினன் என்று போனகாலச் சொல்லாலே வெகு சீக்கிரத்தில் வரப்போகிற அநுபவம் சொல்லப்படுகிறது. (8)

---

அவ:— கீழ்ப்பாட்டில் வெகு சீக்கிரத்தில் அடையப் போகிற மோக்ஷாநுபவத்தைப் பேசினர்; இதில் இப்போது உண்டாயிருக்கிற அநுபவத்தைப் பேசுகிருர்—

கடிவார் தண்ணந்துழாய்க் கண்ணன்விண் ணவர்பெருமான்
படிவான மிறந்த பரமன் பவித்திரன்சீர்ச்
செடியார் நோய்கள்கெடப் படிந்து குடைந்தாடி
யடியேன் வாய்மடுத்துப் பருகிக் களித்தேனே. (௯)

(ப-ரை) கடி வார் தண் அம் துழாய் - தேனைப் பெருக்குகிற குளிர்ந்த அழகான திருத்துழாயை உடையவனுய், கண்ணன் - கிருஷ்ணனுக அவதரித்தவனுய், விண்ணவர் பெருமான் - நித்ய ஸூரிகளின் தலைவனுய், வானம் படி இறந்த - பரமபதத்திலும் தனக்கு ஒப்பானவன் இல்லாதவனுய், பரமன் - எல்லாருக்கும் மேற்பட்டவனுய், பவித்திரன் (ஆச்ரிதர்களின்) பாபங்களைப் போக்குகிறவனுய் இருக்கிற எம்பெருமானுடைய, சீர் - நல்ல குணங்களை, அடியேன் செடி ஆர் நோய்கள் கெட - தூறுகள் போல நிறைந்த(தாபங்களாகிய)வியாதிகள் போகும்படி, படிந்து-ஸமீபத்தில் வந்து, குடைந்து - (அவைகளெல்லாவற்றையும்) நினைத்து, ஆடி - அவைகளில் மூழ்கி, வாய்மடுத்து - வாயை வைத்து, பருகி - பானம் பண்ணி, களித்தேன் - ஆநந்தத்தை அடைந்தேன்.

(கருத்து) திருத்துழாய்மாலையைச் சாற்றிக்கொண்டு மிகவும் போக்கியனுய், நித்தியஸூரிகளுக்குத்தலைவனுய், பரமபதத்திலும் தனக்கு சமமானவனும் மேற்பட்டவனுமில்லாதவனுய் அதனுல் எல்லாருக்கும் மேற்பட்டவனுய் தன் அநுபவத்துக்கு விரோதியான ஆச்ரிதர்களுடைய பாபங்களைப் போக்குகிறவனுய் இருக்கிற எம்பெருமானுடைய நல்ல குணங்களாகிற அமிருத வெள்ளத்தில் என்னுடைய எல்லா தாபங்களும் போகும்படிகிட்டி எங்கும் புகுந்து மூழ்கி வாயாலே பாநம் பண்ணி ஆநந்தத்தை அடைந்தேன்.

குறிப்பு— "செடியார் நோய்கள்" என்பதால் 'வாயும் திரை' என்கிற முதல் திருவாய்மொழியில் ஆழ்வார் பட்ட தாபங்கள் சொல்லப்படுகின்றன. அவைகள் போகும்படி அவனை ஆழ்வார் அநுபவித்தார் என்று கருத்து. (9)

---

அவ:— இப்படி எம்பெருமானைத் தான் தனியாயிருந்து அநுபவித்தது போதாமல் நித்தியஸூரிகளுடன்கூட இருந்து அவனை அநுபவிப்பது எப்போது கிடைக்குமோ என்று இதில் ஆசைப்படுகிறார்—

களிப்புங் கவர்வுமற்றுப் பிறப்புப்பிணி மூப்பிறப்பற்
றொளிக்கொண்ட சோதியுமா யுடன்கூடு வதென்றுகொலோ
துளிக்கின்ற வானிந்நிலஞ் சுடராழி சங்கேந்தி
யளிக்கின்ற மாயப்பிரா னடியார்கள் குழாங்களையே. (ம)

(ப-ரை) களிப்பும் - (விஷயங்களாலுண்டாகும்) ஸுக மும், கவர்வும் - (அவைகள் கிடைக்காதபோது அவைகள் கிடைக்கவேண்டும் என்கிற) ஆசையும், அற்று - போய், பிறப்பு- பிறப்பும், பிணி - வியாதியும், மூப்பு - கிழத்தனமும், இறப்பு அற்று - சாவும் இல்லாமல், ஒளி கொண்ட - பிரகாசத்தைக் கொண்ட, சோதியும் ஆய்-காந்தியுள்ள உடம்பை உடையவனாய், துளிக்கின்ற-மழை பெய்கிற, வான் - ஆகாசத்தையும், இ நிலம் - இந்த பூமியையும், சுடர் ஆழி சங்கு ஏந்தி - பிரகாசமுள்ள திரு வாழியையும் திருச்சங்கையும் ஏந்திக்கொண்டு, அளிக்கின்ற - ரக்ஷிக்கிற, மாயப் பிரான் - ஆச்சரியமாயும் உபகாரம் செய்கிற வனாயுமிருக்கிற எம்பெருமானுக்கு, அடியார் குழாங்களை - கைங் கரியம் செய்துகொண்டிருக்கிற நித்தியஸூரிகளுடைய கூட்டங் களை, (அடியேன்) உடன் கூடுவது என்று கொல் ஓ - ஒரேவித மான அபிப்பிராயத்தையும் ஸந்தோஷத்தையுமுடையவனாய்ச் சேருவது எப்போதோ?

(கருத்து) எம்பெருமானுடைய குணாநுபவமாகிய அமிரு தத்தை ஒருவித பிரதிபந்தகமில்லாமல், அதற்குத் தகுந்த ஸாத னமுள்ளவனாய் எம்பெருமானுடைய குணாநுபவத்தையே போக மாக எண்ணி அநுபவிக்கிற நித்யஸூரிகளின் கூட்டங்களுடன் கூடி இருந்து அநுபவிப்பது எப்போதோ?

குறிப்பு— (1) இங்கே ப்ரதிபந்தகம் என்பது விஷயங்களின் லாபத்தாலே ஸந்தோஷமும், அவைகளில்லாவிட்டால் அவைகள் கிடைக்கவேணுமென்கிற ஆசையும், பிறப்பும், வியாதியும், கிழத்தனமும், சாவும்.

(2) அநுபவத்துக்குத் தகுந்த ஸாதநமாவது— சுத்த ஸத்துவம் என்கிற திரவியத்தாலே செய்யப்பட்ட உடம்பும், பூர்ணமாய் விரிவை அடைந்த ஜ்ஞாநமென்கிற குணமும். (10)

---

குழாங்கொள் பேரரக்கன் குலம்வீய முனிந்தவனைக்
குழாங்கொ டேன்குருகூர்ச் சடகோபன் றெறிந்துரைத்த
குழாங்கொ ளாயிரத்து ளிவைபத்து முடன்பாடிக்
குழாங்களா யடியீருடன் கூடிநின் றுடுமினே. (கக)

(ப-ரை) குழாம் கொள் - கூட்டத்தைக் கொண்டிருந்த (பிள்ளைகள் பந்துக்கள் முதலானவர்களுடன் கூடியிருந்த), பேர் அரக்கன் - பெரிய ராக்ஷஸனுன ராவணனுடைய, குலம் வீய - வம்சம் நசிக்கும்படி, முனிந்தவனை - கோபித்த ஸ்ரீராமனை, குழாம் கொள் தென்குருகூர் சடகோபன் - ஸ்ரீவைஷ்ணவக்கூட்டங்களைக் கொண்ட குருகூருக்குத்தலைவனுன ஆழ்வார், தெரிந்து உரைத்த - உள்ளபடி அறிந்து சொன்ன, குழாம் கொள் ஆயிரத்துள் - கூட்டத்தைக் கொண்ட ஆயிரம் பாட்டுக்களுக்குள், இவை பத்தும் - இந்தப் பத்துப் பாட்டுக்களை, அடியீர்-அடிகளையடைந்தவர்களே! (எம்பெருமான் திருவடிகளில் உங்களை ரக்ஷிக்கும் பதத்தைச் சேர்ப்பித்த ஸ்வாமிகளே!), குழாங்களாய்-கூட்டமாய் இருந்து, உடன் கூடி-ஒரே மனது உள்ளவர்களாய், உடன் பாடி- பக்தியுடன் பாடி, ஆடுமினே - ஆடுங்கள். (அநுபவியுங்கள்)

(கருத்து) பிள்ளைகளோடும் பந்துக்களோடும் கூடின ராவணன் மடியும்படி கோபித்த எம்பெருமானைப் பற்றிச் உள்ளபடியே அறிந்து சொல்லப்பட்ட இந்தப் பத்துப் பாட்டுக்களை ஓ பிரபந்நர்களே! கூட்டமாயிருந்து மனதை வேறொன்றில் போகவிடாமல் பக்தியுடன் பாடி அநுபவியுங்கள்.

குறிப்பு— (1) பேர் அரக்கன்-பிரம்மாவினிடம் தாம் பெற்ற வரன்களின் பலத்தாலும், தோள்களின் பலத்தாலும் மற்றவர்களால் ஜயிக்கமுடியாதவன் என்று கருத்து.

(2) குழாங்கொள் ஆயிரம்— பத்துப் பாட்டுக்கள் ஒரு திருவாய்மொழியாகவும், பத்துத் திருவாய்மொழிகள் ஒரு பத்தாகவும், பத்துப் பத்துக்கள் ஒரு பிரபந்தமாகவும் சேர்க்கப் பட்டவைகள் என்று கருத்து.

(3) உடன் கூடி - விஷயத்தின் அநுபவத்துக்காகவும், அதின் ஸாதநங்களை ஸம்பாதிப்பதற்காகவும் ஒருவரையொருவர் சீறு பாறு என்று சொல்லாமல் ஒரே மனது உள்ளவர்களாயிருந்து என்று கருத்து. (11)

---

ஸ்வாத்3வாஸ்வாதா3நுபூ4திம் ப்ரியக்ருதிவிஹிதப்ராஸ்ய
ஸாரஸ்யோபேதம் ஸ்வாத்மந்யாஸாநுக்ருத்யம் ஸஜ்ஜீவத்தாரஸம்
ஸக்தவித்3ருக்ஷோத்ஸ்ரஷ்ட்ய । ஸவபா4க்ஷ ப்ரீணநாஸ்வம் ஸவஜீ
வஹாஸமவேஸதமாஸ்வாத்3யஶீக்4ரம் ஸந்தேஹ்யஸாமந்யேஸ்யஸ்மரே
தம் நிரவிஶத3நவாஶேஷநிவேஶஶீலம் ॥

இந்தத் திருவாய்மொழியில் எம்பெருமானுடன் சேர்க்கையில் ரஸமுள்ள எல்லா பதார்த்தங்களினுடைய ரஸம் கூடியிருக்கிறது என்று பத்துக் காரணங்களால் சொல்லப்படுகிறது. அவைகளாவன— (1) அவன் அநுபவத்தில் ரஸமுள்ள எல்லா வஸ்துக்களின் ரஸம் சேர்ந்திருப்பது; (2) அவன் செய்த உபகாரங்களால் பிரீதிக்கு விஷயமாயிருப்பது; (3) அவன் கைங்கரியத்தில் ஆசையை உண்டுபண்ணினது; (4) நம் ஆத்மாவை பதில் உபகாரமாக அவனிடத்தில் கொடுக்கும்படியாகத் தூண்டும்படியான வேலைசெய்தது; (5) ஆச்ரயித்தவர்களுக்கு அமிருதம்போல் போக்கியமாயிருப்பது; (6) தன்னிடத்தில் பக்தியுள்ளவர்கள் மனதை விட்டுப் பிரியாதபடி அதையே போக்கியமாக எண்ணுவது; (7) எல்லா இந்திரியங்களுக்குப் பிரீதியைக் கொடுக்கத் தகுந்தவனாய் இருப்பது; (8) வெகுகாலம் மிகவும் வருத்தப்பட்டு கிடைக்கக்கூடிய பலனை வருத்தமில்லாமல் சீக்கிரம் கொடுக்கும்படியான ஸ்நேஹமுள்ளவனாய் இருப்பது; (9) மிகவும் அநுபவிக்கக்கூடிய நல்ல குணங்களை ஸ்வபாவமாய் உடையவனாயிருப்பது; (10) பரமபதத்தில் நித்தியஸூரிகளுடன் கூடியிருப்பது.

---

## நான்காம் திருவாய்மொழி.

அவ:— கீழ்த் திருவாய்மொழியின் கடைசியில் நித்தியஸூரிகளுடன் தானும் இருந்து எம்பெருமானை அநுபவிக்கவேண்டுமென்று ஆழ்வார் ஆசைப்பட்டார். அது உடனே கிடைக்காமையால் மிகுந்த வருத்தமுண்டாயிற்று. ஒரு க்ஷணங்கூட உயிரோடு இருக்கமுடியாத தசை வந்துவிட்டது. அப்போது எம்பெருமானைக்குறித்து அவசமாய் அவர் சிலபேச்சுக்களைச்சொல்லி சில வேலைகளைச் செய்தார்· அவைகளைப் பார்த்திருந்த அவரோடு ஸமமான வருத்தமுள்ள பந்துக்கள் அவைகளை எம்பெருமானிடம் விண்ணப்பம் செய்ததாக இந்த திருவாய்மொழி சொல்லுகிறது.

இது, நாயகனை விட்டுப் பிரிந்து வருத்தப்படுகிற ஒரு நாயகி பேசுகிற பேச்சுக்களையும், செய்கிற செய்கைகளையும் அவள் தாயார் நாயகனிடத்தில் சொல்லி, அவளுக்கு முடிவுவருவதற்குமுன்னால் சீக்கிரமாக வந்து அவளுடன் சேரவேணும் என்று சொல்லுவது போல் சொல்லப்படுகிறது. 'அஞ்சிறைய' (1—4) என்கிற திருவாய்மொழியில் ஆழ்வாருடைய வருத்தமானது பக்ஷிகளைத் தூது போகும்படி கேட்கவும், தன் வருத்தத்தைச் சொல்லவும் தகுந்ததாயிருந்தது. இப்போது வருத்தம் அதிகமாய் அந்த வேலைகளைச் செய்யமுடியாமலும், அவருடைய இருப்பை அயலார்கள் விண்ணப்பம் செய்யும்படியாயும் இருந்தது.

(வஞ்சிவிருத்தம்.)

ஆடியாடி யகங்க ரைந்திசை
பாடிப்பாடிக் கண்ணீர்மல்கி யெங்கு
நாடிநாடி நரசிங்கா வென்று
வாடிவாடு மிவ்வா ணுதலே. (க)

(ப-ரை) இவாள் நுதல் - காந்தியுள்ள நெற்றியோடு கூடிய இந்தப் பெண், அகம் கரைந்து - (பிரிவினால்) மனது உருகி, இசை பாடி பாடி - (உன்னுடைய குணங்களைச் சொல்லுகிற) பாட்டுக்களைப் பாடிப்பாடி, ஆடி ஆடி-நின்றவிடத்தில் நிற்கமுடியாமல் அங்குமிங்கும் போய்க்கொண்டு, கண்ணீர் மல்கி - கண்ணீர் அதிகமாகி, நாடி நாடி - (எம்பெருமான் எங்கே இருக்கிறு

னென்று) தேடித்தேடி, நரசிங்கா என்று - நரசிங்கனே என்று கூப்பிட்டு, வாடி வாடும் - மிகவும் வாடும்.

(கருத்து) எம்பெருமானே! உன்னை விட்டுப் பிரிந்தமையால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு ஆறுதலுண்டாவதற்காக உன்னுடைய குணங்களையும் நீ செய்த வேலைகளையும் பாடுகிறாள். இதனால் நினைத்தபடி ஆறுதலுண்டாகாமல் வருத்தம் அதிகப்பட்டு கண்ணீர் பெருகி நின்றவிடத்தில் நிற்கமுடியாமல் அங்குமிங்கும் அலைகிறாள். உன்னைப் பார்க்காமல் ஒரு க்ஷணங்கூட இருக்கமுடியாதவளாய் உன்னை அங்குமிங்கும் தேடுகிறாள். பக்தனான ப்ரஹ்லாதனுடைய வருத்தத்தைப் பார்த்து உடனே நரசிங்கனாய் வந்ததுபோல், தன்னிடத்திலும் நீ வருவாய் என்று எண்ணி, நரசிங்கா! என்று கூப்பிடுகிறாள். இவ்விதமாக மறுபடியும் உன்னைக் கண்டாலும் தேறாதபடி அவள் மிகவும் வாடியிருக்கிறாள்.

இ—ம். வாணுதல் - அன்மொழித்தொகை.

---

வாணுத லிம்மடவர லும்மைக்
காணுமாசை யுணேகின் றுள்விறல்
வாணனுயிரந் தோடுணித்தீ ரும்மைக்
காணநீ ரிரக்க மிலீரே. (உ)

(ப-ரை) வாள் நுதல் - காந்தியுள்ள நெற்றியுடைய, இ மடவரல் - இந்த இளம் பெண், உம்மை காணும் ஆசையுள் - உம்மைப் பார்க்கவேணுமென்கிற ஆசையால், நைகின்றுள்-தளர்ச்சியை அடைந்துகொண்டிருக்கிறாள், விறல் வாணன் - பராக்கிரமத்தையுடைய பாணன் என்கிற அஸுரனுடைய, ஆயிரம் தோள் துணித்தீர் - ஆயிரம் தோள்களை அறுத்தவரே! நீர், உம்மை காண, இரக்கம் இலீர் ஏ - கிருபை இல்லாதவராய் இருக்கிறீரே.

(கருத்து) இந்தப் பெண் புஷ்பம் போல் ம்ருதுவான ஸ்வபாவமுள்ளவள். உம்மைக் காணவேணுமென்கிற ஆசையாலே வருத்தப்படுகிறாள். அவள் விஷயத்தில் நீர் கிருபை செய்கிறதில்லை. கிருஷ்ணாவதாரத்தில் பாணாஸுரனுடைய தோள்களை அறுத்ததுபோல், விரோதிகளையன்றோ தேவரீர்

ஹிம்ஸை செய்யவேண்டியது. நீர் அநுகூலர்களுக்கு ஸுலபன் என்கிற பிரஸித்தி உண்டாயிருக்கிறதே. இவளோ உம்மிடத்தில் ஆசை உள்ளவளாயிருக்கிருள். இவளிடத்தில் ஸுலபனுய் இருக்கவேண்டிய நீர் விரோதிகளிடத்தில் போல இருப்பது தகுதியோ ?

இ—ம். ஆசையுள் - என்கிறவிடத்தில் ஏழாம் வேற்றுமை உருபான 'உள்' என்பதற்கு மூன்ரும் வேற்றுமைப் பொருள். இலீர் - இல்லாத நீர், குறிப்பு வினைமுற்று.

---

இரக்க மனத்தோ டெரியணை
யரக்கு மெழுகு மொக்குமிவ
ளிரக்கமெழீ ரிதற்கென் செய்கே
னரக்க னிலங்கை செற்றீருக்கே. (௩)

(ப-ரை) இவள், இரக்கம் - (துக்கத்தினல்) உருகுவதை உடைய, மனத்தோடு - மனதோடு, எரி அணை அரக்கு மெழுகும் ஒக்கும் - நெருப்போடு சேர்ந்த அரக்கைப் போலவும், மெழுகைப்போலவுமிருக்கிருள். இரக்கம் - இரக்கத்தை, எழீர்- எழும்படி செய்கிறீர் இல்லை, அரக்கன் இலங்கை செற்றீருக்கு- ராக்ஷஸனை ராவணனுடைய லங்கையை நாசம் செய்த உமக்கு, இதற்கு - இந்த விஷயத்தில், என் செய்கேன் - நான் என்ன செய்வேன்.

(கருத்து) உம்மை விட்டுப் பிரிந்த வருத்தமாகிய நெருப்பால் கொளுத்தப்பட்டவளாய் நெருப்பில் போட்ட அரக்கையும் மெழுகையும்போல் இவள் மனது உருகுகிறது. இப்படி இருந்தும் உமக்கு அவளிடத்தில் இரக்கம் வருகிறதில்லை. இரங்காத உமக்கு இரக்கமுண்டாக்குவேனே ? அவள் வருத்தத்தைப் போக்குவேனே? நான் என்ன செய்வேன்? நீர் லங்கையை நாசம் பண்ணினவரன்ருே ? உம்முடைய க்ரூரஸ்வபாவம் பிரஸித்தமன்ருே ?

இ—ம். இரக்கமனத்தோடு - இரக்கம் என்பது துக்கம். அதினல் உருகின என்று பொருள். இரக்கம் என்பது ஆகு பெயராய் அதினலுண்டான இருப்பைச் சொல்லுகிறது. எழீர் எதிர்மறை முன்னிலைவினைமுற்று. எழுகிறீரில்லை என்று பொருள்.

---

இலங்கை செற்றவனே யென்னும்பின்னும்
வலங்கொள் புள்ளுயர்த்தா யென்னுமுள்ள
மலங்கவெவ் வுயிர்க்குங் கண்ணீர்மிகக்
கலங்கிக் கைதொழு நின்றிவளே. (ச)

(ப-ரை) இலங்கை செற்றவனே, என்னும் - என்று சொல்லுகிறாள். பின்னும், வலம் கொள் புள் உயர்த்தாய் என்னும் பலமுள்ள கருடனுமேலே தூக்கப்பட்டவனே என்று சொல்லுகிறாள், உள்ளம் மலங்க - மனது கலங்கும்படி, வெவ்வுயிர்க்கும் - உஷ்ணமாக பெருமூச்சுவிடுகிறாள், கண்ணீர், மிக, கலங்கி, இவள், நின்று - எழுந்திருந்து நின்று, கைதொழும் - கைகூப்புவள்.

(கருத்து) நான் உம்முடைய க்ரூரஸ்வபாவத்தை நினைத்து, இலங்கை செற்றீர் என்றேன். இதைக் கேட்டு இவள் ஸீதையினிடத்தில் உமக்கு இருந்த ஆசையால் இலங்கையைக் கொளுத்தினதாக எண்ணி, உம்முடைய ஆசைப்படும் ஸ்வபாவத்தை நினைத்து, 'இலங்கை செற்றவனே' என்றும், பலமுள்ள பக்ஷிராஜன் மேல் ஏறிக்கொண்டு போகிறவனே! அப்படியேறிக்கொண்டு இங்கே தோன்றாய் என்றும் சொல்லுகிறாள். உடனே பக்ஷிராஜன் மேல் ஏறிக்கொண்டு நீர் வாராமையால் மனது கலங்கி உஷ்ணமான பெருமூச்சு விடுகிறாள். கண்ணீர் அதிகமாகப் பெருக்கிக்கொண்டு எழுந்திருந்து நின்று கையைக் கூப்புகிறாள். (4)

---

இவளிராப் பகல்வாய் வெரீஇத்தன
குவளையொண் கண்ணநீர் கொண்டாள்வண்டு
திவளுந்தண் ணந்துழாய் கொடீரேன
தவள வண்ணர் தகவுகளே. (ரு)

(ப-ரை) இவள், இராப்பகல், வெய்வெருவி - அவசமாய் பேசி, தன - தன்னுடைய குவளை - குவளைப்பூப்போலிருக்கிற, ஒண் - அழகான, கண்ணநீர் கொண்டாள் - கண்களில் நீரைக் கொண்டாள் (கண்களிலிருந்து நீரைப் பொழிகிறாள்.) வண்டு திவளும் - வண்டுகள் நிலையாயிருக்கும், தண் அம் துழாய் கொடீர் - குளிர்ந்த அழகான துளஸியை இவளுக்குக் கொடுக்கிறீர் இல்லை. தவள வண்ணர் - வெளுப்பான வர்ணமுள்ள(சுத்த ஸ்வபாவரான) உம்முடைய, தகவுகள் - கிருபைகள், என - என்ன?

(கருத்து) இவள் மற்றப் பெண்கள்போலன்று, ராத்திரியும் பகலும் முன் வாஸனையால் கீழ்ப்பாட்டில் சொன்னபடி அவசமாய் தேவரீரைக் கூப்பிடுகிருள். அவளுடைய கண்கள் குவளைப்பூவைப் போல் அழகாய் இருக்கிறவைகள். அவைகளில் ஆநந்தத்தால் கண்ணீர் பெருகுவது போய் வருத்தத்தால் கண்ணீரைப் பெருக்கும்படி ஆகியிருக்கிறதே. இப்படி இரக்கப் படும்படியான தசையையடைந்தபோதிலும், அவள் ஆசைப்படுகிற துளஸிமாலையை நீர் அவளுக்குக் கொடுக்கிறதே இல்லை. உம்மை சுத்தஸ்வபாவனென்றும் இரக்கமுள்ளவனென்றும் சொல்லுகிருர்களே, இதுதானு உம்முடைய இரக்கம்!

இ—ம். வாய்வெரீஇ - என்கிறவிடத்தில் ஈகாரம் அளபெடை. இங்கே அதற்கு மூன்று மாத்திரை. இதைக் காட்டுவதற்காக ரீக்குமேலே இகரம் சேர்த்திருக்கிறது. வினையெச்சம். கொடீர் - முன்னிலை எதிர்மறை வினைமுற்று. 'கண்ணநீர்'என்கிற விடத்தில் அகரச்சாரியை.

---

தகவுடை யவனேயென்னும் பின்னும்
மிகவிரும்பும் பிரானேன் னுமேன
தகவுயிர்க் கமுதே யென்னுமுள்ள
முகவுருகி நின்றுள் ளுளே. (சு)

(ப-ரை) தகவுடையவனே என்னும் - கிருபையையுடையவனே! என்று சொல்லுகிருள். பின்னும், மிக விரும்பும் - மிக ஆசைப்படும், உள்ளம் உக - மனது உருகும்படி, உருகி நின்று - தன் ஸ்வரூபம் உருகி, உள்ளுளே-மனதுக்குள்ளே, பிரான் என்னும் - உபகாரம் செய்கிறவனே என்று சொல்லுகிருள். எனது அக உயிர்க்கு அமுதே என்னும் - என்னுடைய அந்தராத்மாவுக்கு அமிருதமே என்று சொல்லுகிருள்.

(கருத்து) நான் தவளவண்ணர் தகவுகளே என்று சொன்னதைக் கேட்டு உம்முடைய கிருபையை நினைத்து 'தகவுடையவனே' என்று கூப்பிடுகிருள். மிகுந்த கிருபையுள்ள நீர் நம்மைக் கைவிடமாட்டீர் என்று நினைத்து மிகவும் ஆசைப்படுகிருள். உடனே நீர் வராமையாலே வருத்தப்பட்டு நெஞ்சு உருகும்படி உருகி நிற்கிருள். மற்றவர்கள் கேட்கும்படி சொல்ல சக்தியில்லா

மையாலே தன் மனதுக்குள்ளே பிரானே! என்றும், அமுதம் போல் போக்கியனே என்றும் சொல்லுகிருள். (6)

---

உள்ளுளாவி யுலர்ந்து லர்ந்தேன்
வள்ளலே கண்ணனே யென்னும்பின்னும்
வெள்ளநீர்க் கிடந்தா யென்னுமென
கள்விதான் பட்ட வஞ்சனையே. (எ)

(ப-ரை) உள் உள் - ஹிருதயத்திலிருக்கிற, ஆவி - ஆத்மாவானது, உலர்ந்து உலர்ந்து - மிகவும் உலர்ந்து, என் வள்ளலே - என்னுடைய உதார குணமுள்ளவனே!, கண்ணனே! என்னும், பின்னும், வெள்ளம் நீர் கிடந்தாய்-மிகுதியையுடைய நீரில் (ஸமுத்திரத்தில்) படுத்திருந்தவனே! என்னும், என கள்வி - என்னுடைய கெட்டிக்காரியான இவள், தான் பட்ட வஞ்சனை ஏ - தான் அவனாலே பட்ட வஞ்சனை ஆச்சர்யம்!

(கருத்து) இவள் எம்பெருமானைவிட்டுப் பிரிந்து வருத்தப்பட்டு, அதைப் பொறுக்கமாட்டாமல், தாஹம் எடுத்தவன் "தண்ணீர் தண்ணீர்" என்று சொல்லுகிறது போல, 'வள்ளலே கண்ணனே!' என்கிருள். மறுபடியும் 'வெள்ளநீர் கிடந்தாய்' என்று சொல்லுகிருள். அவனைக் கூட வசப்படுத்திக்கொள்ளுமழகையுடைய இவள் அவனுடைய குணங்களில் இப்படி அகப்பட்டிருக்கிருளே. இவள் படுகிறபாட்டை அவன் படவேண்டியவன். அப்படியிருக்க, அவனாலே இவள் இந்தப் பாட்டைப் படுவது ஆச்சரியம்.

குறிப்பு— கள்வி - திருடுகிறவள், இங்கே எவனுடைய மனதையும் இழுக்கும்படியான அழகையுடையவள் என்று அதற்குப் பொருள். (7)

---

வஞ்சனே யென்னுங் கைதொழுந்தன
நெஞ்சம்வேவ நெடிதுயிர்க் கும்விறற்
கஞ்சனை வஞ்சனைசெய்தீ ரும்மைத்
தஞ்ச மென்றிவள் பட்டனவே. (அ)

(ப-ரை) வஞ்சனே என்னும் - வஞ்சனை செய்கிறவனே என்று சொல்லுகிறாள், கை தொழும்-கையைக் கூப்பிக்கொண்டு நிற்கிறாள், தன் நெஞ்சம் வேவ - தன்னுடைய மனது வெந்து போகும்படி, நெடிது உயிர்க்கும் - பெருமூச்சு விடுகிறாள், விறல் கஞ்சனை வஞ்சனை செய்தீர் - பராக்கிரமமுள்ள கம்ஸனை வஞ்சனை செய்தவரே! உம்மை தஞ்சம் என்று - உம்மை ரக்ஷிக்கிறவனென்று நம்பி, அவள் பட்டன ஏ - இவள் பட்ட பாடுகளுக்குக் கணக்கில்லை.

(கருத்து) உன்னுடைய குணங்களில் என்னை அகப்படுத்தினவனே என்று சொல்லுகிறாள். மறுபடியும் தன் வாயால் ஒன்றும் சொல்லமுடியாமல் கைகளைக் கூப்புகிறாள். அப்போதே உம்மைக் காணுமையாலே தன் நெஞ்சு வெந்துபோகும்படி பெருமூச்சு விடுகிறாள். இவள் தன்னுடைய ஆபத்தில் ரக்ஷிக்கிறவனாக உம்மை நம்பியிருக்கிறாள். அப்படியிருக்க உமக்கு விரோதியான கம்ஸன் பட்ட பாட்டை இவள் படலாமா? (8)

---

பட்டபோ தெழுபோத றியாள்விரை
மட்டலர் தண்டுழா யென்னுஞ்சுடர்
வட்டவாய் நுதிநேமி யீர்நும
திட்டமென் கொலிவ்வே ழைக்கே. (௯)

(ப-ரை) சுடர் - தேஜஸ்ஸையுடையதாய், வட்டம் - வர்த்துளமாய், வாய் நுதி - நுனியில் கூர்மையையுடையதாயிருக்கிற, நேமியீர் - சக்கிரம் என்கிற ஆயுதத்தையுடையவரே!, பட்ட போது-அஸ்தமனகாலத்தையும், எழுபோது-ஸூரியன் உதயமாகும் காலத்தையும், அறியாள், விரைமட்டு அலர் தண் துழாய் - வாஸனையையும் தேனையுமுடைய மலர்ந்த குளிர்ந்த துளஸி, என்னும் - என்று சொல்லுகிறாள். இ ஏழைக்கு - (இப்படி உம்மிடத்தில் சபலமான) இந்தப் பெண் விஷயத்தில், நுமது இட்டம் என்கொல் - உம்முடைய இஷ்டம் என்ன?

(கருத்து) நீர் திருவாழியை ஏந்திக்கொண்டிருப்பது ஆச்ரிதரை ரக்ஷிப்பதற்காகவல்லவா? இவளோ உம்மோடு சேருவதில் இருக்கிற ஆசையினாலே ஸூரியன் அஸ்தமித்தான் என்றாவது உதயமானான் என்றாவது அறியமாட்டாள். வேறொன்றையும்

நினைக்க அவளுக்குச் சக்தியில்லை. அவள் பிழைத்திருக்கிறாள் என்பதற்கு என்ன அடையாளமென்றால், 'விரைமட்டலர்தண் துழாய்' என்கிறாள். இவள் விஷயத்தில் நீர் என்ன செய்வதாக எண்ணிக்கொண்டிருக்கிறீர்? இவளை ரக்ஷிக்க நினைக்கிறீரோ, முடிக்க நினைக்கிறீரோ?

குறிப்பு— திருத்துழாயைக் கொடுத்தருளவேண்டுமென்று சொல்ல ஆரம்பித்து 'துழாய்' என்று சொல்லுகிறாள். அந்த வாக்கியத்தை முழுவதும் சொல்ல அவளுக்குச் சக்தியில்லை என்று கருத்து.

இ—ம். இட்டம் - இஷ்டம் என்கிற வடமொழிச்சொல்.

---

ஏழைபேதை யிராப் பகல்தன
கேழிலொண் கண்ணநீர் கொண்டாள்கிளர்
வாழ்வை வேவவிலங்கை செற்றீரிவள்
மாழைநோக் கொன்றும் வாட்டேன்மினே. (ய)

(ப-ரை) ஏழை - சபலமானவள், பேதை - தெரியாதவள், தன - தனக்கேயுள்ள, கேழ இல் - கொஞ்சமும் ஒப்பில்லாத, ஒண் கண்ண - அழகான கண்களிலே, இராப்பகல் நீர் கொண்டாள் - கண்ணீரையுடையவளாயிருக்கிறாள். கிளர் வாழ்வை வேவ - விருத்தியடைந்த (ராவணனுடைய) ஸம்பத்து நாசமாகும்படி, இலங்கை செற்றீர் - இலங்கையை நாசம் பண்ணினவரே! இவள் மாழைநோக்கு ஒன்றும் - இவளுடைய அழகான பார்வையொன்றையாவது, வாட்டேன்மின் - வாடும்படி செய்யாதேயும்.

(கருத்து) இவள் உம்மிடத்தில் சபலமானவள், இவள் சிறு பெண்ணானதாலே உம்மைக் கிட்டுவது முடியாதென்று அறியவில்லை. உம்மை ஆசைப்பட்டு அது கிடைக்காமையால் வருத்தப்படுகிறாள். அவள் கண்ணழகு வேறொருவருக்கும் கொஞ்சங்கூட இல்லை. அப்படிப்பட்ட கண்களால் எப்போதும் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டிருக்கிறாள். அவளுடைய அழகான பார்வையொன்று தவிர மற்றவையெல்லாம் போய்விட்டது. இந்த தசையிலும் அவளுக்கு இயற்கையாக உள்ள அழகான பார்வை இருக்கிறது. அதுவும் வாடுவதற்கு முன்னாலே சீக்கிரமாய் வந்து, ஸீதையையடைவதற்கு பிரதிபந்தக

மான ராவணனை ஸம்ஹாரம் செய்ததுபோல், இவளுடன் சேரு வதற்கு இடைஞ்சல் ஏதாவதிருந்தால் அதையும் போக்கி அவளை ரக்ஷித்தருளவேணும். இப்படிச் செய்தால் நீர் கருணையுள்ளவ ரென்று ஸித்திப்பதால், உம்மையும் ரக்ஷித்துக்கொண்டதாக ஆகும்.

இ—ம். வாட்டேன்மின்-எதிர் மறை முன்னிலை பன்மை வினைமுற்று. (10)

---

வாட்ட மில்புகழ் வாமனனையிசை
கூட்டி வண்சட கோபன்சொல்லமை
பாட்டோ ராயிரத் திப்பத்தாலடி
சூட்ட லாகு மந்தாமமே. (கக)

(ப-ரை) வாட்டம் இல் புகழ் வாமனனை-வாடுகிறது என்பது இல்லாத நல்ல குணங்களையுடைய வாமநனைக் குறித்து, இசை கூட்டி - ஸ்வரங்களோடு சேர்த்து, வண் சடகோபன் சொல் - உதாரரான ஆழ்வார் அருளிச்செய்த, அமை பாட்டு ஓர் ஆயிரத்து-லக்ஷணங்கள் நிறைந்து ஒப்பில்லாத ஆயிரத்தில், இ பத்து- இந்தப் பத்துப் பாட்டுக்கள், அந்தாமம் ஏ - அழகான மாலை தான், அடி சூட்டல் ஆகும்-(எம்பெருமானுடைய) திருவடிகளில் ஸமர்ப்பிக்கத் தகுந்தவைகள் ஆகும்.

(கருத்து) இப்படி ஆழ்வார் வருத்தப்பட, அந்த வருத்தம் போகும்படி எம்பெருமான் எழுந்தருளினான். ஆகையினாலே அவனுடைய ப்ரணயித்வம், வாத்ஸல்யம், காருண்யம், ஸௌசீல்யம் முதலான நல்ல குணங்களுக்கு ஒரு குறைவும் இல்லாதிருந்தது. அப்படிப்பட்ட குணங்களையுடைய எம்பெருமானைக் குறித்து ஆழ்வார் அருளிச்செய்த இந்தப் பத்துப் பாட்டுக்கள் அவனுடைய திருவடிகளில் ஸமர்ப்பிக்கத் தகுந்தவைகள்.

இ—ம். 'தாமமே' என்றவிடத்தில் ஏகாரத்திற்குத் தேற்றப்பொருள்; மாலைதான் என்று பொருள். 'பத்தால்' என்கிற விடத்தில் 'ஆல்' அசைநிலை.

---

प्रह्लादाये नृसिंहं क्षपितविपदृषा व्यूहं
क्षिप्तदक्षं केशवव्रतयुक्तेतां शुभहारतांजवीरामि
नं येयत्नहेतां । तेन उद्धावयानं श्वसिवा-
हतिकृत्ताश्वासनं दीव्यन्मतिं संरक्षारक्षितारं
व्यसननिरसनं व्यक्तकीर्तिं जगाद ॥ (25)

இந்த திருவாய்மொழியில் ஆச்ரிதருடைய வியஸநத்தை எம்பெருமான் போக்கும் ஸ்வபாவமுள்ளவன் என்று பத்துக் காரணங்களாலே சொல்லப்படுகிறது. அவைகளாவன- (1) ப்ரஹ்லாதனை ரக்ஷிப்பதற்காக நரசிங்கனுப் அவதாரம் செய்தது; (2) அநிருத்தனுக்கு விரோதம் செய்த பாணன் கைகளை அறுத்தது; (3) ஸீதைக்காக லங்கையை நாசம் செய்தது; (4) ஆச்ரிதருடைய துக்கத்தைப் போக்குகிறவன் என்று காட்டுவதற்காக விஷத்துக்கு விரோதியான கருடனைக் கொடியாக வைத்துக் கொண்டிருப்பது; (5) ஆச்ரிதருடைய வருத்தம் போவதற்காகவே துளஸிமாலையைச் சாத்திக்கொண்டிருப்பது; (6) பிரிவினுல் துக்கப்படுகிற ஆச்ரிதருக்கு தைர்யத்தைக் கொடுப்பது; (7) அவர்களை ரக்ஷிப்பதையே நினைத்துக்கொண்டு ஸமுத்திரத்தில் படுத்திருப்பது; (8) துக்கப்படும் ஆச்ரிதர்கள் தங்கள் விரோதிகளைப் போக்கி தங்களை ரக்ஷிப்பனென்று நம்புவதற்காக தன் விரோதியான கம்ஸனை ஸம்ஹாரம் பண்ணினது; (9) ஆச்ரிதர்களுக்காகவே கூர்மையுள்ள திருவாழியை ஏந்திக்கொண்டிருப்பது; (10) நல்ல புத்தியையுடையவர்களை ரக்ஷிப்பது. அதாவது- துக்கப்பட்ட ஆச்ரிதர்களுடைய நல்ல புத்தி போவதற்குமுன்னுலே சீக்கிரம் ரக்ஷிப்பது.

---

## ஐந்தாம் திருவாய்மொழி.

*அவ:—* மூன்றும் திருவாய்மொழியில் ஆழ்வார் பிரதிபந்தகங்கள் போய் நித்தியஸூரிகளுடன்கூட எம்பெருமானை அநுபவிக்கவேணுமென்று ஆசைப்பட்டார். இது உடனே கிடைக்காமையால் அவர் வருத்தப்பட, எம்பெருமான் ஆபரணரூபமாகவும், ஆயுதரூபமாகவும் இருக்கிற நித்தியஸூரிகளுடன் கூட அவரிடம் வந்தான். பிரதிபந்தகங்கள் போகாமல் போன

போதிலும் முக்கியமான அம்சம் கிடைத்ததே என்று இந்த திருவாய்மொழியில் அவர் ஸந்தோஷப்படுகிறார்.

இதில் ஆழ்வார் அடைந்த ஸமிருத்தி சொல்லப்படுகிறது என்று ஆளவந்தாரும், எம்பெருமான் ஆழ்வாரை அடைந்து ஸந்தோஷப்படுகிறான் என்பது சொல்லப்படுகிறதென்று ஸ்ரீ பாஷியகாரரும் அபிப்ராயப்பட்டார்கள். எம்பெருமானுடைய ஸந்தோஷமே ஆழ்வாருடைய ஸமிருத்தியாகையாலே அவர்கள் அபிப்பிராயத்தில் விரோதமில்லை. இதை நினைத்து ஆறுயிரப்படியில் "தமக்குப் பிறந்த ஸமிருத்தியையும் சொல்லுகிறார்" என்று பொதுவாகச் சொல்லியிருக்கிறது.

(கலிவிருத்தம்)

அந்தாமத் தன்புசெய்தேன் னுவிசே ரம்மானுக்
கந்தாம வாழ்முடிசங் காழிநூ லாரமுள
சேந்தா மரைத்தடங்கண் சேங்கனிவாய் சேங்கமலஞ்
சேந்தா மரையடிகள் சேம்போன் திருவுடம்பே. (க)

(ப-ரை) அம் தாமத்து - அழகான இடத்தில் (பரமபதத்தில் செய்யும்), அன்பு செய்து - பிரீதியை (என்னிடம்) செய்து, என் ஆவி சேர் அம்மானுக்கு - என் ஆத்மாவுடன் சேர்ந்த ஸ்வாமிக்கு, அம் தாமம் - அழகான பூமாலையையுடைய, வாழ் முடி - பிரகாசிக்கிற கிரீடம், சங்கு, ஆழி - திருவாழி, நூல் - யஜ்ஞோபவீதம், ஆரம் - ஹாரம், உள - இருக்கின்றன, கண் - கண்கள், செம் தாமரை தடம்-சிவந்த தாமரைப்பூக்கள் நிறைந்த தடாகம்போல் இருக்கின்றன, செம் கனி வாய்-சிவந்த கோவைப் பழம்போலிருக்கிற திருப்பவளம், செம் கமலம் - செந்தாமரை போலிருக்கிறது. அடிகள் - திருவடிகள், செம் தாமரை - செந்தாமரைபோலிருக்கின்றன, திரு உடம்பு - திருமேனி, செம் பொன் - சிவந்த பொன்போலிருக்கிறது.

(கருத்து) எப்போதும் தோஷமில்லாததாயும் நல்ல குணங்களுடையதாயும் இருக்கிற பரமபதத்தில் பண்ணுகிற பிரீதியை என்னிடத்தில் பண்ணி, எம்பெருமான் தன்னுடைய நகைகளோடும் ஆயுதங்களோடும் வந்து என்னோடு சேர்ந்தான். இதினாலே அவனுக்கு ஸந்தோஷமுண்டாகி, அவனுடைய நகைகளுக்கும் ஆயுதங்களுக்கும் அவன் திருமேனிக்கும் புதிதாய் ஓர் அழகு உண்டாயிற்று.

இ—ம்: கலந்தானுக்கு - வினையால் அணையும் பெயர். (1)

அவ:— எம்பெருமான் ஆழ்வாருடன் எல்லா அவயவங்களாலும் கலந்தான் என்று இதில் சொல்லப்படுகிறது—

திருவுடம்பு வான்சுடர்செந் தாமரைகண் கைகமலந்
திருவிடமே மார்வ மயனிடமே கொப்பூ
ழொருவிடமு மெந்தை பெருமாற் கரனேயோ
வொருவிடமொன் றின்றியென் னுள்கலந்தா னுக்கே. (உ)

(ப-ரை) ஒருவு இடம் - நீங்குதலையுடைய(தன் திருமேனியில் என்னுடன் சேராத) இடம், ஒன்று இன்றி - ஒன்று இல்லாதபடி, என்னுள் கலந்தானுக்கு - என்னுடன் சேர்ந்தவரான, எந்தை பெருமாற்கு - என் தகப்பனுருக்கு ஸ்வாமியானவனுக்கு (என்னுடைய குலநாயகனுக்கு), திரு இடம் மார்வம் - பிராட்டி இருக்குமிடம் அவனுடைய திருமார்பு (ஒன்றுமே), அயன் இடம் கொப்பூழே - பிரம்மா இருக்குமிடம் அவனுடைய நாபி (ஒன்றுமே), அரன் ஒருவு இடமே - ருத்திரனுடைய இடம் கீழே சொன்ன இடங்களைக் காட்டிலும் வேறான இடமே (இடதுபாகமொன்றுமே), திரு உடம்பு - திருமேனி, வான் சுடர் - மிகுந்த காந்தியுள்ளதாயிற்று. கண் செம் தாமரை, கைகமலம் - கைகள் தாமரைப்பூ.

(கருத்து) எம்பெருமான் என்னுடன் சேர்ந்தது ஸர்வேச்வரியான பிராட்டியோடும் தன்னை ஆச்ரயித்த பிரம்மாவோடும் ருத்திரனோடும் சேர்ந்ததுபோல் அன்று; அவர்களுக்கு திருமேனியில் ஒவ்வொரு இடத்தையே கொடுத்திருக்கிறான். திருமேனியில் ஒரு இடம் விடாமல் எல்லா அவயவங்களோடும் என்னோடு சேர்ந்தருளினான். அவனுக்கு என்னிடத்திலிருக்கும் ஆசை இப்படிப்பட்டது. (2)

அவ:— எம்பெருமானை விட்டு உலகங்களுச்கு இருப்பு இல்லாததுபோல் தம்மை விட்டு அவனுக்கு இருப்பில்லாதவனைய் தம்முடன் கலந்தானென்று இதில் சொல்லுகிறார்—

என்னுள் கலந்தவன் செங்கனிவாய் செங்கமலம்
மின்னுஞ் சுடர்மலைக்குக் கண்பாதங் கைகமலம்
மன்னு முழுவே ழுலகும் வயிற்றினுள
தன்னுள் கலவாத தெப்பொருளுந் தானில்லையே. (௩)

(ப-ரை) என்னுள் கலந்தவன் - என்னுடன் சேர்ந்தவனும், மின்னும் சுடர்மலைக்கு - விளங்குகிற பிரகாசத்தையுடைய மலை போன்ற திருமேனியையுடைய எம்பெருமானுக்கு, செம் கனி வாய் செம் கமலம் கண் பாதம் கை கமலம்-சிவந்த கோவைப்பழம் போன்ற திருப்பவளமும் திருக்கண்களும் திருவடிகளும் திருக் கைகளும் செந்தாமரைபோலிருக்கின்றன. மன்னு முழு ஏழு உலகும் - ஸ்திரமான ஏழு உலகங்கள் முழுவதும், வயிற்றின் உள - அவனுடைய வயிற்றில் பிரளயகாலத்தில் இருந்தன, தன் னுள் - தன்னுடைய ஸங்கல்பத்தில், கலவாதது - உட்படாத, எ பொருளும் இல்லை ஏ - ஒரு வஸ்துவும் இல்லை.

(கருத்து) தன்னுடைய ஸங்கல்பமில்லாமல் ஏழு உலகங் கள் முழுவதிலும் ஒரு வஸ்துவுக்கும் ஸ்வரூபமும் ஸ்திதியும் பிரவிருத்தியும் எப்படியிருக்கமுடியாதோ, அப்படியே என்னு டன் சேராமல் இருக்கமுடியாதவனுய் என்னுடன் வந்துசேர்ந் தான். இதனாலே அவன் திருமேனி மலைபோல் பருத்து, அவன் திருப்பவளம் திருக்கண்கள் திருக்கைகள் திருவடிகள் இவை களுக்கு செந்தாமரையைப்போல் ஒரு அழகு உண்டாயிற்று.

---

அவ:— தம்முடன் சேர்ந்ததால் எம்பெருமானுக்கு உண் டான அழகு தமக்கு ஒவ்வொரு க்ஷணமும் புதிதாய்த் தோன் றிற்று என்று இதில் சொல்லுகிறார்—

எப்பொருளுந் தானாய் மரகதக் குன்றமொக்கு
மப்பொழுதைத் தாமரைப்பூக் கண்பாதங் கைகமல
மெப்பொழுது நாடிங்க ளாண்டூழி யூழிதோறு
மப்பொழுதைக் கப்பொழுதென் னாரா வமுதமே. (௪)

(ப-ரை) தான் எ பொருளுமாய் - எம்பெருமான் எல்லா வஸ்துக்களாய், மரதகம் குன்றம் ஒக்கும் - மரதகமலைபோலிருக் கிறான், கண்பாதம் அ பொழுதை தாமரை பூ - திருக்கண்களும் திருவடிகளும் அப்பொழுது மலர்ந்த தாமரைப்பூக்கள் போல் இருக்கின்றன, கை கமலம் - திருக்கை, எப்பொழுதும் - ஒவ் வொரு க்ஷணமும், நாள் - ஒவ்வொரு நாளும், திங்கள்-ஒவ்வொரு மாஸமும், ஆண்டு - ஒவ்வொரு வருஷமும், ஊழிதோறும் - ஒவ்வொரு கல்பமும் (அநுபவித்தாலும்), அ பொழுதைக்கு அ

பொழுது - அந்தந்த காலத்தில், என் ஆராவமுதமே - புதிது புதிதாய் தோன்றுவதாய் எனக்குத் தெவிட்டாத அமிருதமாய் இருக்கிறது.

(கருத்து) எல்லா வஸ்துக்களுக்கும் அந்தராத்மாவாய் மாதகமலைபோலிருக்கிற எம்பெருமானுக்கு என்னுடன் சேர்ந்ததாலுண்டான அழகை நான் எவ்வளவு காலம் அநுபவித்தாலும் அது எனக்கு ஒவ்வொரு க்ஷணமும் புதிது புதிதாய்த் தோன்றுகிறது. எனக்கு கொஞ்சங்கூட திருப்தி வருகிறதில்லை. ஒருவனுடைய அழகு இப்படியுமிருக்குமோ ?

குறிப்பு— ஒன்றை ஒருவன் கொஞ்சகாலம் அநுபவித்தால் அவனுக்குத் திருப்தி உண்டாகாமலிருக்கலாம். ஆழ்வாருக்கு எம்பெருமானுடைய அழகு எவ்வளவு காலம் அநுபவித்தாலும் திருப்தி வரவில்லை. இதைக் காண்பிப்பதற்காக 'நாள் திங்கள் ஆண்டு ஊழி' என்று ஒவ்வொன்றைக் காட்டிலும் மேன்மேல் அதிகமான காலங்களைச் சொன்னது. (4)

---

அவ:— எம்பெருமானுக்கு ஆழ்வாருடன் சேர்க்கையினுலுண்டான அழகுக்கு ஒப்பில்லை என்று இதில் சொல்லுகிருர்-

ஆரா வமுதமா யல்லாவி யுள்கலந்த
காரார் கருமுகில்போ லென்னம்மான் கண்ணனுக்கு
நேராவாய் செம்பவளம் கண்பாதங் கைகமலம்
பேரார நீண்முடிநாண் பின்னு மிழைபலவே. (ரு)

(ப-ரை) ஆரா அமுதமாய் - தெவிட்டாத அமிருதமாய் அல் ஆவி உள்-(ஒரு குணமுமில்லாமையால்) ஒரு வஸ்துவென்று சொல்லக்கூடாத என்னுடன் கலந்த, கார் ஆர் கருமுகில்போல்- மழைகாலத்திலே ஜலம் நிறைந்த கருப்பு மேகம்போலிருக்கிற, என் அம்மான் - என் ஸ்வாமியான கண்ணனுக்கு, செம்பவளம்- சிவந்த பவழம், வாய் நேரா - அவனுடைய திருப்பவளத்துக்கு ஒப்பானதன்று, கமலம் - அப்போது மலர்ந்த தாமரைப்பூவானது, கண்பாதம் கை நேரா - திருக்கண்களுக்கும் திருவடிகளுக்கும் திருக்கைகளுக்கும் ஒப்பானதன்று, பேர் ஆரம் - பெரிய ஹாரம், நீள் முடி - நீண்ட கிரீடம், நாண் - நாண் என்கிற நகை (இவைகளும்), பின்னும் இழை பலவே - மேலும் பல ஆபரணங்களும் இருக்கின்றன.

(கருத்து) ஒரு வஸ்துவென்று சொல்லத்தகாத என்னிடம் சேர்ந்தவனாய் தெவிட்டாத அமிருதமாய் ஸ்வாமியாயிருக்கிற கண்ணனுடைய திருமேனியின் அழகுக்கு ஒப்பில்லை. உலகத்திலிருக்கும் நல்ல பவழத்தை ஸ்படிகமென்று சொல்லும்படி ஒரு உயர்ந்த பவழமிருந்தால், அதுவும் அவனுடைய திருப்பவளத்துக்கு ஸமமன்று. கீழ்ப் பாட்டில் அவனுடைய திருக்கண்களும் திருவடிகளும் திருக்கைகளும் அப்பொழுது மலர்ந்த தாமரைப்பூவைப்போலிருக்கின்றன என்று சொல்லப்பட்டது. இது பிசகு. இந்த தாமரைப்பூவும் அழகில் அவைகளுக்கு ஸமமன்று. இப்படி ஒப்பில்லாத திருமேனியில் பெரிய ஹாரம் கிரீடம் முதலான அநேகம் நகைகள் இருக்கின்றன. இப்படியானால் அவன் அழகுக்கு நேரில்லை என்று சொல்லவும்வேணுமோ?

இ—ம். நேரா - எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று; எதிராகாது என்று பொருள். (5)

---

அவ:— எம்பெருமான், தம்மோடு கலந்ததினால் மிகுந்த பிரீதியையுடையவனாய், தன்னைப் பரிபூர்ணனாக எண்ணி, அப்படி எண்ணியிருப்பதைத் தமக்குக் காட்டினான். அதை தாம் அநுபவிப்பதாக ஆழ்வார் இதில் சொல்லுகிறார்—

பலபலவே யாபரணம் பேரும் பலபலவே
பலபலவே சோதி வடிவுபண் பெண்ணிற்
பலபல கண்டுண்டு கேட்டுற்று மோந்தின்பம்
பலபலவே ஞானமும் பாம்பணைமே லாற்கேயோ. (சு)

(ப-ரை) பாம்பு அணை மேலாற்கு - ஆதிசேஷனாகிய படுக்கையிலிருக்கிற எம்பெருமானுக்கு, பண்பு எண்ணில் - (அவன் எனக்குத் தோன்றும்) விதத்தை நினைத்தால், ஆபரணம் பல பலவே - நகைகள் அநேகங்கள், பேரும் பலபலவே - திருநாமங்களும் அநேகங்கள், சோதிவடிவு பலபலவே - பிரகாசமுள்ள திருமேனிகளும் அநேகங்கள், கண்டு - கண்ணாலே பார்த்தும், உண்டு-நாக்காலே சாப்பிட்டும் கேட்டு - காதாலே கேட்டும், உற்று - கைகளால் தொட்டும், மோந்து - மூக்காலே மோந்தும் (இப்படி ஒவ்வொரு இந்திரியத்தாலும் உண்டாகும்) இன்பம், பல பல - அநேகம், ஞானமும் பலபலவே - ஞானங்களும் அநேகங்கள்.

(கருத்து) ஆதிசேஷன்மேலே எழுந்தருளியிருக்கிறவனுய் என்னுடன் கலந்த எம்பெருமான் நான் அநுபவிக்கும்படி எனக்குக்காட்டின நகைகளும், திருநாமங்களாலே காட்டப்பட்ட குணங்களும், திருமேனிகளும், எல்லா இந்திரியங்களால் அநுபவிக்கப்பட்ட போகங்களும் திவ்யஜ்ஞாநங்களும் அநேகங்கள்.

குறிப்பு— (1) நகைகள் அநேகங்களென்பதற்கு கிரீடம் முதலான வெவ்வேறு ஆபரணங்கள் அநேகங்களென்றும் ஒவ்வொரு ஜாதியிலும் வெவ்வேறு விதமான நகைகளில் அநேகங்கள் என்றும் கருத்து.

(2) நகைகளும் திருமேனிகளும் சுத்த ஸத்துவமான திரவியத்தால் செய்யப்பட்டவைகள். திருமேனிகள் பலபல என்பதற்கு பரம், வியூஹம் முதலான பேதத்தாலே அநேகங்களென்றும், அவைகள் ஒவ்வொன்றிலும் இரண்டு திருக்கைகளை உடையதாயும், நாலு திருக்கைகளையுடையதாயும் இப்படி வேறு விதமாயும் அநேகங்களாயிருக்குமென்று கருத்து.

(3) இந்திரியங்களால் உண்டுபண்ணப்பட்ட இன்பமென்பதற்கு சுத்தஸத்துவமயமான திரவியங்களினுடைய ரூபம் ரஸம் சப்தம் ஸ்பர்சம் கந்தம் இவைகளாலுண்டான இன்பமென்று கருத்து.

(4) ஞானங்கள் திவ்யமாயிருப்பதாவது— இந்திரியங்களாலே உண்டாகாதவைகளாய் எல்லா வஸ்துக்களையும் தோன்றும்படி செய்கிறவைகளாயும் மிகவும் தெளிவாயிருக்கிறவைகளாயும் மிகுந்த ஆநந்தத்தைக் கொடுக்கிறவைகளாயும் இருப்பது. அவைகளின் விஷயங்கள் அநேகங்களாயிருப்பதால் ஜ்ஞானங்களும் அநேகங்கள். (6)

பாம்பணைமேல் பாற்கடலுட் பள்ளியமர்ந் ததுவும்
காம்பணைதோட் பின்னைக்கா யேறுடனேழ் செற்றதுவும்
தேம்பணைய சோலை மராமரமே ழெய்ததுவும்
பூம்பிணைய தண்டுழாய்ப் பொன்முடியம் போரேறே. (எ)

(ப-ரை) பூம் பிணைய தண் துழாய் - அழகான தொடுக்கப்பட்ட குளிர்ந்த துளஸியையுடைத்தான, பொன்முடி - பொன் கிரீடத்தையுடையவனான, அம் போர் ஏறு - அழகாயும்,(சண்டையில்) கொழுத்த காளைமாடு போன்றவனுயுமிருக்கிற எம்பெரு

மானின், பால் கடலுள் - திருப்பாற்கடலில், பாம்பு அணைமேல் - ஆதிசேஷனாகிய படுக்கையில், பள்ளி அமர்ந்ததுவும்-படுத்திருப்பதில் கவனமுள்ளவனாயிருந்ததுவும், காம்பு அணை தோள் பின்னைக்கு ஆய் - மூங்கிலைப்போன்ற தோள்களையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக, ஏழு ஏறு உடன் செற்றதுவும் - ஏழு காளைமாடுகளை ஒரே காலத்திலே கொன்றதுவும், தேம் பணை - தேனுள்ள கிளைகளையுடையவைகளாய், சோலை - காடுகள் போன்றவைகளாயிருந்த, ஏழு மராமரம் எய்ததுவும் - ஏழு மராமரங்களைத் துளைத்ததுவும்( இவைகள் எல்லாம் எனக்காகச் செய்யப்பட்டன)

(கருத்து) எம்பெருமான் திருப்பாற்கடலில் ஆதிசேஷன் மேலே படுத்திருப்பதும், நப்பின்னைப் பிராட்டிக்காக ஏழு காளைமாடுகளை ஒரே காலத்தில் கொன்றதுவும் இராமாவதாரத்தில் ஏழு மராமரங்களை ஒரே பாணத்தால் துளைத்ததுவும் இவை முதலான தாம் செய்த வேலைகளெல்லாம் என் பிரீதிக்காகச் செய்தான்.

குறிப்பு— 'போர் ஏறு' என்பதற்கு ஒரு கொழுத்த காளை மாடு பயமில்லாமல் போவதுபோல், எம்பெருமான் சண்டை போடுமிடத்தில் பயமில்லாமல் பிரவேசித்து ஜயத்தை அடைகிறவன் என்று கருத்து. (7)

---

அவ:— எம்பெருமானுடைய ஸௌசீல்யத்தை இதில் அநுபவிக்கிறார்—

பொன்முடியம் போரேற்றை யெம்மானை நாற்றடந்தோ
டன்முடிவொன் றில்லாத் தண்டுழாய் மாலையனை
யென்முடிவு காணதே யென்னுட் கலந்தானைச்
சொன்முடிவு காணேனான் சொல்லுவதென் சொல்லீரே. (அ)

(ப-ரை) பொன் முடி - பொன் கிரீடத்தையுடையவனாய், அம் - அழகுள்ளவனாய், போர் ஏற்றை - சண்டையில் காளைமாடு போன்றவனாய், எம்மானை-என் ஸ்வாமியாய், நால் தடம்தோள்-நான்கு பருத்த புஜங்களை உடையவனாய், தன் முடிவு ஒன்று இல்லாத - தன்னுடைய (ஸ்வரூபத்துக்கும் குணங்களுக்கும் விபூதிகளுக்கும்) அளவு இல்லாதவனாய், தண் துழாய் மாலையனை -

குளிர்ந்த துளஸிமாலையை உடையவனும், என் முடிவு - என்னுடைய மிகுந்த தாழ்மையின் எல்லையை, காணாதே - பார்க்காமல், என்னுள் கலந்தானை - என் மனதில் புகுந்தவனாய் இருக்கிற எம்பெருமானை, சொல்முடிவு நான் காணேன் - வர்ணிப்பதில் முடிவை நான் பார்க்கவில்லை, என் சொல்லுவது - நான் எதைச் சொல்லுவது, சொல்லீர் - இதைச் சொல்லச் சக்தியுள்ளவர்கள் இருந்தால் சொல்லும் விதத்தை எனக்குச் சொல்லுங்கள்.

(கருத்து) என்னுடன் சேர்ந்த எம்பெருமான் எங்கே? நான் எங்கே? அவனுடைய ஸ்வரூபத்துக்கும் குணங்களுக்கும் விபூதிகளுக்கும் முடிவில்லை. நான்கு பருத்த தோள்களாலும் பொன்கிரீடத்தாலும் துளஸிமாலையாலும் அவன் அழகுக்கு எல்லையில்லை. நானோ ஸ்வரூபத்தாலும் ஸ்வபாவத்தாலும் குணங்களாலும் நடவடிக்கையாலும் மிகவும் தாழ்ந்தவன். இதைப் பாராமல், என்னுடன் சேர்ந்தானே. என்ன ஸௌசீல்யகுணம்? இதை நான் எப்படி பூர்ணமாக வர்ணிப்பது. வர்ணிக்கத் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் எனக்கு அதைச் சொல்லுங்கள்.

குறிப்பு— இப்படி எம்பெருமானுடைய ஸௌசீல்யத்தை ஆழ்வார் கொண்டாட, அவன் தன்னுடன் சேர்ந்து ஸந்தோஷப்பட்டது கொண்டாடப்பட்டதாக ஆகும். உயர்ந்தவன் தாழ்ந்தவனுடன் சேருவதே அருமை. சேர்ந்து ஸந்தோஷப் படுவது மிகவும் அருமை.

இ—ம், சொல்லீர் - முன்னிலை ஏவல் வினைமுற்று. (8)

---

அவ:— இப்படி எம்பெருமானுடைய ஸௌசீல்யத்தை தான் அநுபவித்து, ஸ்ரீவைஷ்ணவர்களைப் பார்த்து நீங்களும் இதைக் கொண்டாடுங்கள் என்று இதில் சொல்லுகிறார்—

சொல்லீரென் னம்மானை யென்னுயி ராவிதனை
யெல்லையில் சீரென்கரு மாணிக்கச் சுடரை
நல்ல வமுதம் பெறற்கரிய வீடுமா
யல்லிமலர் விரையொத் தாணல்லன் பெண்ணல்லனே (௯)

(ப-ரை) எல்லை இல் சீர் - எல்லையில்லாத நல்ல குணங்களை உடையவனும், நல்ல அமுதம்-அழிவில்லாமையால் சிலாக்யமான

அமுதமாய்,பெறற்கு அரிய வீடுமாய்-பெறுவதற்கு அருமையான மோக்ஷம்போல் மிகவும்இனியவனாய்,அல்லி மலர் விரை ஒத்து-தாமரைப்பூவின் வாஸனைபோல் இனியவனாய், ஆண் அல்லன் பெண் அல்லன் - புருஷர்களையும் ஸ்திரீகளையும்(எல்லாரைக் காட்டிலும்) வேறு ஜாதியாய், என் கருமாணிக்கம் சுடரை - என்னுடைய கருமாணிக்கத்தின் ஒளியை உடையவனாய், என் ஆவி ஆவிதனை- என் ஆத்மாவைத் தரிக்கும்படி செய்கிறவனாய், என் அம்மானை- (இப்படியிருக்கிற) என் ஸ்வாமியை, சொல்லீர் - சொல்லுங்கள்.

(கருத்து) எம்பெருமானுடைய ஸௌசீல்யத்தை என்னால் வர்ணிக்கமுடியாதபோதிலும், அதை வர்ணிக்காமலிருக்க என்னால் முடியவில்லை. அவனுடைய நல்ல குணங்களை எல்லாக் காலமும் வர்ணித்தாலும் அதற்கு ஒரு முடிவு நான் காணவில்லை. அவன் எல்லாரைக் காட்டிலும் விலக்ஷணன். அவன் திருமேனி நீலமணிபோல் விளங்குகிறது. தாமரைப்பூவின் வாஸனைபோலும் அழிவில்லாத அமிருதமிருந்தால் அதுபோலவும், பெறுவதற்கு அருமையான மோக்ஷஸுகம் போலவும் இனியவனுமிருக்கிறான். அவன் அழகாலே என் ஆத்மாவை தரிக்கும்படி செய்கிறான். இப்படிப்பட்ட என் ஸ்வாமியை நான் வர்ணிப்பது போதாது. ஸ்ரீவைஷ்ணவர்களே! நீங்களும் வர்ணியுங்கள். (9)

---

அவ:— எம்பெருமான் தம்முடன் சேர்ந்து ஸந்தோஷப் படும் குணத்தை இதில் கொண்டாடுகிறார்—

ஆணல்லன் பெண்ணல்ல னல்லா வலியுமல்லன்
காணலுமா கானுள னல்லனில்லை யல்லன்
பேணுங்காற் பேணு முருவாகு மல்லனுமாங்
கோணை பெரிதுடைத்தெம் பெம்மானைக் கூறுதலே. (ம)

(ப-ரை) ஆண் அல்லன், பெண் அல்லன், அல்லா அலியும் அல்லன் - புருஷர்களாகவும் ஸ்திரீகளாகவும் நபும்ஸகர்களாகவும் பிரிந்திருக்கிற எல்லாரைக் காட்டிலும் விலக்ஷணன், காணலும் ஆகான்-(ஆகையாலே அவர்களை அறியும்பிரமாணங்களால்) அறிய முடியாதவன், உளன் அல்லன்-(தன்னை ஆச்ரயிக்காதவர்களுக்கு) இருக்கிறவன் அல்லன் (துர்லபன்), இல்லை அல்லன் - (தன்னை

ஆச்ரயித்தவர்களுக்கு) இல்லாதவன் இல்லை(ஸுலபன்), பேணும் கால் - (ஆச்ரிதர் தன்னை) வேண்டும் காலத்தில், பேணும் உருவாகும் - (அவர்கள் ஆசைப்படும் ரூபங்களை) எடுத்துக்கொள்ளுமவன், அல்லனும் ஆம் - (தன்னை ஆச்ரயிக்காதவர்களுக்கு) இப்படி ரூபங்களையெடுத்துக்கொள்ளாதவன், எம்பெம்மானை - (இப்படி இருக்கிற) என் ஸ்வாமியை, கூறுதல் - வர்ணிப்பது, பெரிது கோணை உடைத்து-பெரிய கோணலையுடையது (நம்மால் சொல்ல முடியாது).

(கருத்து) எம்பெருமான் உலகத்திலுள்ள எல்லாரைக் காட்டிலும் விலக்ஷணன், ஆகையால் அவர்களை அறியும் பிராமணங்களாலே அறியமுடியாதவன். தன்னை ஆச்ரயித்தவர்கள் தன்னைப் பார்க்கவேண்டுமென்றால் உடனே வருகிறவன்; அவர்கள் தன்னை எப்படி பார்க்கவேணுமென்கிறார்களோ, அப்படிப்பட்ட ரூபங்களை எடுத்துக்கொள்ளுகிறவன். அவர்கள் காண ஆசைப்பட்ட வேலைகளையும் செய்கிறவன். தன்னை ஆச்ரயிக்காதவர்களுக்கு துர்லபன். இப்படி ஆச்ரயித்தவர்களிடத்தில் ஆசையுள்ளவனும் அவர்களுடன் சேர்ந்து ஸந்தோஷப்படுகிற என் ஸ்வாமியின் குணத்தை வர்ணிக்கமுடியாதபோதிலும் என்னால் வர்ணிக்காமல் இருக்கமுடியவில்லை. (10)

கூறுத லொன்றுராக் குடக்கூத்த வம்மானைக்
கூறுதலே மேவிக் குருகூர்ச் சடகோபன்
கூறினவந் தாதியோ ராயிரத்து ளிப்பத்துங்
கூறுதல்வல் லாருளரேற் கூடுவர் வைகுந்தமே. (கக)

(ப-ரை) ஒன்று கூறுதல் ஆரா-ஒரு குணத்தை வர்ணித்து திருப்தி வராதபடி இனியவனான, குடம் கூத்த அம்மானை - கோபாலனாயிருந்து பால்குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு கூத்தாடின ஸ்வாமியை, கூறுதலே மேவி - வர்ணிப்பதையே ஆசைப்பட்டு, குருகூர் சடகோபன் கூறின - ஆழ்வார் அருளிச்செய்த, அந்தாதி ஓர் ஆயிரத்துள் - அந்தாதிரூபமான ஒப்பில்லாத ஆயிரத்தில், இ பத்தும் - இந்தப் பத்துப் பாட்டுக்களையும் கூறுதல் வல்லார் - அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்க சக்தியுள்ளவர்கள், உளர் ஏல் - இருந்தால், வைகுந்தம் கூடுவர் - வைகுந்தத்துக்குப் போய் எம்பெருமானுடன் சேருவர்.

(கருத்து) எல்லாக்காலம் சொன்னாலும் திருப்தி வராத படி இனியவைகளான குணங்களையும் வேலைகளையுமுடைய எம்பெருமானைப்பற்றி ஆழ்வார் அருளிச்செய்த இந்தப் பத்து பாட்டுக்களையும் சொல்லிக்கொண்டிருக்கிறவர்கள் வைகுந்தத் துக்குப் போய் எம்பெருமானுடன் சேர்வார்கள். (11)

---

ஶ்லாக்⁴யாம் ஶிஶிரகாந்திம் ஸாத⁴யித்வா விஶ்லா-
த்ராஜுஷ்டிம் ஶ்ரீத்ருஷ்டோஷாதி போக³ம் நவநவஸா-
ஸம் நைகஸந்தோஷவிஶ்யம் । லாத்வா தஸ்மிந் வீர்யம் ஸா-
ரவிசாரம் ஸத்³ருணாஸோக³ஹாந்யம் விஶ்வாவ்யாத்தவித்தம்
வ்ருஷபவதிமணவ்யாதநீத்யாக³ஸக்த ॥ ॥௨௫॥

இந்தத் திருவாய்மொழியில் ஆழ்வாருடன் சேர்ந்ததனால் எம்பெருமானுக்கு ஸந்தோஷமுண்டானது பத்து அடையாளங் களால் சொல்லப்படுகிறது. அந்த அடையாளங்களாவன— (1) ஆழ்வாருடன் சேர்ந்ததினாலே புதிதாய் ஒரு காந்தியுண் டானது; (2) தனக்குப் பிரியமான ஆழ்வாருடைய முழுத் திரு மேனியுடன் சேர்ந்தது; (3) ஸந்தோஷத்தினால் திருமேனி மலை போல் பருத்தது; (4) பிரீதியாலே ஆழ்வாருக்கு ஒவ்வொரு க்ஷணமும் புதிது புதிதாய்த் தோன்றினது; (5) நீருண்ட மேகம் போல் அழகுண்டானது; (6) கணக்கில்லாத நகை முதலானவை களோடு ஆழ்வாருக்குத் தோன்றினது; (7) ஆழ்வாருடைய பிரீதிக்காக பிரஸித்தமான வேலைகளைச் செய்தது; (8) சொல்ல முடியாதபடி ஸௌசீல்யகுணத்தை ஆழ்வாருக்குக் காட்டினது; (9) தன்னுடைய குணங்களை ஸ்ரீவைஷ்ணவர்களுடன் கூட இருந்து சொல்லும்படி இனியவனாயிருப்பது; (10) உலகத்துக்கு விலக்ஷ ணமாய் ஆச்சரியமாய்த் தோன்றினது.

---

# ஆறும் திருவாய்மொழி.

அவ:— முன் திருவாய்மொழியில் 5-வது 8-வது பாட்டுக்களில் ஆழ்வார் தம்மைத் தாழ்ந்தவராகச் சொன்னார் அதை நினைத்து வளவேழுலகில் (1—5) போல் அவர் தம்மை விட்டு அகலுவரோ என்று எம்பெருமான் பயப்படுவதும், அவனை அவர் ஸமாதாநப்படுத்துவதும் இதில் சொல்லப்படுகிறது—

(ஆசிரியத்துறை.)

வைகுந்தா மணிவண்ணனே யென்பொல்லாத் திருக்குறளா வென்
வைகும் வைகலுந்தோறு மமுதாய வானேறே [னுண்மன்னி
செய்குந்தா வருந்தீமை யுன்னடியார்க்குத் தீர்த்தசுரர்க்குத் தீமைகள்
செய்குந்தா வுன்னைநான் பிடித்தேன்கோள் சிக்கெனவே. (க)

(ப-ரை) வைகுந்தா - வைகுந்தத்திலிருக்கிறவனே! மணிவண்ணனே - மணியின் ஸ்வபாவமுள்ளவனே! என் - என்னுடைய, பொல்லா - பொல்லாத (என்னை உன் அழகினாலே வேறு ஒருவனுக்கும் சேஷனாகாதபடி பண்ணின), திரு குறளா - ஸ்ரீவாமநனே! என்னுள் மன்னி - என் மனதில் நிலையாயிருந்து, வைகும் - நடக்கிற, வைகல் தோறும் - எல்லாக் காலங்களிலும், அமுதாய - அமிருதம்போல் இனியவனான, வானேறே - பரமபதத்திலிருக்கும் நித்தியஸூரிகளின் தலைவனே! உன் அடியார்க்கு-உன் திருவடிகளையடைந்தவர்களுக்கு, செய்கும் - அநாதி காலமாய் செய்யப்பட்டவைகளாய், தாவு அரு - தாவுதல்- தாண்டுதல் முடியாத (அநுபவித்தாலல்லது போக்கமுடியாதவைகளாய் இருக்கிற),தீமை-பாபங்களைத் தீர்த்து, அசுரர்க்கு,தீமைகள்செய்-பாபங்களைச்சேரும்படி செய்கிற, குந்தா - குந்தபுஷ்பம்போல் நிர்மலனாய் இருக்கிறவனே! உன்னை, நான், சிக்கென - கெட்டியாக, பிடித்தேன் - பிடித்துக்கொண்டேன். கொள் - அறிந்துகொள் (ஸம்சயப்படாதே)

(கருத்து) பரமபதத்திலிருக்கிறவனாய் முந்தாணியில் முடிந்துகொண்டு ஆளலாம்படியான மணியைப்போல் ஆச்ரிதர்களுக்கு ஸுலபனாய், உன்னுடைய அளவில்லாத அழகாலே என்னை உனக்கே அடிமையாகச் செய்துகொண்டவனாய், என் மனதிலிருந்து எப்போதும் புதிதுபுதிதுபோல் எனக்கு மிகவும் இனி

யவனுய், நித்தியஸூரிகள் தலைவனுய், ஆச்ரிதர்களுடைய அநுபவித்தே போக்கும்படியான கணக்கில்லாதபாபங்களைப்போக்கி, அவைகளை அவர்கள் விரோதிகளிடம் சேர்க்கிறவனுய், நிர்மலனுயிருக்கிற உன்னைக் கெட்டியாக பிராப்பியமாகப் பிடித்துக் கொண்டேன். உன்னை நான் விடுவேன் என்று கொஞ்சமும் பயப்படவேண்டாம். இதை நிச்சயமாகத் திருவுள்ளத்தில் வைத்துக்கொள்.

குறிப்பு— (1) தன் அழகாலே ஆழ்வாரை அடிமையாக்கினதைக்கொண்டு எம்பெருமானை அவர் "பொல்லாத் திருக்குறளா" என்று கூப்பிடுகிருர்.

இ—ம். வான் என்பது ஆகுபெயராய் வானத்திலிருக்கிறவர்களைச் சொல்லுகிறது. சிக்கெனவே-உரிச்சொல். (1)

---

அவ:— ஆழ்வார் தன்னைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன் என்று சொல்ல, எம்பெருமானும் பயம் போய் மிகுந்த பிரீதியுள்ளவன் ஆனுன். அதை ஆழ்வார் இதில் அநுபவிக்கிருர்—

சிக்கெனச் சிறிதோரிடமும் புறப்படாத் தன்னுள்ளே யுலகுக
ளொக்கவே விழுங்கிப் புகுந்தான் புகுந்ததற்பின்
மிக்கஞான வெள்ளச் சுடர்விளக்காய்த் துளக்கற் றமுதமா யெங்கும்
பக்கநோக் கறியானென் பைந்தாமரைக் கண்ணனே. (௨)

(ப-ரை) என்-என்னுடைய, பைம்-பச்சையான(குளிர்ந்த) தாமரை கண்ணன் - தாமரைப்பூவைப்போன்ற திருக்கண்களை உடைய எம்பெருமான், சிறிது ஓர் இடமும் புறப்படா - சின்னதான ஒருவஸ்துவும் வெளியில் இல்லாதபடி, தன்னுள்ளே - தன் ஸங்கல்பத்தில், உலகுகள் ஒக்கவே விழுங்கி - லோகங்களை ஒரே காலத்தில் அடக்கிக்கொண்டு, சிக்கென புகுந்தான் - என் மனதிற்குள்ளே பிரியாதபடி புகுந்தான், புகுந்தற்பின்-புகுந்தபிறகு, மிக்க ஞானம் சுடர் விளக்காய் - பிரபையோடு கூடிய விளக்குப்போல் மிகுந்த ஜ்ஞாநமாகிய குணமுள்ளவனுய் - ஸ்வயம்பிரகாசமாய், துளக்கு அற்று - (நான் விடுவேனே என்கிற) நடுக்கம் போனவனுய், அமுதமாய் - எனக்கு இனியவனுயிருந்துகொண்டு எங்கும் - ஓரிடத்திலும், பக்கம் நோக்கு அறியான்-பக்கங்களைப் பார்க்கச் சக்தியில்லாதவன் ஆனுன்.

(கருத்து) வேறு நினைவு இருப்பது என்னை அநுபவிப்பதற்கு விரோதமென்று நினைத்து, உலகத்தை உண்டுபண்ணுவது முதலிய வியாபாரங்களை எல்லாம் முடித்துக்கொண்டு, எம்பெருமான் என் மனதுக்குள்ளே பிரியாதபடி புகுந்தான். அதன் பிறகு அளவில்லாத ஜ்ஞாநம் முதலான எல்லா நல்ல குணங்களையுடையவனாய், நான் அகலுவேனோ என்கிற நடுக்கம் நீங்கினவனாய், அதினால் ஸந்தோஷமடைந்தவனாய், அந்த ஸந்தோஷத்தாலே புதிதான திருக்கண்களின் அழகையுடையவனாய் இருந்துகொண்டு என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறான். வேறொன்றையும் பார்க்கிறதில்லை.

குறிப்பு— பாட்டில் 'அமுதமாய்' என்பதற்கு என்னோடு சேர்ந்து ஸந்தோஷப்பட்டதால் எனக்கு இனியனானான் என்று கருத்து.

இ-ம். புறப்படா-புறப்படாமல், வினையெச்சம். (2)

---

அவ:— ஆழ்வார் எம்பெருமானை அநுபவித்து ஸ்தோத்ரம் பண்ண ஆரம்பிக்க, அதற்குத் தன்னை விஷயமாகக்கொடுத்த அவனுடைய ஔதார்யமென்கிற குணத்தை இதில் கொண்டாடுகிறார்—

தாமரைக் கண்ணனை விண்ணோர் பரவுந் தலைமகனைத் துழாய்
பூமருவு கண்ணி யெம்பிரானைப் பொன்மலையை [விரைப்
நாமருவி நன்கேத்தி யுள்ளி வணங்கி நாம்மகிழ்ந் தாட நாவலர்
பாமருவி நிற்கத்தந்த பான்மையேய் வள்ளலே. (௩)

(ப-ரை) தாமரை கண்ணனை - தாமரைபோன்ற கண்களை உடையவனாய், விண்ணோர் பாவும் தலைமகனை - நித்தியஸூரிகள் ஸ்தோத்ரம் பண்ணும்படி உயர்ந்தவனாய், துழாய் விரை-துளஸியின் வாஸனையும், பூமருவு - புஷ்பங்களும் சேர்ந்த கண்ணி - மாலையை உடையவனாய், எம்பிரானை - என் ஸ்வாமியாய், பொன் மலையை . பொன்மலை போலிருக்கிறவனாய் (இருக்கிற எம்பெருமானை), நாம் மருவி - (கூசாதே) கிட்டப்போய், நன்கு ஏத்தி - நன்றாய் ஸ்தோத்திரம் பண்ணி, உள்ளி - நினைத்து, வணங்கி, நாம் மகிழ்ந்து - ஸந்தோஷப்பட்டு, ஆட - கூத்தாட, நாவு அலர் பா மருவி நிற்க - நாக்கிலுண்டாகிற பாட்டுக்களுக்கு

விஷயமாய் சேர்ந்து நிற்க, தந்த பான்மை - தன்னைக்கொடுத்த ஸ்வபாவத்துக்கு, ஏய்-பொருத்தமுள்ள, வள்ளல்-ஔதார்ய குண முடையவன்.

(கருத்து) தாமரைபோன்ற திருக்கண்களையும், பொன் மலை போன்ற திருமேனியையும் உடையவனும் நல்ல வாஸனையு டைய துளஸியாலும் புஷ்பங்களாலும் தொடுக்கப்பட்ட மாலையை உடையவனும் ஆதிசேஷன் முதலான நித்தியஸூரிகளால் ஸ்தோத்ரம் பண்ணப்பட்டவனும் இருக்கிற என் ஸ்வாமியை நான் கூசாமல் கிட்டி ஸ்தோத்ரம் பண்ணி, தியாநம் செய்து வணங்கி, ஸந்தோஷப்பட்டு கூத்தாடும்படி என் நாவில் உண் டாகும் பாட்டுக்களுக்கு தன்னை விஷயமாகக் கொடுத்துக்கொண் டிருக்கிறான். என்ன உதாரகுணம்? இப்படிப்பட்டவன் வே றொன்றையும் பார்க்காமல் என்னையே பார்த்துக்கொண்டிருக் கிறான்.

குறிப்பு—'தாமரைக்கண்ணனை' என்பதால் அவயவங்களின் அழகும், 'பொன்மலையை' என்பதால் திருமேனியின் அழகும் சொல்லப்பட்டன. இவைகளை முறையே ஸௌந்தரியமென்றும், லாவண்ணியமென்றும் சொல்லுகிறது. (3)

---

அவ:—எம்பெருமானை எல்லா விதத்தாலும் அநுபவித்து பிறகு அவனை எப்படி விடமுடியுமென்று இதில் சொல்லுகிறார்—

வள்ளலே மதுசூதனா வென்மரதக மலையே யுனைநினைந்
தெள்க றந்தவெந்தா யுன்னையெங்ஙனம் விடுகேன்
வெள்ளமே புரைநின் புகழ்குடைந்தாடிப்பாடிக் களித்துகந்துகந்
துள்ளநோய் களெல்லாந் துரந்துய்ந்து போந்திருந்தே. (ச)

(ப-ரை) வள்ளலே - உதாரனே! மதுசூதனா - மதுவைக் கொன்றவனே! என் மரதகமலையே - என்னுடைய மரதகமலை போன்ற திருமேனியை உடையவனே! உனை நினைந்து - உன்னை நினைத்து, எள்கல் தந்த எந்தாய் - உன்னிடம் ஈடுபடுவதைக் கொடுத்த என் ஸ்வாமியே, வள்ளம் புரை - பிரவாஹம்போலிருக் கிற, நின் புகழ் - உன்னுடைய கல்யாணகுணங்களை, குடைந்து - நினைத்து நினைத்து, ஆடி - அவைகளில் மூழ்கி (அநுபவித்து),

பாடி, களித்து உகந்து உகந்து - மேல்மேல் ஸந்தோஷப்பட்டு, உள்ள நோய்கள் எல்லாம் - துக்கங்களெல்லாவற்றையும், துரந்து- துரத்திவிட்டு, உய்ந்து - பிழைத்து, போந்து-உன் திருவடிகளை அடைந்து, இருந்து - இப்படி நிலையாயிருந்து, உன்னை,எங்ஙனம் விடுகேன் - எப்படி விடுவேன்.

(கருத்து) ஆச்ரிதருக்கு தன்னைக் கொடுத்துக்கொண்டு, அவருடைய விரோதிகளை நாசம்பண்ணும் ஸ்வபாவமுள்ளவனே! மரதகமலைபோல் அழகான உன் திருமேனியை எனக்கு காட்டி எனக்கு மிகுந்த இன்பத்தைக் கொடுத்தவனே! உன்னை நினைத்து நீராய் உருகும்படி என்னைச் செய்த என் ஸ்வாமியே! இவ்விதமான நல்ல குணங்களாகிற அமிருதப்பிரவாஹத்தை நினைத்து நினைத்து, அதில் மூழ்கி, அதைப் பாடி, மேல்மேல் ஸந்தோஷப்பட்டு, எனக்கு உன்னைப் பிரிந்ததாலும் நான் தாழ்ந்தவன் என்று அகலுவதாலும் உண்டான துக்கங்கள் போய், பிழைத்து உன் திருவடிகளை அடைந்தேன். இப்படி நிலையாயிருந்தபின்பு உன்னை எப்படி விடமுடியும்? விடமுடியாது.

குறிப்பு— இதில் 'நோய்'என்பது ஆகுபெயராய் நோயின் காரியமான துக்கத்தைச் சொல்லுகிறது. (4)

---

அவ:— முடிவில்லாத எம்பெருமானுடைய கைங்கரியத்தை அடைந்தபின்பு, அவனை எப்படி விடமுடியும் என்று இதில் சொல்லுகிறார்—

உய்ந்துபோந்தேன் னுலப்பிலாத வெந்தீவினைகளை நாசஞ்செய்துன
தந்தமி லடிமை யடைந்தேன் விடுவேனோ
வைந்து பைந்தலை யாடரவணைமேவிப் பாற்கடல் யோகநித்திரை
சிந்தைசெய்த வெந்தா யுன்னைச் சிந்தைசெய்துசெய்தே. (ரு)

(ப-ரை) பாற்கடல் - திருப்பாற்கடலில், ஐந்து பைந்தலை ஆடு அரவு அணை - ஐந்து குளிர்ந்த தலைகளையுடையவனாய் ஆடுகிறவனாயிருக்கிற ஆதிசேஷனாகிய படுக்கையில்,மேவி-பிரீதியைச் செய்து, யோகநித்திரை சிந்தை செய்த - யோகநித்திரையாகிய சிந்தையைச்செய்கிற, எந்தாய் - என் ஸ்வாமியே! உன்னை சிந்தை செய்து செய்து-உன்னை நினைத்து நினைத்து, உய்ந்து-பிழைத்து, போந்து - ஸம்ஸாரிகளைக் காட்டிலும் வேறுபட்டு, என் உலப்பு

இலாத-என்னுடைய முடிவில்லாத, வெம் தீவினைகளை-க்ரூரமான நெருப்பு போன்ற கர்மங்களை நாசம் செய்து,உனது அந்தம் இல் அடிமை - உன்னுடைய முடிவில்லாத கைங்கரியத்தை அடைந்தேன், விடுவேனோ - இனிமேல் விடுவேனோ ?

(கருத்து) திருப்பாற்கடலில் ஆதிசேஷசயநத்தில் படுத்துக்கொண்டு தியாநம் செய்துகொண்டிருக்கிற என் ஸ்வாமியே! உன்னை நினைத்து நினைத்து பிழைத்து ஸம்ஸாரிகளை விட்டுப் பிரிந்து, உன்னுடைய கைங்கரியத்துக்கு விரோதியான என்னுடைய முடிவில்லாத க்ரூரமான பொறுக்கமுடியாத பாபங்களைப் போக்கி, முடிவில்லாத உன்னுடைய கைங்கரியத்தை அடைந்தேன். இப்படி ஆனபின்பு உன்னை விடுவேனென்கிற எண்ணம் எப்படி உண்டாகும் ?

குறிப்பு— (1) ஆதிசேஷன் எம்பெருமானை அநுபவித்து அதினாலுண்டான ஸந்தோஷத்தாலே குளிர்ந்த தலைகளையுடையவனாய் கூத்தாடுகிறானென்று கருத்து. அவனுக்கு ஐந்து தலைகளோடு கூடிய ரூபமுமுண்டு.

(2) எம்பெருமானுடைய தியானமாவது—அவனுடைய திவ்விய ரூபங்களையும் குணங்களையும் அநுபவிப்பது.

(3) உய்ந்து—எம்பெருமானுடைய ஜ்ஞாநமில்லாதபோது இருந்துமில்லாதவன்போல் ஒருவன் ஆகிறான். அவன் ஜ்ஞாநம் வந்த பிறகுதான் அவனுக்கு இருப்பு உண்டாகிறது. இந்த இருப்பை "உய்ந்து" என்று சொல்லியிருக்கிறது.

இ—ம். விடுவேனோ.ஓகாரத்திற்கு எதிர்மறைப்பொருள்; விடேன் என்று அர்த்தம். (5)

---

அவ:— எம்பெருமானுடைய கைங்கரியம் கிடைத்தபின் தாம் ஆசைப்படவேண்டியது ஒன்றுமில்லையென்று இதில் சொல்லுகிறார்—

உன்னைச் சிந்தைசெய்து செய்துன் னெடுமா மொழியிசை பாடியாடி
முன்னைத் தீவினைகண் முழுவேர ரிந்தனன்யா [யேன்
னுன்னைச் சிந்தையினா லிகழ்ந்த விரணிய னகல்மார்வங் கீண்ட
முன்னைக் கோளரியே முடியாததேன் னெனக்கே. [வேன்

(ப-ரை) உன்னை சிந்தை செய்து செய்து-உன்னை நினைத்து நினைத்து, உன் நெடு மொழி - உன் விஷயமான விஸ்தாரமான ஸூக்திகளை, மா இசை பாடி - பெரிய ராகத்தோடு பாடி, ஆடி- பாட்டுக்குத் தகுந்த அபிநயத்துடன் கூத்தாடி, என் முன்னை தீவினை முழு - என்னால் முன்னாலே செய்யப்பட்ட கொடியதான எல்லா பாபங்களையும், வேர் யான் அரிந்தனன் - வாஸனையுடன் நான் போக்கினேன். உன்னை சிந்தையினால் தூஷித்த - உன்னை வாயால் மாத்திரமில்லாமல் மனதாலும் இகழ்ந்த, இரணியன் அகல் மார்வம் கீண்ட - ஹிரண்யகசிபுவின் அகலமான மார்பைப் பிளந்த, முன்னை என் கோள் அரியே - முந்துகிறவனான என்னுடைய பலமுள்ள நரசிங்கனே! எனக்கு - (உன்னுடைய பிரஸாதத்தையடைந்த) எனக்கு, முடியாதது என்?

(கருத்து) உன்னை மனதாலே நினைத்து நினைத்து உன் விஷமான ஸூக்திகளைக் கானத்துடன் வாயால் பாடி, அதினாலுண்டான ஸந்தோஷத்தாலே பாட்டுக்குத் தகுந்தபடி அபிநயம் செய்துகொண்டு உடம்பால் கூத்தாடி, இப்படி மூன்று கரணங்களாலும் உன்னை அநுபவித்து, உன்னுடைய கைங்கரியத்துக்கு இடைஞ்சலாயிருந்த என்னுடைய எல்லா பாபங்களையும் வாஸனைகளுடன் போக்கினேன். ஆச்ரிதனான ப்ரஹ்லாதன் உன்னை ஒன்றை கேட்பதற்கு முன்னாலேயே, நரசிங்கனாய் அவதாரம் பண்ணி, அவனுக்கு விரோதத்தைச் செய்த ஹிரண்ய கசிபுவை ஸம்ஹாரம் பண்ணினதுபோல் ஆச்ரிதன் உன்னை ஒன்று வேண்டுவதற்கு முன்னாலே அதை முடித்துக் கொடுக்கும் ஸ்வபாவமுள்ளவனே! உன்னுடைய பிரஸாதத்தையடைந்தபின்பு, எனக்கு ஆசைப்பட்டு கிடைக்காதது என்ன இருக்கிறது?

குறிப்பு— (1) 'என் கோளரியை' என்பதற்கு ப்ரஹ்லாதன் விஷயத்தில் எம்பெருமான் செய்ததைத்தன் விஷயத்தில் செய்ததாக ஆழ்வார் எண்ணினாரென்று கருத்து. ஒரு ஆச்ரிதனுக்காகச் செய்ததை தனக்குச் செய்ததாக எவன் எண்ணுகிறதில்லையோ, அவனுக்கு எம்பெருமான் ஸம்பந்தமில்லை என்று சொல்லலாம்.

இ—ம். அரிந்தனன்-அரிந்தேன், தன்மை வினைமுற்று.(6)

அவ— தம்மிடத்தில் எம்பெருமானுக்கு உண்டான பிரீதியானது தம்மைச் சேர்ந்தவர்களிடத்தில் கூடச்சென்றது. இப்படித் தமக்கு பிரஸாதம் செய்தபின்பு தமக்கு முடியாதது ஒன்றுமில்லை என்று இதில் சொல்லுகிறார்:—

முடியாத தேன்னேனக்கே லினிமுழு வேழுலகு முண்டானுக
தடியேனுள் புகுந்தா னகல்வானு மல்லனினிச் [ந்துவந்
சேடியார் நோய்க ளேல்லாந் துறந்தேமர் கீழ்மேலேழு பிறப்பும்
விடியாவெந் நரகத்தேன்றுஞ் சேர்தன் மாறினரே. (எ)

(ப-ரை) முழு ஏழ் உலகும் உண்டான் - ஏழு உலகங்கள் முழுவதையும் பிரளயகாலத்தில் தன் வயிற்றில் வைத்துக்கொண்டிருந்தவன், உகந்து வந்து - பிரீதியுள்ளவனாய் வந்து, அடியேன் உள் புகுந்தான் - தாஸனான என்னுள் புகுந்தான்; இனி அகல்வானும் அல்லன் - இனிமேல் என்னைவிட்டுப் பிரிகிறவனும் இல்லை. இனி, எனக்கு எல் - என்னால், முடியாதது என், கீழ்மேல் எழு பிறப்பும் எமர் - எனக்குக் கீழே ஏழு தலைமுறையும், மேலே ஏழு தலைமுறையுமான என்னைச்சேர்ந்தவர்கள், செடி ஆர் நோய்கள் எல்லாம் துறந்து - செடிகள்போல் நிறைந்த எல்லா வியாதிகளையும் துரத்திவிட்டு, விடியா வெம் நரகத்து - விடியாத (முடிவுக்கு வாராத)பொறுக்கமுடியாத நரகத்தில், (ஸம்ஸாரத்தில்) என்றும் சேர்தல் மாறினரே - எப்போதும் சேருதலை கழித்தார்கள்.

(கருத்து) பிரளய காலத்தில் ஏழு உலகங்கள் முழுவதையும் தன் வயிற்றில் வைத்துக்கொண்டிருந்த ஸர்வேசுவரன் பிரீதியுடன் வந்து தாஸனான என் மனதுக்குள் புகுந்தான். அவனுக்கு இருக்கிற ஆசையானது என் வரையில் நிற்காதே என்னைச் சேர்ந்தவர்களிடமும் போயிருக்கிறது. ஆகையால் அவன் என்னைவிட்டுப் போக எண்ணமில்லாதவன். இப்படி அவன் பிரஸாதம் கிடைத்தபின் எந்த என் ஆசையானது நிறைவேறாதிருக்கும்?

குறிப்பு— பாட்டில் நோய்களென்பது அவித்யை, கர்மம், வாஸனை முதலானவைகள்.

(2) நரகமானது அதில் இருப்பவர்களுக்கு நரகமென்று தோன்றும். அதை விட்டுவரவேணுமென்கிற ஆசையுண்டாகும்.

ஸம்ஸாரமோ நரகமாயிருந்தும் அப்படி அதில் இருப்பவர்களுக்குத் தோன்றுவதில்லை. ஆகையால் நரகத்தைக் காட்டிலும் அது கொடுமையானது; அதற்கு முடிவுமில்லை.

(3) ஆழ்வாரைச் சேர்ந்தவர்கள் அவித்யை முதலானவைகளைப் போக்கி ஸம்ஸாரத்தில் சேர்ந்திருக்கமாட்டார்கள் என்கிற விஷயம் எம்பெருமானுக்கு அவர்களிடத்தில் உண்டான பிரீதியின் காரியம். காரியத்தைச் சொன்னதற்கு அதின் காரணமான பிரீதியைச் சொல்லுவதில் கருத்து.

இ—ம். விடியா - விடியாத ; பெயரெச்சம். (7)

---

அவ:— இப்படி எம்பெருமானை அநுபவிக்கும்போது ஒரு வேளை தம்மை விட்டுப் பிரிந்து ஆடியாடியில் போல் துக்கத்தை உண்டுபண்ணுவனோ என்று பயமுண்டாகி அவனைத் தம்மை விடக்கூடாதென்று இதில் பிரார்த்திக்கிறார்—

மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்தடியை யடைந்துள்ளந் தேறி
யீறிலின்பத் திருவெள்ளம் யான்மூழ் கினன்
பாறிப்பாறி யசுரர்தம் பல்குழாங் கணீறெழப் பாய்பறவையோன்
றேறிவீற்றிருந் தாயுன்னை யென்னுணீக்கே லெந்தாய். (அ)

(ப-ரை) மாறி மாறி - ஒரு தடவை பிறப்பது போல் பிறக்காமல், பல பிறப்பும் பிறந்து - அநேகம் தடவை பிறந்து, அடியை அடைந்து - (தற்செயலாய்) உன் திருவடிகளை அடைந்து, உள்ளம் - மனது, தேறி - நன்றாய்த் தெளிந்து, ஈறு இல் இன்பம் திருவெள்ளம் யான் மூழ்கினேன் - முடிவில்லாத ஆநந்த பிரவாஹத்தில் நான் முழுகினேன். அசுரர்தம் பல் குழாங்கள் - அஸுரர்களுடைய பல கூட்டங்கள், பாறி பாறி - ஓடி ஓடி, நீறு எழ - தூளியாய் கிளம்பும்படி, பாய் - அவர்கள் பின்னால் ஓடுகிற, பறவை ஒன்று - ஒப்பில்லாத கருடபக்ஷியின் மேலே, ஏறி வீற்றிருந்தாய் - ஏறி பெருமை தோன்றும்படி இருந்தவனே! எந்தாய் - என் ஸ்வாமியே, என்னுள் உன்னை நீக்கேல் - என்னிடமிருந்து உன்னைப் பிரிக்காதே.

(கருத்து) உன்னோடு சேருவதற்கு விரோதியான ஸம்ஸாரத்திலிருந்து ஒரு தடவைபோல் மறு தடவை பிறக்காமல்

அநேகம் தடவை பிறந்து இந்தப் பிறப்பில் உன்னுடைய நிர்ஹேதுகமான கிருபையால் உன் திருவடிகளை அடைந்து உன் வைலக்ஷண்யத்தை நன்றாக அறிந்து, முடிவில்லாத உன் அநுபவமாகிய ஆநந்தப்பிரவாஹத்தில் மூழ்கியிருக்கிறேன். ஒருவேளை அது முடிந்துபோகுமோ என்று பயமுண்டாகிறது. நீ என்னை விட்டுப் பிரியக்கூடாது. ஆச்ரிதர்களுக்காக கருடன் மேல் ஏறிக்கொண்டு அவர்கள் விரோதிகளை நீ நாசம் பண்ணுகிறவன் அல்லவா? இப்படி நான் வேண்டுகிறதையும் செய்ய வேணும்.

குறிப்பு— (1) இங்கே "பல பிறப்பும் பிறந்து" என்பதைக் கொண்டு ஆழ்வார் நம்மைப்போல ஸம்ஸாரியென்று நினைக்கக்கூடாது. அவரை நித்தியஸூரியென்றும், ஆசாரியனாய் அவதரித்து நமக்கு நல்ல விஷயங்களை உபதேசிக்க வந்தவரென்றும் பிரமாணங்கள் சொல்லுகிறபடியால், உபதேசத்தைப் பெறுகிற நம்மில் ஒருவராகத் தம்மைக் காட்டிக்கொண்டு, நாமும் பல பிறப்பும் பிறந்து ஸம்ஸாரத்தில் முழுகியிருக்கிறோமென்று உபதேசிக்கிறார் என்று கொள்ளவும்.

(2) நிர்ஹேதுகமாய் என்பதற்கு முக்கியமான காரணம் இல்லையென்று கருத்து,

இ—ம். மூழ்கினன் - தன்மை வினைமுற்று. நீக்கேல் - எதிர்மறை ஏவல்வினைமுற்று. (8)

---

அவ:— கீழ்ப்பாட்டில் தம்மை விட்டுப் போகக்கூடாது என்று பிரார்த்தித்து இதில் போகவேணுமென்று நினைத்தாலும் போகக்கூடிய இடமில்லை என்கிறார்—

எந்தாய் தண்டிருவேங் கடத்துணின்று யிலங்கை செற்றாய் மராமரம்
பைந்தா ளேழுருவ வொருவாளி கோத்தவில்லா [குழைத்தவெம்
கோந்தார் தண்ணந் துழாயி னமுதே யுன்னையென்னுள்ளே
மைந்தா வானேறே யினியெங்குப் போகின்றதே. (௯)

(ப-ரை) தண் திருவேங்கடத்துள் நின்றாய் - குளிர்ந்த வேங்கடமென்கிற மலையிலிருக்கிறவனே! இலங்கை செற்றாய் - இலங்கையை நாசம் செய்தவனே! மாமரம் பைந்தாள் ஏழும் -

மராமரங்களுடைய பருத்த அடிபாகங்களின் ஏழிலும், உருவ-உள்ளே புகுந்து ஓடும்படி, ஒரு வாளி கோத்த வில்லா - ஒரு பாணத்தை கோத்த வில்லையுடையவனே! கொந்து ஆர் தண் அம் துழாயினாய் - இலைகள் நிறைந்த குளிர்ந்த அழகிய துளஸியை உடையவனே! வான் ஏறே-பரமபதத்திலிருக்கிற நித்தியஸூரிகளுக்குத் தலைவனே! அமுதே - அமுதம்போல் இனியனானவனே! எந்தாய் - (இப்படி உன்னுடைய ஆச்சரியங்களான வேலைகளை நான் அநுபவிக்கும்படி செய்த) ஸ்வாமியே! உன்னை என்னுள் குழைத்த - (என்னை விட்டுப் பிரியாதபடி) உன்னை என்னோடு ஒன்றாகப் பண்ணின, என் மைந்தா - என்னுடைய யுவாவே! இனி எங்கு போகின்றது - இனி எங்கே போகிறது?

(கருத்து) திருமலையில் நீ எழுந்தருளியிருப்பதையும் ராமனாக அவதாரம் செய்து இலங்கையை நாசம் செய்ததையும் ஸுக்கிரீவனுக்கு நம்பிக்கை வர ஏழு மராமரங்களைத் துளைத்ததையும் துளஸிமாலையைத் தரித்துக்கொண்டிருப்பதனாலுண்டாகும் அழகையும் பரமபதத்தில் நித்தியஸூரிகளுடன் இருக்குமிருப்பையும் இவைகளெல்லாம் எனக்குக் காட்டி உன்னை நான் அமுதம்போல் அநுபவிக்கும்படி செய்தாய். என்னை விட்டுப் பிரியாதபடி உன்னை என்னுடன் ஒன்றாகச் சேர்த்தாய். இதனாலே உனக்குப் புதிதாய் யௌவநமுண்டாயிருக்கிறது. இப்படியிருக்கிற நீ என்னைவிட்டுப் போகத்தான் இடமுண்டோ? போவேன் என்றால் தான் போகமுடியுமோ?

குறிப்பு— உன்னை விட்டுப் பிரியமுடியாத என்னை விட்டு உன்னை நினைக்காமல் இருக்கிறவர்களிடம் போகப்போகிறாயா என்று கருத்து. (9)

---

அவ:— தம்மை விடவேண்டாமென்று பிரார்த்தித்து முதல் பாட்டில் போல தாமும் அவனை விடேன் என்று இதில் சொல்லுகிறார்.

போகின்ற காலங்கள் போயகாலங்கள் போதுகாலங்க டாய்தந்தை
ராகின்று யுன்னைநா னடைந்தேன் விடுவேனோ [யுயி
பாகின்ற தோல்புகழ் மூவுலகுக்கும் நாதனே பரமா தண்வேங்கட
மேகின்றாய் தண்டுழாய் விரைநாறு கண்ணியனே. (ய)

(ப-ரை) பாகின்ற தொல் புகழ் - எங்கும் பிரஸித்தமான அநாதியான நல்ல குணங்களை உடையவனாய், மூ உலகுக்கும் நாதனே - மூன்று விதமான சேதநர்களுக்கும் மூன்று விதமான அசேதநங்களுக்கும் ஸ்வாமியே! பரமா-உனக்கு மேற்பட்டவன் இல்லாதவனே! தண் வேங்கடம் மேகின்றாய் - ஸம்ஸார தாபத்தைப் போக்கும் திருமலையில் பிரீதியுடன் இருப்பவனே! தண் துழாய் விரை நாறு கண்ணியனே - (என்னுடன் சேர்ந்ததனால்) குளிர்மையுண்டான துளஸியின் வாஸனை வாஸிக்கும் மாலையை உடையவனே! போகின்ற காலங்கள் - நடக்கிற காலத்தில், போய காலங்கள் - போனகாலத்தில், போகு காலங்கள் - வரும் காலத்தில், தாய் தந்தை உயிர் ஆகின்றாய் - தாயைப்போலவும், தகப்பனைப் போலவும், தன்னைப்போலவும் உபகாரங்களைச் செய்கிறவனே! உன்னை நான் அடைந்தேன், விடுவேனோ?

(கருத்து) பிள்ளைகளுக்குத் தாய் தகப்பன் செய்யும் நன்மைகளையும், ஒருவன் தனக்குச் செய்துகொள்ளும் நன்மைகளையும் எல்லாக் காலங்களிலும் எனக்கும் செய்யும் ஸ்வபாவம் உள்ளவனே! இயற்கையாய் எப்போதுமுள்ள நல்ல குணங்களை உடையவனே! மூன்று விதமான சேதநர்களுக்கும் மூன்று விதமான அசேதநங்களுக்கும் ஸ்வாமியே! ஒத்தவரும் மேற்பட்டவரும் இல்லாதவனே! திருமலையில் எழுந்தருளி எனக்குக் கூட ஸுலபனாயிருக்கிறவனே! துளஸி மாலையை அணிந்து மிகவும் இனியவனானவனே! உன்னை அடைந்தேன். இனி உன்னை விடுவேனோ? ஒரு நாளும் விடமாட்டேன்.

குறிப்பு— தம்மை விட்டுப் பிரிவதற்குத் தாமும் காரணமன்று, எம்பெருமானும் காரணமன்று, வேறொன்றும் காரணமன்று என்று கருத்து. (10)

---

கண்ணித் தண்ணந் துழாய்முடிக் கமலத் தடம்பெருங் கண்ண [னைப்புகழ்
நண்ணித் தென்குருகூர்ச் சடகோபன் மாறன் சொன்ன
வெண்ணிற் சோர்விலந் தாதி யாயிரத்துள் ளிவையுமோர்பத் திசை [யோடும்
பண்ணிற் பாடவல் லாரவர் கேசவன் தமரே. (கக)

(ப-ரை) கண்ணி தண் அம் துழாய் முடி - மாலையாய்த் தொடுக்கப்பட்ட குளிர்ந்த அழகான துளஸியைக் கிரீடத்தில் உடையவனும், கமலம் தடம் பெரும் கண்ணனை - தாமரைப்பூ இதழ்போல் அகன்றும் நீண்டுமிருக்கும் திருக்கண்களையுடையவனுமிருக்கிற எம்பெருமானை, புகழ் நண்ணி - அவனுடைய நல்ல குணங்களைக் கிட்டி, (நன்றாய் அநுபவித்து) தென் குருகூர் சடகோபன் மாறன் சொன்ன - அழகான குருகூரில் மாறன் குலத்தில் அவதரித்த ஆழ்வார் சொன்ன, எண்ணில் சோர்வு இல் - மாநஸாநுபவத்தில் குறைவில்லாத (அநுபவித்த விஷயத்தில் ஒன்றையும் விடாமல் சொல்லப்பட்ட), அந்தாதி ஆயிரத்துள், இவையும் ஓர் பத்து - இந்த ஒப்பில்லாத பத்துப் பாட்டுக்களை, இசையொடும் பண்ணில் பாட வல்லார் - பாடுகிற விதப்படி ஏழு ஸ்வரங்களுடன் பாட சக்தியுள்ளவர்கள், கேசவன் தமரே - கேசவனுக்குத் தாஸராயிருப்பர்கள்.

(கருத்து) எம்பெருமானுடைய ஸ்வரூபத்தையும் ரூபங்களையும் குணங்களையும் உள்ளபடியே விபூதிகளையும் அநுபவித்து, அப்படி அநுபவித்தவைகளில் ஒன்றையும் விடாமல் ஆழ்வார் அருளிச்செய்த இந்த பத்துப் பாட்டுக்களையும் காநசாஸ்திரப்படி ஏழு ஸ்வரங்களுடன் பாடசக்தியுள்ளவர்கள் கேசவனுக்குத் தாஸராயிருப்பார்கள்.

குறிப்பு— (1) அவர்களை "கேசவன் தமர்"என்றே எல்லாரும் சொல்லுவர்கள். இதைத்தவிர வேறு ஆகாரம் அவர்களுக்கு இல்லை என்று கருத்து.

(2) மாறன் என்பது ஆழ்வாருடைய குடிப்பெயர். (11)

---

[illegible] (27)

இந்தத் திருவாய்மொழியில் எம்பெருமான் தன்னை விட்டு ஆழ்வார் பிரிந்துபோவரோ என்று பயப்பட்டதாகவும், அவர்

அவனை பத்துக் காரணங்களால் விடுகிறதில்லை என்று சொன்ன தாகவும் சொல்லியிருக்கிறது. அந்தக் காரணங்களாவன— (1) எம்பெருமான் தான் மிகவும் இனியவனாயிருப்பதை ஆழ்வாருக்குத் தெரிவித்தது; (2) ஆச்ரிதரான அவரையே பார்த்துக் கொண்டிருந்தது; (3) அநேகவிதமான போகங்களை அவருக்குக் கொடுத்தது; (4) விடுவதற்கு முடியாதவனாயிருந்ததைக் காண்பித்தது; (5) தன் கைங்கரியத்தை அவரிடத்தில் நிலையாய் நிறுத்தினது; (6) கைங்கரியத்துக்கு விரோதியான அவர் பாபங்களைப் போக்கினது; (7) அவரைச் சேர்ந்தவர்களெல்லாரும் கடைத்தேறும்படி முடியாதவைகளையும் செய்தது; (8) தம்மை விடுவனோ என்கிற பயத்தை அவருக்கு உண்டுபண்ணினது; (9) அவரை விட்டுப் பிரியாதபடி தன்னை அவருடன் ஒன்றாகச் சேர்த்தது; (10) பலவித உபகாரங்களைச் செய்தது.

---

# ஏழாம் திருவாய்மொழி.

அவ:— கீழ்த் திருவாய்மொழியில் ஏழாவது பாட்டில், எம்பெருமானுடைய பிரீதியானது தம்மைச் சேர்ந்தவர்களிடம் கூடச் சென்றதென்று சொன்னதை இந்தத் திருவாய்மொழியில் விரிவாய்ச் சொல்லுகிறார்—

(கலித்துறை.)

கேசவன் றமர்கீழ் மேலெம ரேழெழு பிறப்பும்
மாசதி ரிதுபெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா
வீசனென்கரு மாணிக்கமென் செங்கோலக் கண்ணன்
[விண்ணோர்
நாயக னெம்பிரா னெம்மா னாராயண னாலே. (க)

(ப-ரை) ஈசன் - ஸர்வேசுவரன், என் கருமாணிக்கம்-என்னுடைய நீல ரத்நம் போன்றவன், என் செம் கோலம் கண்ணன்-என்னுடைய சிவந்த அழகிய திருக்கண்களையுடையவன், விண்ணோர்நாயகன்-நித்தியஸூரிகளின் தலைவன், எம்பிரான்-எனக்கு உபகாரகன், எம்மான் - என்னுடைய ஸ்வாமி, (இப்படியிருக்கிற) நாராயணனாலே, கீழ் மேல் ஏழு ஏழு பிறப்பும் - எனக்குக் கீழே ஏழு தலைமுறையும், மேலே ஏழு தலைமுறையுமாகிய, எமர் - என்னைச் சேர்ந்தவர்கள், கேசவன் தமர் - கேசவனுக்குத் தாஸரானார்கள், இது மா சதிர் - இந்த பெரிய ஸாமர்த்தியத்தை, பெற்று - அடைந்து, நம்முடை வாழ்வு, வாய்கின்ற - பலித்திருக்கிறது, ஆ - இதென்ன ஆச்சரியம் !

(கருத்து) ஸர்வேசுவரனாய், நீலரத்நம் போன்ற திருமேனியையும் அழகான திருக்கண்களையும்உடையவனாய், நித்தியஸூரிகளின் தலைவனாய், எனக்கு உபகாரம் செய்தவனாய் எனக்கு ஸ்வாமியாய் இருக்கிற நாராயணனாலே என்னைச்சேர்ந்தவர்களெல்லாரும் அவனுக்குத் தாஸரானார்கள். அதாவது—எம்பெருமானே போகமாக எண்ணுகிற ஸம்பத்தை உடையவரானார்கள். அல்பப் பிரயத்தினத்தாலே இந்த பெரிய பலன் நமக்குக் கிடைத்திருக்கிறது. இதென்ன ஆச்சரியம் !

குறிப்பு— (1) 'கேசவன்' என்கிற சொல்லுக்கு பிரம்மாவையும் ருத்திரனையும் உண்டு பண்ணினவன் என்று பொருள்.

(2) பாட்டில் பிறப்பைச் சொன்னது உபலக்ஷணம். ஆகை யினுல் 'எமர்' என்கிற சொல்லுக்கு பிறப்பாலும், வித்யை யைப் பெறுவதாலும் தம்முடன் சேர்ந்தவர்கள்; அதாவது— பிள்ளை பேரன்களாகவும், சிஷியன் பிரசிஷியனுகவும் தம்முடன் சேர்ந்தவர்கள் என்று கருத்து.

இ—ம். தம் + அர் = தமர் - தம்மைச் சேர்ந்தவர். எம் + அர் = எமர் - எம்மைச் சேர்ந்தவர். வாய்க்கின்ற - (வாய்க்கின்றது) நிகழ்கால வினைமுற்று. ஆ-வடமொழி ஹா. ஆச்சரியத்தைக் காட்டுகிறது. (1)

---

அவ:— கீழ்ப்பாட்டில், எம்பெருமானை ஈசனென்று சொன்னதற்கு இதில் காரணம் சொல்லுகிறுர்—

நாரணன் முழுவே ழுலகுக்கு நாதன் வேதமயன்
காரணங் கிரிசை கருமமிவை முதல்வ னேந்தை
சீரணங் கமரர் பிறர்பலரும் தொழுதேத்த நின்று
வாரணத் தைமருப் போசித்த பிரானேன் மாதவனே. (உ)

(ப-ரை) நாரணன் - நாராயணன், முழு ஏழு உலகுக்கும் நாதன் - ஏழு உலகங்கள் முழுவதையும் நியமநம் செய்கிறவன், வேதமயன் - வேதத்தினாலே சொல்லப்பட்டவன், காரணம் - ஒரு வேலைக்கு ஸாதநமானது, கிரிசை - அந்த வேலை, கர்மம் - அதினுல் செய்யப்பட்டது, இவை முதல்வன் - இவையெல்லாவற்றிற்கும் காரணமானவன், சீர் அணங்கு - லக்ஷ்மியாகிற தைவப்பெண்ணும், பிறர் பலர் அமரரும் - அவனைக் காட்டிலும் வேறுன பல நித்திய ஸூரிகளும், தொழுது ஏத்த - வணங்கி ஸ்தோத்திரம் செய்ய, நின்று - (இதனாலே வலிமை அதிகமாகி) நின்று, வாரணத்தை மருப்பு ஒசித்த - (குவலயா பீடமென்கிற) யானையின் கொம்பை முறித்தவன், பிரான் - எனக்கு உபகாரம் செய்தவன், என் மாதவன், எந்தை - எனக்கு ஸ்வாமி.

(கருத்து) எல்லாருக்கும் ஆத்மாவாய், ஏழு உலகம் முழுவதையும் நியமநம் பண்ணுகிறவனுய், எல்லா வேதங்களாலும்சொல்லப்பட்டவனுய், காரணத்திற்கும் கிரியைக்கும் மஹத் அஹங்காரம் முதலிய காரியத்திற்கும் நிர்வாஹகனுய் இருக்கிற எம்பெருமான்,

எனக்கு இன்பத்தைக்கொடுப்பதற்காக பிராட்டியும் நித்தியஸூரிகளும்தன்னை வணங்கி ஸ்தோத்ரம்பண்ண, அதினால் அதிக பலமுள்ளவனாகி, குவலயாபீடம் என்கிற யானையின் கொம்பைமுறித்தான். இப்படி உபகாரம் செய்த மாதவன் எனக்கு ஸ்வாமி; இவனால் என்னைச் சேர்ந்தவர்கள் கேசவன் தமர் ஆனார்கள்.

குறிப்பு— (1) 'நாரணன்' என்கிற சொல்லுக்கு நாரங்களுக்கு ஆதாரன் என்று பொருள். நாரங்கள் நரனான எம்பெருமானைச் சேர்ந்தவைகள். அவைகளுக்கு ஆத்மாவாயிருந்து அவைகளைத் தூக்குகிறவன் என்று பொருள்.

(2) எம்பெருமான் ஈசுவரனாகையால், ஒருவன் விஷ்ணு பக்தன் ஆனால், அவனைச்சேர்ந்தவர்களையும் விஷ்ணு பக்தர்களாகப் பண்ணுவன்.

(3) காரணம் கிரிசை கருமம்—ஒரு குயவனால் செய்யப்படும் சட்டிப்பானைகள் கர்மம் (காரியம்). தண்டமும் சக்கிரமும் அது செய்வதற்குக் காரணம். அதைச் செய்வது - (கிரிசை) வேலை. அதுபோல, மஹத் அஹங்காரம் முதலானவைகள் செய்யப்பட்டவைகள். அவைகள் உண்டாவதற்கு ஸாதநம் பிரகிருதி, இவைகளுக்கும் எம்பெருமான் காரணம். (2)

---

அவ:— தம்மைச் சேர்ந்தவர்களையும் வைஷ்ணவர்களாகப் பண்ணும்படி எம்பெருமான் தம்மை வைஷ்ணவனாகப் பண்ணினதற்குக் காரணத்தை இதில் சொல்லுகிறார்—

மாதவ னென்றதே கொண்டேன்னை யினியிப் பாற்பட்டது
யாதவங் களுஞ்சேர் கொடேனேன் றென்னுள் புகுந்திருந்து
தீதவங் கெடுக்கு மமுதஞ் செந்தாமரைக் கட்குன்றங்
கோதவமி லென்கன்னற் கட்டி யெம்மானேன் கோவிந்தனே. (௩)

(ப-ரை) மாதவன் என்றதே கொண்டு - மாதவன் என்கிற சொல்லையே நான் சொன்னேன், அதைக் காரணமாகக்கொண்டு, இனி இப்பால்பட்டது - இந்தச் சொல்லை சொன்ன காலத்திற்கு மேற்பட்டகாலமெல்லாம், யாது அவங்களும் - (அவனை விட்டுப் பிரிவதுஆகிய)எந்த கெடுதல்களும்,சேர்கொடேன் என்று·என்னிடம் சேருவதைச் செய்கிறதில்லைஎன்று ஸங்கல்பித்து, என்னுள்

புகுந்து இருந்து - என் மனதில் புகுந்து அதிலேயே நிலையாயி ருந்து, கோது அவம் இல் கன்னல் கட்டி - துரும்பு இல்லாததா யும், காய்ச்சலில் குறைவு அதிகமில்லாமலுமிருக்கிறசர்க்கரைக்கட் டியாக ஆனான், அவன்-செந்தாமரைக்கண் குன்றம்-செந்தாமரை போன்ற திருக்கண்களையும் மலைபோன்ற திருமேனியையுமுடை வன், தீது அவம் கெடுக்கும் அமுதம் - அநாதியான என் தோ ஷங்களையும், இப்போது உண்டான நான் அவன் கிட்ட வரத் தகாதவன் என்கிற தப்பு எண்ணத்தையும் கெடுத்து அமிருதம் போல் இனியவனானவன். எம்மான் என் கோவிந்தன் - என்னு டைய ஸ்வாமியான கோவிந்தன்.

(கருத்து) நான் 'மாதவன்' என்கிற சொல்லை, அதைச் சொல்லவேணுமென்கிற எண்ணமில்லாமல் பிராட்டியை ஆச்ர யித்தவன் சொல்லுவதைப்போல் சொன்னேன். இதைக் கேட்டு, உண்மையாகப் பிராட்டியை ஆச்ரயித்தவனைப் பார்ப் பதுபோல் என்னையும் பார்த்து, "இவரையா நான் இவ்வளவு காலம் சேராமல் பிரிந்திருந்தது" என்று மோஹித்து, வெகு காலம் சென்ற பின் பிரஜ்ஞை திரும்பி வந்து, "போனது போயிற்று, அதைப்பற்றி ஒன்றும் செய்ய முடியாது; இனி மேலாவது அவர் தம்மைத் தாழ்ந்தவன் என்று எண்ணவும், என்னை விட்டுப் பிரியவும் நான் விடுகிறதில்லை" என்று தீர்மா னித்து, அளவில்லாத அழகையுடைய திருக்கண்களையும், மலை போன்ற திருமேனியின் அழகையுமுடையவனாய், என்னுடைய முன்னிருந்த தோஷங்களையும் இப்போதுண்டான நான் அவ னுக்குத் தகாதவன் என்கிற தப்பு எண்ணத்தையும் கெடுத்து எனக்கு அளவில்லாத இன்பத்தைக் கொடுக்கிறவனாய், கோபர்க ளுக்குப் போல் ஆச்ரிதர்களுக்கு ஸுலபனாய், அதினாலே கோவிந் தன் என்கிற திருநாமத்தை உடையவனாய், மிகுந்த கருணையுள்ள வனாய் இருக்கிற எம்பெருமான் என் மனதுக்குள் புகுந்திருந்து அதில் நிலையாக இருந்து, எனக்கு மிகவும் இன்பத்தைக்கொடுக்கி றவனாக ஆகிறான்.

குறிப்பு—(1)'மாதவனென்றதே' என்றதில் உள்ள ஏகாரத் தாலே, அந்தச் சொல்லின் அர்த்தத்தையும், பிராட்டியிடத்தி லும் எம்பெருமானிடத்திலும் பக்தியுமில்லாமல் வெறும் சொல் சொல்லப்பட்டது என்று காட்டப்படுகிறது.

(2) 'தீது அவம்' என்கிற சொற்களுக்கு தோஷமென்று ஒரே பொருள். ஆகையாலே ஒன்றுக்கு அநாதியாகஇருக்கும் தோஷங்களென்றும், மற்றொன்றுக்கு ஒரு காரணத்தாலே வந்த தோஷமென்றும் பொருள் கொள்ளவேண்டும். இங்கே அந்தக்காரணமாவது- நான் எம்பெருமானுக்குத் தகாதவன் என்கிற எண்ணம். இப்படியே 'கோது அவம்' என்பதற்கும், ஒன்றுக்குக் கன்னல் கட்டியில் துரும்பு இருப்பதும், மற்றொன்றுக்கு காய்ச்சலில் குறைவும் பொருளாகக்கொள்ளவேணும்.

(3) தம்மை ஸ்ரீ வைஷ்ணவனாகப் பண்ணினதற்குக் காரணம் 'மாதவன்' என்று சொன்னதே என்று ஏற்படுகிறது.

இ—ம். மாதவன் என்றதே ஏகாரத்திற்குப் பிரிநிலைப் பொருள். கொடேன்-தன்மை எதிர்மறை வினைமுற்று. (3)

---

அவ:— முதல் பாட்டில் தம்மைச் சேர்ந்தவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஆனார்கள் என்று சொன்னார்; இப்படி அவர்களைச் செய்த எம்பெருமானுடைய ஸாமர்த்தியத்தை இதில் கொண்டாடுகிறார்—

கோவிந்தன் குடக்கூத்தன் கோவல னென்றென்றே குனித்துத்
தேவுந்தன்னையும் பாடியாடத் திருத்தி யென்னைக் கொண்டென்
பாவந் தன்னையும் பாறக்கைத் தெமரேழெழு பிறப்பும்
மேவுந்தன் மையுமாக்கி னான்வல்ல னெம்பிரான் விட்டுவே. (ச)

(ப-ரை) கோவிந்தன், குடம் கூத்தன் - பாற்குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு கூத்தாடினவன், கோவலன் - கோபாலன், என்று என்றே - இப்படிச்சொல்லிக்கொண்டே, குனித்து- கூத்தாடி, தேவும் - தேவத்வத்தையும், (அவன் ஸர்வேசுவரனாயிருப்பதையும்,) தன்னையும் - ஆச்ரிதர்களுக்கு உட்பட்டு அவர்கள் சொன்னதைச் செய்யும் ஸ்வபாவத்தையும், பாடி, ஆட - பாடிக்கொண்டு அபிநயத்துடன் கூத்தாட, திருத்தி-(இரும்பைப் பொன்னாகப் பண்ணுவதுபோல்) நன்றாகப்பண்ணி, என்னைக் கொண்டு - என்னை இப்படி அடிமையாகப் பண்ணி, என் பாவம் தன்னையும் பாற கைத்து - என்னுடைய பாபங்களை ஓடும்படி துரத்தி, ஏமர் ஏழெழு பிறப்பும், மேவும் தன்மையும் ஆக்கினான்-

தன்னையே விரும்பும் ஸ்வபாவமுள்ளவர்களாகப் பண்ணினான், எம்பிரான் - எனக்கு உபகாரகன், விட்டு - விஷ்ணு, வல்லன் - ஸமர்த்தன்.

(கருத்து) கோவிந்தன், குடக்கூத்தன், கோவலன் என்கிற அவனுடைய திருநாமங்களால் சொல்லப்பட்ட குணங்களையும் அவன் செய்த வேலைகளையும் சொல்லிக்கொண்டு ஸந்தோஷப் பட்டு பாடி கூத்தாடும்படி திருத்தி என்னைத் தனக்கு அடிமை யாகச்செய்துகொண்டான். மேலும் தன்னுடைய அநுபவத்துக்கு இடைஞ்சல்களாயிருந்த என் பாபங்களை ஓடும்படி செய்தான். அவன் இத்தோடு நிற்கவில்லை; என்னைச் சேர்ந்தவர்களையும், என்னைப்போல தன் திருவடிகளைச் சேரும்படி செய்தான். எனக்கு உபகாரம் செய்த விஷ்ணு ஸமர்த்தன்.

குறிப்பு:— 'குனித்து' என்பதற்கு கூத்தாடி என்று பொருளாய், இங்கே அதற்குக் காரணமான ஸந்தோஷப்படுவது பொருள். (4)

---

அவ:— எம்பெருமான், தம்மையும் தம்மைச் சேர்ந்தவர்களையும் ஸ்ரீவைஷ்ணவர்களாகப் பண்ணினதற்கு ஸாதநம் அவன் திருமேனி அழகே என்று இதில் சொல்லுகிறார்—

விட்டிலங்கு செஞ்சோதித் தாமரை பாதங்கைகள் கண்கள்
விட்டி லங்கு கருஞ்சுடர் மலையே திருவுடம்பு
விட்டி லங்கு மதியஞ்சீர் சங்குசக்கரம் பருதி
விட்டிலங்கு முடியம்மான் மதுசூ தனன்ற னக்கே. (ரு)

(ப-ரை) விட்டு - விஷ்ணுவான, (எங்கும் நிறைந்திருக்கிற) விட்டு இலங்கு முடி அம்மான்-தடைகளைவிட்டு விளங்குகிற கிரீடத்தையுடைய என் ஸ்வாமியான, மதுசூதனன் தனக்கு-மதுஸூதநனுக்கு, பாதம், கைகள், கண்கள், இலங்கு செம் சோதி தாமரை - விளங்குகிற சிகப்பு காந்தியுடைய தாமரைப் பூக்கள், திரு உடம்பு - திருமேனி, விட்டு இலங்கு கரும் சுடர் மலையே - தடையில்லாமல் விளங்குகிற கருப்புக் காந்தியையுடைய மலை. சீர் சங்கு - திருச்சங்கு, விட்டு இலங்கு மதியம் - கலைகளின் குறைவை விட்டுப் பூர்ணமாக விளங்கும் சந்திரன், சக்கரம், பருதி - ஸூரியன்.

(கருத்து) எங்கும் நிறைந்தவனாய், விளங்குகிற கிரீடத்தை உடையவனாய், எனக்கு ஸ்வாமியாய் இருக்கிற மதுதஸூதநனுக்கு திருவடிகளும் திருக்கைகளும்திருக்கண்களும்செந்தாமரை போல் இருக்கின்றன. அவனுடைய திருமேனி நீல காந்தியுள்ள மலைபோலவும், திருச்சங்கு பூர்ண சந்திரன் போலவும், திருச்சக்கிரம் ஸூரியன் போலவும் இருக்கின்றன. இந்த அழகை ஸாதநமாகக்கொண்டு என்னுள் புகுந்தருளினான். (5)

---

அவ— இப்படி எங்களைச் செய்தது எம்பெருமானுடைய விதி என்று இதில் சொல்லுகிறார்—

மதுசூதனை யன்றி மற்றிலேனெனன் றெத்தாலுங் கருமமின்றித்
துதிசூழ்ந்த பாடல்கள் பாடியாட நின்றூழி யூழிதோறு
மெதிர்சூழல் புக்கெனைத்தோர் பிறப்பு மெனக்கே யருள்கள்செய்ய
விதிசூழ்ந்த தாலெனக்கே லம்மான் திரிவிக் கிரமனையே. (சூ)

(ப-ரை) மதுசூதனனை அன்றி மற்று இலேன் - மதுஸூதநனைத்தவிர வேறு இல்லாதவன் என்று தீர்மானம் செய்து, எத்தாலும் கருமம் இன்றி - அவனைக்காட்டிலும் வேறான ஒரு பிரயோஜநத்தை ஆசைப்பட்டு அதற்காக ஒரு வேலை செய்வதில்லாமல், நின்று - நிலையாயிருந்து, துதி சூழ்ந்த பாடல்கள் - ஸ்தோத்ரத்துடன் சேர்ந்த பாட்டுக்களை, பாடி ஆட, நான் பாடி ஆடும்படி (ஆனேன்) ஊழி ஊழி தொறும் - ஒவ்வொரு கல்பத்திலும், எனக்கு ஓர் பிறப்பும் - (துக்கத்தாலே) ஒப்பில்லாத என்னுடைய எல்லாப் பிறப்புக்களிலும், எதிர் சூழல் புக்கு - (நான் மனிதனாய்ப் பிறந்தால் தானும் மனிதனாய்ப் பிறந்து) எனக்கு எதிரே வந்து (நான் தப்பிப் போகாதபடி என்னை வளைத்துக்கொண்டு, எனக்குக் கீழே சொன்னபடி கிருபையின் காரியங்களைச் செய்யும்படி), அம்மான் திருவிக்கிரமனை - ஸ்வாமியான திரிவிக்கிரமனை, எனக்கு ஏல் விதி சூழ்ந்தது - எனக்குத் தகுந்த விதியானது சூழ்ந்துகொண்டது.

(கருத்து) மதுஸூதநனை விட்டு எனக்கு வேறு பிராப்பியமில்லையென்று நான் தீர்மானம் செய்து, வேறு ஒரு பிரயோஜநத்துக்காகவும் வேலை செய்யாமல் எப்போதும் நிலையாயிருந்து அவனுடைய எல்லா குணங்களையும் காட்டுகிற ஸ்தோத்ர ரூப

மான பாட்டுக்களைப் பாடி ஆடும்படி ஆனேன். அநாதிகாலம் தொடங்கி இதுவரையில் என்னுடைய எல்லாப் பிறப்புக்களி லும் என்னை வசப்படுத்திக் கொள்ளுவதற்குத் தகுந்த ரூபங் களை எடுத்துக்கொண்டு தானும் பிறந்து என்னை வசப்படுத்திக் கொண்டு கீழே சொன்ன நன்மைகளைச் செய்யும்படி என் ஸ்வாமியான திரிவிக்கிரமனுக்குக் கிருபையாகிற விதி சூழ்ந்தது.

குறிப்பு— (1)விதி என்பது கர்மத்துக்கு உட்பட்ட ஜீவன் களுடைய கர்மத்தைச் சொல்லுகிறது. எம்பெருமானுக்குக் கர்மம் இல்லாமையால் இங்கு சொன்ன விதியானது அவனு டைய கிருபையே. ஜீவன்கள் தங்கள் கர்மங்களைத் தப்பமுடி யாததுபோல், எம்பெருமானும் தன்னுடைய கிருபையைத் தப்ப முடியாது. இதைக் காட்டுவதற்காக கிருபையை ‘விதி’ என்றது.

(2) இப்படி எம்பெருமான் ஒரு அல்ப வியாஜத்தைக் கொண்டு கணக்கில்லாத அபராதங்களைப் பொறுத்துக்கொண்டு ஒவ்வொரு ஜீவனை ரக்ஷிக்கும்படி செய்வது அவனுடைய கிருபை.

இ—ம். இலேன் - குறிப்புத் தன்மை வினைமுற்று. ஆல் - என்பது ஸந்தோஷத்தைக் காட்டும் இடைச்சொல். (6)

---

அவ:— எம்பெருமான் தன்னை தாமும் தம்மைச்சேர்ந்த வர்களும் அநுபவிக்கும்படி அதற்குத் தகுந்த ஸத்துவகுணம் மேலிட்டு அவனிடத்தில் போய் விழும்படியான மனதை தமக்கு கொடுத்தான் என்று இதில் அவனைக் கொண்டாடுகிறார்—

திரிவிக் கிரமன் செந்தாமரைக் கணெம்மானெனன் செங்கனிவா
யுருவிற் பொலிந்த வெள்ளைப் பளிங்குநிறத்தன னென்றென்றுள்ளிப்
பரவிப் பணிந்து பல்லூழி யூழிநின்பா தபங்கயமே
மருவித் தொழுமன மேதந்தாய் வல்லைகாணென் வாமனனே. (எ)

(ப-ரை) திரிவிக்கிரமன், செந்தாமரைக்கண், செங்கனி வாய் உருவில் - சிவந்த கோவைப்பழம் போன்ற திருப்பவளத் தின் காந்தியிலே, பொலிந்த - அதிக அழகுள்ளதாக ஆன, வெள்ளை பளிங்கு நிறத்தனன் - வெள்ளை ஸ்படிகம் போன்ற

காந்தியுள்ள திருமுத்துக்களை (தந்தங்களை) உடையவன், என் எம்மான் - இந்த அழகாலே என்னைத் தனக்கு அடிமையாக்கின என் ஸ்வாமி, என்று என்று உள்ளி - இப்படி நினைத்து, பரவி - ஸ்தோத்ரம் பண்ணி, பணிந்து - ஸேவித்து, பல் ஊழி ஊழி - எல்லா கல்ப காலங்களிலும், நின்பாத பங்கயமே - உன் திருவடித்தாமரையையே, மருவி தொழும்-சேர்ந்து கைங்கரியம் பண்ணும் ஸ்வபாவமுள்ள, மனமே - மனஸ்ஸையே, தந்தாய்,என் வாமனனே! வல்லைகாண்-நீ ரொம்ப ஸமர்த்தன்.

(கருத்து) உலகை அளந்த ஆச்சரியமான வேலையைச் செய்தவன், செந்தாமரைக்கண்ணன், சிவந்த கோவைப்பழம்போன்ற திருப்பவளத்தை உடையவன். அதினாலே அதிக அழகுள்ள தாய் செய்யப்பட்ட வெள்ளைஸ்படிகம்போன்ற திருமுத்துக்களை (பற்களை)உடையவன். இந்த அழகாலே என்னை அடிமையாக்கின ஸ்வாமி என்று நீ செய்த வேலைகளையும் உன் அழகையும் நினைத்து, ஸ்தோத்ரம் செய்து வணங்கி, இப்படி எப்போதும் உன் திருவடித் தாமரைகளை வணங்கிக் கைங்கரியம் செய்யும்படியான மனதை எனக்குக் கொடுத்தாய். மஹாபலியை வஞ்சித்து ஒருவனாலும் செய்யமுடியாத வேலையைச் செய்த உனக்குச் செய்யமுடியாதது எது ? என் வாமனனே!

குறிப்பு:— (1) பளிங்கு வெள்ளையாய் இருக்க, அதை வெள்ளை என்று சொன்னதற்குக் கருத்து—உலகத்திலுள்ள பளிங்குகளைப் பவளமென்று சொல்லும்படி அதிக வெளுப்புள்ள ஒரு பளிங்கு இருந்தால் அதுபோல் திருமுத்துக்கள் இருக்கின்றன— என்று.

(2) கோவைப்பழம் போன்ற திருப்பவளத்துடன் சேர்க்கையால் திருமுத்துக்களுக்கு ஒரு சோபை உண்டாயிருக்கிறது என்று பொருள்.

இ—ம். பளிங்கு என்கிற சொல் ஆகுபெயராய் அதைப் போல் இருக்கிற திருமுத்துக்களைச் சொல்லுகிறது. (7)

---

அவ:— எம்பெருமான் தமக்குச் செய்த உபகாரத்துக்குப் பதில் உபகாரமில்லை என்று இதில் சொல்லுகிறார்—

வாமனனேன் மரதக வண்ணன் றமரைக் கண்ணினன்
காமனைப் பயந்தா யென்றென்றுன் கழல்பாடி யேபணிந்து
தூமனத் தனனாய்ப் பிறவித் துழதிநீங்க வென்னைத்
தீமனங் கெடுத்தா யுனக்கென் செய்கேனேன் சிரீதரனே. (அ)

(ப-ரை) வாமனன், என் மாதகவண்ணன் - என்னுடைய மரதகரத்நத்தின் வர்ணத்தையுடையவன், தாமரைக்கண்ணினன்- தாமரைப்பூப்போன்ற திருக்கண்களையுடையவன், காமனை பயந் தாய்-(பிரத்யும்நனாக பிறந்த) மன்மதனை உண்டுபண்ணினவனே, என்று என்று-இப்படி நினைத்து, தூ மனத்தனனாய் - சுத்தமான மனதையுடையவனாய், பாடியே - பாடிக்கொண்டே, உன் கழல் பணிந்து - உன் திருவடிகளை வணங்கி, பிறவி துழதி நீங்க - பிறப்பால் உண்டான துக்கம் போகும்படி, என்னை தீ மனம் கெடுத்தாய் - (வேறு விஷயங்களில் போய்க்கொண்டிருந்த) என்னுடைய கெடுதலான மனதை நாசம் செய்தாய். என் சிரீ தரனே - என்னுடைய ஸ்ரீதரனே! உனக்கு என் செய்கேன் - உனக்கு என்ன பதில் உபகாரம் செய்யமுடியும்.

(கருத்து) வாமனன், நீலரத்நம் போன்ற திருமேனியை உடையவன், தாமரைக்கண்ணன், மந்மதனுக்கும் தகப்பன் என்று உன் திருமேனி அழகையும் அவயவங்களின் அழகையும், மந்மத னுக்கும் மந்மதனாய் இருந்த வடிவையும் மனதால் நினைத்து வேறு பிரயோஜநத்தைத்தேடாதவனாய், வாயால் பாடி உன் திரு வடிகளை உடம்பால் வணங்கி, இப்படி உன்னை அநுபவிப்பதற்கு இடைஞ்சலாயிருந்த பிறவித் துயரைக் கெடுத்து, என் மனதை உன் திருவடிகளைத் தவிர மற்றொன்றை அறியாதபடி செய்தாய். என்னுடைய ஸ்ரீதரனே! நீ செய்த உபகாரத்திற்கு என்ன பதில் உபகாரம் செய்யமுடியும்.

இ—ம். பயந்தாய்-பயந்தான் என்பதின் விளிவேற்றுமை, வினையால் அணையும் பெயர். (8)

---

சிரீஇதரன் செய்யதா மரைக்கண்ண னேன்றென்றி ராப்பகல்வாய்
வெரீஇயல மந்துகண்க ணீர்மல்கி வெவ்வுயிர்த் துயிர்த்து
மரீஇயதீ வினைமாள வின்பம் வளர வைகல்வைக
லிரீஇ யுன்னையென் னுள்வைத்தனை யென்னிரு டீகேசனே. (கூ)

(ப-ரை) சிரீஇதரன் - ஸ்ரீதரன், செய்ய தாமரைக்கண்ணன்-செந்தாமரைக்கண்ணன், என்று என்று - என்று நினைத்து, இராபகல், வாய் வெரீஇவெருவி-என் வசமில்லாமல் பேசி, அலமந்து-அங்கலாய்த்து. கண்கள் நீர் மல்கி - கண்களில் நீர் பெருகி, வெவ்வுயிர்த்து உயிர்த்து-உஷ்ணமாக பெருமூச்சு விட்டு, மரீஇய(மருவிய)தீவினைமாள-(அநாதிகாலமாய்)சேர்ந்திருக்கும்பாபங்கள் போகும்படியாயும், இன்பம் வளர-இன்பம் வளரும்படியாயும்,வைகல் வைகல்-எல்லாக்காலங்களிலும்,என்னுள் உன்னை இரீஇ(இருத்தி) வைத்தாய் - என் மனதில் உன்னை நிலையாயிருக்கும்படி வைத்தாய்,என் இருடீகேசனே - என்னுடைய ஹ்ருஷீகேசனே!

(கருத்து)ஸ்ரீதரன் தாமரைக்கண்ணன் என்று உன்னுடைய அழகை நினைத்து, இராப்பகல் என் வசமில்லாமல் பேசி, கலங்கி கண்களில் நீர் பெருகி, உஷ்ணமாய் பெருமூச்சு விட்டு, இப்படி "ஆடியாடி"யில் போல் நான் வருத்தப்படுவதற்குள், அநாதிகாலமாயிருந்த என் பாபங்கள் போகும்படியும், இன்பம் வளரும்படியும் என் மனதில் நிலையாய் உன்னை வைத்தாய். இப்படி உன் அழகாலே என் இந்திரியங்களை உன்னிடம் வந்து விழும்படி செய்த உபகாரத்துக்கு என்ன பதில் உபகாரம் செய்ய முடியும்.

குறிப்பு— பாட்டில் "சிரீஇதரன் செய்ய தாமரைக்கண்ணன்" என்று இரண்டு சொற்களைச் சேர்த்து சொன்னதற்கு ஸ்ரீதரனுயிருப்பதாலே திருக்கண்களுக்கு அழகு உண்டாயிற்று என்று கருத்து. ஸ்ரீமான்களுக்குத்தான் கண்ணழகு உண்டாகும்.

இ—ம். இரீஇ - இறந்தகால வினையெச்சம். (9)

---

அவ:– எம்பெருமானை நினைக்கத் தகுந்தவன் அன்று என்று ஒரு வேளை மனது அவனை விட்டு விடுமோ என்று நினைத்து, அதைப் பார்த்து, அவனைவிடாதே என்று இதில் சொல்லுகிறுர்.

இருடீ கேச னெம்பிரா னிலங்கையரக் கர்குல
முருடு தீர்த்த பிரானெம்மா னமரர்பெம்மா னென்றென்று
தெருடி யாகி னெஞ்சே வணங்குதிண்ண மறியறிந்து
மருடியேலும் விடேல் கண்டாய் நம்பிபற்ப நாபனையே. (௰)

(ப-ரை) நெஞ்சே ! தெருடியாகில் - நல்ல அறிவை உண்டு பண்ணுகிறாயானல், இருடீகேசன், எம்பிரான், இலங்கை அரக்கர் குலம் - இலங்கையிலுள்ள ராக்ஷஸ குலத்துக்கு, முருடு தீர்த்த பிரான் - விறகுக் கட்டைபோலிருந்த ராவணனை ஸம்ஹரித்த பிரான், எம்மான் - என் ஸ்வாமி, அமரர் பெம்மான் - நித்திய ஸூரிகளுக்கு ஸ்வாமி, என்று என்று - இப்படி நினைத்து நினைத்து, வணங்கு, திண்ணம் அறி - நான் சொல்லுவதை நன்றாய் தெரிந்துகொள், அறிந்து - இப்படித் தெரிந்து, மருடியேலும் - அவனுடைய ஸௌசீல்யத்தை மறந்து நம்முடைய தாழ்மையை நினைத்து அவனை விடுவோம் என்று நினைத்தாயாகிலும், நம்பி பற்பநாபனை - அழகு நிறைந்த பத்பநாபனை, விடேல் கண்டாய் - ஒருபோதும் விடாதே.

(கருத்து) மனதே! நீ நல்ல அறிவை உண்டுபண்ணுகிறதாக இருந்தால், ஹிருஷீகேசன், எம்பிரான், லங்கையில் அஸுரர்களுக்குள் முருடாயிருந்த ராவணனை ஸம்ஹரித்தவன், என் ஸ்வாமி, நித்திய ஸூரிகளின் ஸ்வாமி, என்று அவனுடைய அழகையும், அவன் வேலைகளையும் நினைத்து நினைத்து, ஸ்தோத்திரம்பண்ணி வணங்கு; நான் சொன்னதை நல்லதாகக் கொள் ; ஒரு வேளை அவனுடைய ஸௌசீல்யத்தை மறந்து, நம்முடைய தாழ்மையை நினைத்து, அவனைவிட்டு விலகவேணுமென்று எண்ணம்உண்டாகலாம். அப்படிஉண்டானலும் அழகு நிறைந்த பத்மநாபனை ஒரு போதும் விடாதே.

குறிப்பு— 'முருடு' என்பதற்கு கோணலாயும் மேடுபள்ளமுள்ளதாயும், ஸாரமில்லாததாயுமிருக்கும் விறகுகட்டை என்று பொருள். அதுபோல் இராவணன் இருந்ததால் இந்தச் சொல் அவனைச் சொல்லுகிறது. அவன் ஸாரமில்லாதவன், ஸாரமுள்ளவன் விபீஷணன்.

இ—ம். தெருடி - தெருள் + த் + இ. அறிந்தாய் - முன்னிலை வினைமுற்று. மருடி - மருள் + த + இ. மறந்தாய்-முன்னிலைவினைமுற்று. விடேல் - எதிர்மறை ஏவல் வினைமுற்று. (10)

---

அவ:— கீழ்ப்பாட்டில் மனதைப் பார்த்து, எம்பெருமானை விடாதே என்ருர் ; இதில் அவன் நம்மை விடமாட்டான் என்கிருர்—

பற்ப நாப னுயர்வற வுயரும் பெருந்திறலோ
னெற்பர னென்னை யாக்கிக்கொண் டெனக்கேதன் னைத்தந்த
கற்பக மென்னமுதங் கார்முகில் போலும் வேங்கடநல்
வெற்பன் விசும்போர் பிரா னெந்தைதா மோதரனே. (கக)

(ப-ரை) பற்பநாபன் - பத்மநாபன், உயர்வு அற உயரும் பெரும் திறலோன் - தன்னுடைய உயர்த்தியைக் காட்டிலும் வேறு உயர்த்தியில்லாதபடி உயர்ந்த தேஜஸ்ஸையுடையவன், என்னை ஆக்கிக்கொண்டு - (ஒரு வஸ்துவில்லாத) என்னை ஒரு வஸ்துவாகப் பண்ணி, (என்னைத் தன்னுடையவனாகப் பண்ணிக் கொண்டு) எனக்கே தன்னை தந்த கற்பகம் - நான் ஒருவனே அநுபவிக்கும்படியாக கற்பக விருக்ஷம்போல் தன்னைக் கொடுத்தவன், என் அமுதம் - எனக்கு அமிருதம் போல் இனியவனானவன். கார் முகில் போலும் வெங்கடவேற்பன் - மழைகாலத்திய மேகம்போல் ஔதாரியமுள்ள வேங்கடமலையில்உள்ளவன், விசும்போர் பிரான் - நித்திய ஸூரிகளுக்கு உபகாரகன், எந்தை - என் ஸ்வாமி, இப்படியிருக்கிற,தாமோதரன் எற்பரன் - என்னிடத்திலேயே ஆசையுள்ளவன்.

(கருத்து) திருநாபியில் தாமரையையுடையவனாயிருப்பதாலே அளவில்லாத அழகையுடையவனாய், அளவில்லாத தேஜஸ் முதலான நல்ல குணங்களையுடையவனாய், ஒரு வஸ்துவில்லாத என்னை ஒரு வஸ்துவாகப்பண்ணி,தன்னைத் தவிர வேறு விஷயங்களில் ஆசையில்லாமல் தன்னையே இனியவனாக நான் எண்ணும்படி செய்து, நான் ஒருவனே அநுபவிக்கும்படியாயாகக் கற்பக விருக்ஷம்போல் எனக்குத் தன்னைக் கொடுத்த உயர்ந்த ஔதார்ய குணமுள்ளவனாய், எனக்கு மிகவும் இனியவனாய், அளவில்லாத அழகையுடைய திருமலையில் இருப்பவனாய், அதினாலே ஔதார்யத்தை அடைந்தவனாய்,நித்தியஸூரிகளுக்கு ஸ்வாமியாய் எனக்கும் ஸ்வாமியாய், ஆச்ரிதையாகிய யசோதையால் உரலோடு கட்டப்பட்டதுபோல் மற்ற ஆச்ரிதர்களுக்கும் உட்பட்டிருக்கிறவனாய் இருக்கிற எம்பெருமான், என்னிடத்திலேயே ஆசையுள்ளவன். ஆகையால்அவன் நம்மை விடான்.

இ—ம். எனக்கே - ஏகாரத்துக்குப் பிரிநிலைப்பொருள். (11)

அவ:— கீழ்ப் பாட்டில் 'எற்பரன்' என்று சொல்லப்பட்டவன், மிகவுமுயர்ந்தவன் என்று இதில் சொல்லுகிறார்—

தாமோ தரனைத் தனிமுதல் வனைஞால முண்டவனை
யாமோ தரமறிய வொருவர்க் கென்றே தொழுமவர்கள்
தாமோ தரனுரு வாகிய சிவர்க்கும் திசைமுகர்க்கு
மாமோ தரமறிய வெம்மானை யென்னாழி வண்ணனையே.(கஉ)

(ப-ரை) தாமோதரனை, தனி முதல்வனை - ஒப்பில்லாத ஜகத் காரணனை, ஞாலம் உண்டவனை - உலகத்தை பிரளயகாலத்தில் தன் வயிற்றில் வைத்து ரக்ஷித்தவனை, ஒருவருக்கும் தாம் அறிய ஆமோ - இப்படிப்பட்ட தன்மை எவனாலும் அறியக்கூடுமோ, என்றே-என்று நினைத்துக்கொண்டு, தொழும் அவர்கள்-ஸேவிக்கும் ஸ்வபாவர்களாயும், தாமோதரன் உருவாகிய-எம்பெருமானுடையவுடம்பாயும் இருக்கிற, சிவர்க்கும் - சிவன்களுக்கும், திசைமுகர்க்கும் - பிரம்மாக்களுக்கும், எம்மானை - என் ஸ்வாமியாய், என் ஆழி வண்ணனை, என்னுடைய ஸமுத்திரம்போல் நீலவர்ணமுள்ளவனுடைய, தரம் அறிய ஆமோ - நிலை அறியப்போமோ ?

(கருத்து) யசோதையால் கட்டுப்பட்டு அவளுக்கு உட்பட்டிருந்ததுபோல் ஆச்ரிதர்களுக்கு உட்பட்டவனாய், எல்லா உலகங்களுக்கும் ஒரே காரணமாயிருந்து பிரளயகாலத்தில் தன் வயிற்றில் அவைகளை வைத்துக்கொண்டு அவைகளை ரக்ஷித்தவனாயிருக்கிற எம்பெருமானை அவனுக்கு உடம்புகளாய் .அவனுக்கே சேஷர்களாய் இருக்கிற ருத்திரர்களும், பிரம்மாக்களும் 'உன்னுடைய இருப்பை எவன் அறிய முடியும்?'என்று சொல்லிக்கொண்டு அவனை ஸேவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களாலும் ஸமுத்ரம் போல் நீல வர்ணமுள்ள என் ஸ்வாமியினுடைய இருப்பை அறியமுடியுமோ? இப்படிப்பட்டவன் அன்றோ என்னிடத்திலேயே அபிநிவேசமுள்ளவனாய் இருக்கிறான்.

குறிப்பு— ருத்திரர்கள் பிரம்மாக்கள் என்ற பன்மைச் சொற்களுக்கு அண்டங்கள் அநேகங்களாயிருப்பதால் ருத்திரர்களும் பிரம்மாக்களும் அனேகர்களென்று கருத்து. (12)

---

வண்ண மாமணிச் சோதியை யமரர் தலைமகனைக்
கண்ணனை நெடுமாலைத் தென்குரு கூர்ச்சட கோபன்
பண்ணிய தமிழ்மாலை யாயிரத் துள்ளிவை பன்னிரண்டும்
பண்ணிற் பன்னிரு நாமப்பாட் டண்ணற்ற ளணைவிக்குமே. (கநு)

(ப-ரை) வண்ண மா மணிச் சோதியை - நல்ல வர்ணமுள்ள நீலமணி போன்ற பிரகாசத்தை உடையவனாய், அமரர் தலைமகனை - நித்திய ஸூரிகளின் தலைவனாய், நெடுமாலை - ஆச்ரிதர்களைச் சேர்ந்தவர்களிடத்திலும் போகும்படியாய் அவர்களிடம் ஆசையுள்ளவனாய் இருக்கிற, கண்ணனை - கிருஷ்ணனைக் குறித்து, தென்குருகூர், சடகோபன் பண்ணிய - ஆழ்வார் செய்த, தமிழ் மாலை ஆயிரத்துள் - தமிழ் பாட்டுக்கள் ஆயிரத்தில், பண்ணில் - ராகத்தோடு பாடப்பட்ட, பன்னிருநாமப் பாட்டு பன்னிரண்டும் - கேசவன் முதலான பன்னிரண்டு திரு நாமங்களை உடைய பன்னிரண்டு பாட்டுக்களும், அண்ணல் தாள் அணைவிக்கும் - ஸ்வாமியினுடைய திருவடிகளைச் சேரும்படி செய்யும்.

(கருத்து) நீலரத்நம் போன்ற திருமேனியையுடையவனாய், நித்தியஸூரிகளுக்குத் தலைவனாயிருக்கிற எம்பெருமானைப்பற்றி ஆழ்வார் செய்த கேசவன் முதலான பன்னிரண்டு திருநாமங்களை உடைய பன்னிரண்டு பாட்டுக்கள், அவைகளைப் படித்தவர்களை எம்பெருமானுடைய திருவடிகளில் சேரும்படி செய்யும். (13)

---

ஸர்வாதீஶத்வநாயஸ்ஸ்வஜநஜநநீ வத்ஸல: ஸ்வாச்ரிதார்த்த
விஷ்வக்வ்யாப்த்யாதிதீவ்யோவிதநிரஸந: ஸ்வாஶ்ரிதஸ்நிக்தசாயீ ।
விச்வவைஷ்த்ய வாதநாஶ: ஸவிஹவாரஸ: ஸ்வாங்க்ரிவர்ஹயோ
க்ய: ஸ்வாயத்தா வ்யாலோகதா ஸ்வஜநஹிததயா ஆதரஶா
வ்யாஹிருதிவெ ॥ ॥உகூ॥

எம்பெருமான் ஆச்ரிதர்களைச் சேர்ந்தவர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் கூட நன்மையைச் செய்கிறவன் என்று பன்னிரண்டு காரணங்களாலே இதில் சொல்லப்படுகிறது. அவைகளாவன— (1) பிரம்மா முதலான எல்லாருக்கும்

காரணமாயிருப்பது; (2) எல்லாருக்கும் ஸ்வாமியாயிருப்பது; (3) மூன்று உலகங்களுக்குத் தாயான பிராட்டியின் கணவனாயிருப்பது; (4) தன்னை ஆச்ரயிக்கிறவர் பலராக இருக்கவேண்டுமென்று ஆசைப்படுவது; (5) அளவில்லாத அழகுள்ளவனாயிருப்பது; (6) ஆச்ரிதர்களுடைய விரோதியை நாசஞ் செய்வது; (7) வேறு பிரயோஜநத்தைத் தேடாத தன் திருவடிகளில் பக்தியை உண்டுபண்ணுவது; (8) உலகத்தை மஹாபலியிடமிருந்து மீட்க வாமநனை உருவத்தை எடுத்துக்கொண்டது;(9) தன்னுடைய பெருமையைநினைப்பதில் பிரீதியை உண்டுபண்ணுவது; (10)ஆச்ரிதர்களின் மனதைத்தன்னைவிட்டுப் போகாதபடிச் செய்யத் தகுந்தவனாயிருப்பது; (11) தன் பிரயோஜநமாக ஜீவன்களை ஆச்ரிதராகப்பண்ணி அவர்களுக்குத் தன்னைக் கொடுப்பது; (12) தன்னைத் தாமோதரனென்று அறிந்தவர்களைக் கர்மபந்தத்திலிருந்து விடுவிப்பது.

---

## எட்டாம் திருவாய்மொழி.

அவ– கீழ்த்திருவாய்மொழியில் 12வது பாட்டில் எம்பெருமான் ஸர்வேசுவரன் என்று சொல்லப்பட்டது. அதைக் காரணத்துடன் இந்தத் திருவாய்மொழியில் நிரூபணம்பண்ணி, தன்னைச் சேர்ந்தவர்கள் அவனைப் பிராப்பியமாக அடைந்ததுபோல், உலகத்தாரும் அவனைப் பிராப்பியமாக ஆச்ரயிக்கவேணுமென்று அவர்களைக் கூப்பிடுகிறார். அந்த காரணமாவது— மோக்ஷத்தை அடைந்தவனுக்கு அவன் மிகவும் இனியவனாயிருப்பது.

(கலிவிருத்தம்)

அணைவ தரவணைமேற் பூம்பாவை யாகம்
புணர்வ திருவரவர் முதலுந் தானே
யிணைவனா மெப்பொருட்கும் வீடு முதலாம்
புணைவன் பிறவிக் கடனீந்து வார்க்கே (க)

(ப-ரை) அரவு அணைமேல் - ஆதிசேஷனாகிய படுக்கையின் மேலே, அணைவது - எம்பெருமான் படுத்திருப்பது, பூம் பாவை ஆகம் - அழகுள்ள ஸ்திரீயாகிய பிராட்டியின் திருமேனியை, புணர்வது - அவன் சேருவது, அவர் இருவர் - பிரஸித்தர்களான பிரம்மாவுக்கும் ருத்திரனுக்கும், முதலும் தானே - தானே காரணம். எ பொருட்கும் - தேவர் முதலான எல்லா ஆத்மாக்களுக்கும், இணைவனாம் - ஸமமான உருவங்களோடு அவதாரங்களைச் செய்கிறவனாம். வீடு முதலாம் - மோக்ஷத்தைக் கொடுக்கிறவனுமாம். பிறவி கடல் நீந்துவார்க்கு - ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தைத் தாண்டவேண்டுமென்று ஆசைப்படுகிறவர்களுக்கு, புணைவன் - தெப்பம் போல் இருக்கிறவன்.

(கருத்து) ஆதிசேஷனாகிய படுக்கையில் படுத்திருப்பதாலும், லக்ஷ்மீபதியாகையாலும், பிரம்மாவையும் ருத்திரனையும் உண்டுபண்ணுகையாலும், எல்லா ஆத்மாக்களுடைய உடம்புகளுக்கு ஸமமான திருமேனியுடன் அவதாரஞ் செய்து அவர்களை ரக்ஷிக்கையாலும், ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தைத்தாண்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்களுக்கு அதைப் போக்கி, மோக்ஷத்தைக் கொடுக்கிறவனாகையாலும், நாராயணனே ஸர்வேசுவரன்.

அவ— கீழ்ப்பாட்டில் "வீடு முதலாம்" என்று சொன்னதை இதில் விஸ்தாரமாய்ச் சொல்லுகிறார்—

நீந்தும் துயர்ப்பிறவி யுட்படமற் றெவ்வெவையு
நீந்தும் துயரில்லா வீடு முதலாம்
பூந்தண் புனற்பொய்கை யானையிடர் கடிந்த
பூந்தண்டுழா யென்றனி நாயகன் புணர்ப்பே. (உ)

(ப - ரை) பூம் தண் புனல் பொய்கை - புஷ்பங்கள் நிறைந்த குளிர்ந்த ஜலமுள்ள தடாகத்திலிருந்த, யானை இடர் கடிந்த - கஜேந்திரனுடைய துக்கங்களைப் போக்கின, பூம் தண் துழாய் - அழகான குளிர்ந்த துளஸியை உடையவனான, என் தனி நாயகன் - என் ஒருவனுக்கே ஸ்வாமியான எம்பெருமானுடைய, புணர்ப்பே - ஸம்பந்தமே, நீந்தும் - நீந்திக்கொண்டிருக்கிற, துயர் - துக்கங்களையுடைத்தான, பிறவி உள்பட - பிறப்பு முதலான, மற்று எவ்வெவையும் - இன்னும் பலவிதமான, நீந்தும் துயர் இல்லா - தாண்டமுடியாத துக்கங்கள் இல்லாத,வீடு முதல் ஆம் - மோக்ஷத்திற்குக் காரணமாம்.

(கருத்து) மோக்ஷமென்பது பிறப்பு, கிழத்தனம், சாவு, இவைகளும், இன்னும் போக்கமுடியாத பலவிதமான துக்கங்களும் இல்லாதது. இவ்விதமான மோக்ஷத்தைக் கொடுப்பது எம்பெருமானுடன் இருக்கும் ஸம்பந்தம். இது எங்கே பார்க்கப்பட்டது என்றால், கஜேந்திராழ்வானை அவன் ரக்ஷித்த விஷயத்தில் பார்த்திருக்கிறோம்.

குறிப்பு:— (1) 'நீந்தும் துயர்' என்பதற்கு இந்தவேலையை இன்னும் செய்துகொண்டிருக்கிறோம், அது முடியவில்லை என்று கருத்து. இதனால் துயர் - துக்கமானது போக்கமுடியாது என்று காட்டப்படுகிறது.

(2) 'துயர் கடிந்த—என் தனி நாயகன்' என்பதாலே கஜேந்திராழ்வானுக்குச் செய்ததை, ஆழ்வார் தமக்குச் செய்ததாக எண்ணுகிறாரென்று காட்டப்படுகிறது. (2)

---

அவ— முதல் பாட்டில் "இருவரவர்" என்று சொல்லப்பட்டவர்கள் இன்னார் என்று இதில் காட்டப்படுகிறது—

புணர்க்கு மயனு மழிக்கு மரனும்
புணர்த்த தன்னுந்தியோ டாகத்து மன்னிப்
புணர்த்த திருவாகித் தன்மார்விற் றன்சேர்
புணர்ப்பன் பெரும்புணர்ப் பெங்கும் புலனே. (௩)

(ப — ரை) புணர்த்த - (பிரம்மாவை)உண்டுபண்ணின, தன் உந்தியோடு - தன் நாபியோடு, மன்னி - நிலையாய்நின்று, புணர்க்கும் அயனும் - ஸிருஷ்டியைச்செய்யும் பிரம்மா எம்பெருமானுடைய உடம்பாக ஆகிறான். ஆகத்து மன்னி - எம்பெருமானுடைய திருமேனியில் நிலையாயிருந்து, அழிக்கும் அரனும் - உலகத்தை ஸம்ஹாரம் செய்யும் ருத்திரனும் அவன் உடம்பாக ஆகிறான். தன் மார்வில், புணர்த்த திருவாகி - சேர்ந்திருக்கிற லக்ஷ்மியை உடையவனாய், தான் சேர் புணர்ப்பன் - ( ஆதிசேஷனான படுக்கையில்)படுத்திருக்கும் வியாபாரத்தை உடையவன், பெரும் புணர்ப்பு எங்கும் புலனே - ( இவ்விதமான ஸர்வேசுவரன் என்பதைக் காட்டும்) பெரிய வியாபாரங்களை எங்கும் பார்க்கலாம்.

(கருத்து) உலகத்தை ஸிருஷ்டிக்கிற பிரம்மாவுக்குத் தன் நாபியையும், அதை ஸம்ஹாரம்செய்யும் ருத்திரனுக்குத் திருமேனியில் வலதுபாகத்தையும், ஸர்வேசுவரியான பிராட்டிக்குத் தன் திருமார்பையும் இருப்பிடமாகக் கொடுத்திருக்கிறான். தானும் ஆதிசேஷனாகிய படுக்கையில் படுத்திருக்கிறான். இவன் ஸர்வேசுவரனென்று காட்டக்கூடிய இவ்விதமான அடையாளங்களை எங்கும் பார்க்கலாம்.

இ—ம். புலன் - இந்திரியம்; இது ஆகுபெயராய் இந்திரியங்களின் அறிவினால் பார்க்கக்கூடியதைச் சொல்லுகிறது. (3)

---

அவ— மூன்று பாட்டுக்களாலே எம்பெருமான் ஸர்வேசுவரன் என்று சொல்லி, அவன் குணங்களை பிராப்பியங்களாகப் பற்றுங்கோள் என்று இதில் சொல்லுகிறார்—

புலனைந்து மேயும் பொறியைந்து நீங்கி
நலமந்த மில்லதோர் நாடு புகுவீ
ரலமந்து வீய வசுரரைச் செற்றான்
பலமுந்து சீரிற் படிமி னோவாதே. (௪)

(ப - ரை) புலன் ஐந்து மேயும் - ஐந்துவிதமானவிஷயங்களை அனுபவிக்கும் ஸ்வபாவமுள்ள, பொறி ஐந்து நீங்கி - ஐந்து இந்திரியங்கள் உங்களைவிட்டுப்போய், நலம் அந்தம் இல்லது ஓர் நாடு புகுவீர் - ஆநந்தத்துக்கு முடிவில்லாத ஒப்பில்லாத வைகுந்தம் என்கிற தேசத்தில் பிரவேசிக்க ஆசைப்படுகிறவர்களே! அலமந்து வீய அசுரரை செற்றுன் - மனது கலங்கி சாகும்படி அஸுரர்களைக் கொன்றவனுடைய, முந்து பல சீரில் - அவனை அடைவதற்கு முன்னுலேயே பலனுக இருக்கும்படியான நல்ல குணங்களை, ஓவாதே - இடைவிடாமல், படிமின் - அவைகளில் படிந்திருங்கள்.

(கருத்து) எம்பெருமானுடைய அநுபவத்துக்கு விரோதிகளான சப்தம்முதலான விஷயங்களை அநுபவிக்கும் ஐந்து இந்திரியங்களை ஜயித்து அளவில்லாத ஆநந்தத்தையுடைய வைகுந்தத்திற்குப் போகவேணுமென்று ஆசைப்படுகிறவர்களே! அவனுடைய நல்லகுணங்களை இடைவிடாமல் நினைத்துக்கொண்டிருங்கள். அவைகள் அவனை அடைவதற்கு முன்னுலேயே மிகவும் இனியவைகளாயிருக்கும்.

இ—ம். புகுவீர்-முன்னிலை வினைமுற்று வினையால் அணையும் பெயராய் வந்திருக்கிறது. ஓவாதே - எதிர்மறை வினையெச்சம், ஓயாமல் என்று பொருள். (4)

---

அவ— முதல் பாட்டில் "இணைவனும் எப்பொருட்கும்" என்றதை விஸ்தாரமாய் சொல்லிக்கொண்டு, எம்பெருமானை ஸர்வேசுவரன் என்று இதில் சொல்லுகிறுர்—

ஓவாத் துயர்ப்பிறவி யுட்படமற் றெவ்வெவையும்
மூவாத் தனிமுதலாய் மூவுலகுங் காவலோன்
மாவாகி யாமையாய் மீனுகி மானிடமாந்
தேவாதி தேவ பெருமானென் றீர்த்தனே. (ரு)

(ப - ரை) ஓவா துயர் - ஓயாத துக்கத்தோடு கூடிய, பிறவி உள்பட மற்று எவையும் - பிறப்பு முதலான மற்ற எந்த எந்த துக்கங்களுக்கும்,மூவா தனி முதல்வன் - கிழத்தனமில்லாத(ஒழிவில்லாத)ஒப்பற்ற காரணமானவனுய், மூ உலகும் காவலோன் -

மூன்று உலகங்களை ரக்ஷிக்கிறவனும், தேவாதி - தேவர்களுக்குக் காரணமாய், தேவபெருமான் - நித்தியஸூரிகளுக்கு ஸ்வாமியாய், என் தீர்த்தன் - எல்லாவிதமான தோஷங்களுக்கு விரோதியாயிருக்கிற எம்பெருமான், மா ஆகி - குதிரையாகி, (ஹயக்கிரீவனாகி), ஆமையாய் மீன் ஆகி மானிடம் ஆம் - கூர்மமாயும், மத்ஸியமாயும், மனிதர்களாயும் அவதாரம் செய்கிறான்.

(கருத்து) ஸம்ஸாரத்தைச் சக்கிரம்போல் சுழன்றுவரும்படி செய்துகொண்டிருக்கிறவனாகையாலும், பிரம்மா முதலானவர்களுக்குக் காரணமாயும், நித்தியஸூரிகளுக்கு ஸ்வாமியாயும், எல்லாவிதமான தோஷங்களுக்கு விரோதியாய் இருப்பதாலும் தேவனாகவும் மனிதனாகவும், குதிரை முதலானவைகளாகவும் அவதாரம் செய்து மூன்று உலகங்களையும் ரக்ஷிக்கிறவனாகையாலும் எம்பெருமானே ஸர்வேசுவரன்.

குறிப்பு—(1) "மூவாத்தனிமுதல்வன்" என்பதற்கு சேதநர்கள் அவன் கொடுத்த உடம்புகளையும் இந்திரியங்களையும் அவனை அடைவதற்காக உபயோகப்படுத்தாமல் கெட்டவழியில் உபயோகித்தாலும் அலுப்புவந்து அவர்களை விடாமல் ரக்ஷிப்பதற்கே அடிக்கடி ஸிருஷ்டியைப் பண்ணுகிறானென்று கருத்து. 'மூவா' என்பதற்குக் கிழத்தனமில்லாத என்று பொருள். இந்த விஷயத்தில் எம்பெருமானுக்குக் கிழத்தனமில்லை என்று கருத்து.

இ—ம். ஓவா - ஓவாத, மூவா - மூவாத இவைகள் எதிர்மறைப் பெயரெச்சங்கள். (5)

---

அவ— அவதாரம் செய்யும்போதும் எம்பெருமான் ஸர்வேசுவரன் என்பதை இதில் காட்டுகிறார்—

தீர்த்த னுலகளந்த சேவடிமேற் பூந்தாமஞ்
சேர்த்தி யவையே சிவன்முடிமேற் றான்கண்டு
பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை
பேர்த்து மொருவராற் பேசக் கிடந்ததே. (சு)

(ப - ரை) தீர்த்தன் - பரிசுத்தியைக்கொடுக்கிற, உலகு அளந்த சேவடி மேல் - உலகங்களை அளந்த சிவந்த திருவடியின் மேலே, பூம் தாமம் சேர்த்தி - பூமாலையை ஸமர்ப்பித்து, அவை

யை - அந்த மாலைகளையே, சிவன் முடிமேல் தான் கண்டு, பார்த்தன் - அர்ஜுனன், தெளிந்து ஒழிந்த - தெளியவேண்டியது பாக்கியில்லாமல் தானே நன்றாகத் தெளிந்த, பைந்துழாயான் பெருமை - பச்சைத் துளஸியை உடைய எம்பெருமானுடைய பெருமையானது, பேர்த்தும் ஒருவரால் - பின்னும் ஒருவனால், பேசக்கிடந்ததே - நிரூபணம் செய்யவேண்டியதாயிருந்ததோ ?

(கருத்து) எம்பெருமானுடைய திருவடிதீர்த்தத்தை ருத்திரன் தலையாலே தாங்கி பரிசுத்தன் ஆனான். அவன் திருவடிகளிலே ஸமர்ப்பித்த பூமாலைகளை ருத்திரன் தலையில் இருந்ததை அர்ஜுனன் நேரில் பார்த்தான். இப்படிப்பட்ட எம்பெருமானுடைய பெருமையை வேறு எவன் நிரூபணம் செய்யவேணும். அவனே ஸர்வேசுவரன் என்பதற்கு இவைகள் போதாதா?

குறிப்பு:—'கண்டு' என்பதற்கு அர்ஜுனன் ஒருவன் சொன்னதைக்கேட்டுத் தெளியவில்லை, தானே பார்த்துத் தெளிந்தான்.

இ—ம். பேசக்கிடந்ததே - ஏகாரத்திற்கு எதிர் மறைப் பொருள், பேசக்கிடக்கவில்லை என்று அர்த்தம். (6)

---

அவ— ரக்ஷிக்கவேண்டியவர்கள்விஷயத்தில் எம்பெருமான் செய்யும் வேலைகள் ஒன்று இரண்டு அல்ல என்று இதில் காட்டுகிறார்—

கிடந்திருந்து நின்றளந்து கேழலாய்க் கீழ்புக்
கிடந்திடுந் தன்னுள் கரக்கு முமிழுந்
தடம்பெருந் தோளாரத் தழுவும் பாரென்னு
மடந்தையை மால்செய்கின்ற மாலார் காண்பாரே? (எ)

(ப - ரை) கிடந்து - சில திவ்விய தேசங்களில் படுத்துக்கொண்டிருந்தும், இருந்து-சிலவற்றில் உட்காந்துகொண்டும், நின்றும் - சிலவற்றில் நின்றுகொண்டும், அளந்து - திரிவிக்கிரமனாய்த் திருவடியாலே அளந்தும், கேழலாய் - வராஹமாய் அவதாரம் செய்து, கீழ் புக்கு - ஸமுத்திரத்தில் புகுந்து, இடந்திடும் - அதினடியில் இருந்த பூமியைக் கொண்டுவந்தும், தன்னுள் கரக்கும் - பிரளயகாலத்தில் தன் வயிற்றுக்குள் ஒளித்துவைத்துக் கொண்டு ரக்ஷித்தும்,உமிழும் - ஸிருஷ்டிகாலம் வந்தபோது தன் வயிற்றிலிருந்து வெளிப்படுத்தியும், பார் என்னும் மடந்தையை

பூமி என்று சொல்லப்படுகிற பெண்ணை, தடம் பெரும் தோள் ஆர தழுவும் - தன்னுடைய விசாலமான புஜங்களுக்குத் திருப்தி வரும்படியாக கட்டிக்கொண்டும், மால் செய்கின்ற - ஸர்வேசுவரன் செய்கிற, மால் - ஆசையினால் செய்யப்பட்ட வியாபாரங்களை, ஆர் காண்பார் - யாரால் இத்தனை என்று அளவிடமுடியும்?

(கருத்து) பூமிப்பிராட்டியினிடத்தில் இருக்கும் ஆசையினால் அவள் விஷயத்தில் அவன் செய்யும் வியாபாரங்களுக்குக் கணக்கில்லை. இப்படித் தன் இஷ்டப்படி அவள் விஷயத்தில் அநேக வியாபாரங்களைச் செய்கிறபடியால் அவள் அவனுக்கே சேஷம்.

குறிப்பு:—பூமியைச்சொன்னது எல்லா உலகத்துக்கும் உபலக்ஷணம். ஆச்ரிதரை ரக்ஷிக்கிற விஷயத்தில் அவன் செய்யும் வேலைகளுக்கு எண்ணிக்கையில்லை. (7)

---

அவ— எம்பெருமான் ஸர்வேசுவரன் என்பதை ஒருவராலும் அறியமுடியாது என்று இதில் சொல்லப்படுகிறது—

காண்பாரா ரெம்மீசன் கண்ணனையென் காணுமா
றூண்பேசி லெல்லா வுலகுமோர் துற்றாற்றாச்
சேண்பால வீடோ வுயிரோமற் றெப்பொருட்கு
மேண்பாலுஞ் சோரான் பரந்துளனா மெங்குமே. (அ)

(ப - ரை) எம் ஈசனை - என்னுடைய ஸர்வேசுவரனான கண்ணனை, காண்பார் ஆர் - (அவனுடைய பெருமை இவ்வளவு என்று) பார்க்கிறவர் எவர், காணும் ஆறு என் - (அவனுடைய பெருமையை) பார்ப்பதற்கு என்ன உபாயமிருக்கிறது? ஊண் பேசில் - பிரளயகாலத்தில் அவன் சாப்பிடுவது எது என்று விசாரிக்கும்போது, எல்லா உலகும் - எல்லா உலகங்களும், ஓர் துற்று ஆற்றா - ஒரு கபளத்துக்குப் போதுமானதன்று, சேண் பால வீடோ - மிகவுமுயர்ந்ததாயிருப்பதை ஸ்வபாவமாகவுடைய பரமபதமும், உயிரோ - மோக்ஷத்தையடைந்த ஜீவன்களும், மற்று எப்பொருட்கும் - இவைகள் தவிர வேறு எல்லா வஸ்துக்களும் இவைகளை, எண்பாலும் - எட்டுதிக்குகளிலும், சோரான் - விடுகிறதில்லை, எங்கும் பரந்து - எல்லாவிடத்திலும் வியாபித்து, உளனாம் - இருக்கிறான்.

(கருத்து) ஸர்வேசுவரனுயிருக்கிற கண்ணனுடைய பெருமையை எவன் இவ்வளவுதானென்று பார்க்கமுடியும்? அப்படிப் பார்ப்பதற்கு என்ன உபாயமிருக்கிறது? இந்த விஷயம் எப்படித் தெரியுமென்றால், பிரளயகாலத்தில எல்லா உலகங்களையும் அவன் சாப்பிட்டபோதிலும் அவனுக்கு அது ஓர் கபளத்துக்குப் போதாது. பரமபதத்தையும் முக்தர்களான ஜீவன்களையும் இவைகள் தவிர வேறு வஸ்துக்களையும் ஒரு இடமும் விடாமல் வியாபித்துக்கொண்டிருக்கிறன்.

இ—ம். ஆற்ரு - ஆற்ருது; எதிர்மறைவினைமுற்று. (8)

---

அவ:— "பரந்துளனுமெங்கும்" என்று கீழ்ப் பாட்டில் எம்பெருமானுடைய எங்கும் வியாபித்திருக்கும் பெருமையைச் சொல்லியிருப்பதால் அதற்கு உதாரணமாக ஆச்ரிதனுன பிரஹ்லாதனுடைய விருத்தாந்தத்தினுல் அந்தப் பெருமையை இந்தப் பாட்டு தெளிவாக வெளிப்படுத்துகிறது—

எங்குமுளன் கண்ண னென்ற மகனைக்காய்ந்
திங்கில்லை யாலென் றிரணியன் றூண்புடைப்ப
வங்கப் பொழுதே யவன்வீயத் தோன்றியவென்
சிங்கப்பிரான் பெருமை யாராயுஞ் சீர்மைத்தே. (கூ)

(ப - ரை) கண்ணன் எங்கும் உளன் - கண்ணன் எங்குமிருக்கிறன், என்ற மகனை காய்ந்து - என்றுசொன்ன தன்பிள்ளையை கோபித்துக்கொண்டு, இங்கு, இல்லையா - இல்லையே, என்று - இப்படிச் சொல்லி, இரணியன் தூண் புடைப்ப - ஹிரண்யகசிபு ஒரு தூணை அடிக்க, அவன் வீய - அவன் நாசம் அடையும்படி அங்கு அப்பொழுதே - அந்த தூணிலேயே அந்த க்ஷணத்திலேயே தோன்றிய, என் சிங்கம் பிரான் - என்னுடைய ஸ்வாமியாய் நரசிங்க ரூபம்கொண்ட பிரானுடைய, பெருமை - பெருமையானது, ஆராயும் சீர்மைத்தே - விசாரித்து அறியக்கூடிய ஸ்வபாவத்தை உடையதோ?

(கருத்து) ஆச்ரிதனுன பிரஹ்லாதன் எம்பெருமான் எங்கும் இருக்கிறன் என்று சொன்னதைக்கேட்டு அவன் தகப்பனுன ஹிரண்யகசிபு ஒரு தூணைக்காட்டி இதில் அவனில்லையே என்று சொல்லி அந்தத் தூணை அடித்தான். அந்தத் தூணிலேயே

அந்த க்ஷணத்திலேயே எம்பெருமான் நரசிங்கனாய்த் தோன்றி அவனை நாசம் செய்தான். இதனால் தான் எங்கும் வியாபித்திருப்பதை எல்லாருக்கும் தெரியும்படி காட்டினான். இப்படிப்பட்ட சிங்கப்பிரானுடைய பெருமையை எவனால் அளவிடமுடியும்? ஆகையால் அவனையே நீங்கள் ஆச்ரயியுங்கள்.

இ—ம். சீர்மைத்தே - ஏகாரத்திற்கு எதிர்மறைப்பொருள்; சீர்மைத்து அன்று என்று பொருள். (9)

---

அவ— கீழ்ப்பாட்டில் ஸர்வேசுவரன்என்று சொல்லப்பட்ட எம்பெருமானைத் தாம் பார்த்ததாகத் தம்முடைய லாபத்தை இதில் பேசுகிறார்—

சீர்மை கோள்வீடு சுவர்க்க நரகீறு
வீர்மைகொ டேவர் நடுவாமற் றெப்பொருட்கும்
வேர்முதலாய் வித்தாய்ப் பரந்து தனிநின்ற
கார்முகில்போல் வண்ணனென் கண்ணனைநான் கண்டேனே. (ய)

(ப - ரை) சீர்மை கொள் வீடு - பெருமையைக்கொண்ட பரமபதம், சுவர்க்கம் - ஸுவர்க்கம், நரகு ஈறு - நரகம் இவைகள் கடைசியாக, ஈர்மை கொள் தேவர் - (ஸுகத்தை அநுபவிப்பது, துக்கத்தை அநுபவிப்பது ஆகிய)இரண்டு ஸ்வபாவமுள்ள தேவர்கள் முதலான எல்லா ஜீவன்களும்,நடுவா - நடுவாக உள்ள, மற்று எ பொருட்கும் - வேறு எல்லா வஸ்துக்களுக்கும், முதல் வேர் ஆய் - ஆணிவேராயிருந்து தூக்கிக்கொண்டு, வித்தாய் - காரணமாய், பரந்து - வியாபித்து, தனி நின்ற - ஒப்பில்லாமலிருக்கிற, கார்முகில்போல் வண்ணன் - மழைகாலத்து மேகம்போல் நீல வர்ணமுள்ள, என் கண்ணனை, நான், கண்டேன்-அநுபவித்தேன்.

(கருத்து) ஸுகத்தை அநுபவிக்கிற இடங்களாகிய பரமபதமும் ஸுவர்க்கமும், துக்கமே அநுபவிக்கப்படுகிற நரகமும் இவைகளில் ஸுகத்தையும் துக்கத்தையும் அநுபவித்துக்கொண்டிருக்கிற தேவர்கள் முதலான எல்லாஜீவன்களும் உள்பட எல்லா வஸ்துக்களையும் தூக்கிக்கொண்டும், அவைகளை உண்டுபண்ணியும், அவைகளில் வியாபித்து நியமித்துக்கொண்டும், மழைகாலத்து மேகம்போல் நீல வர்ணமுள்ள திருமேனியையும், நித்

திய விபூதியையும் உடையவனுயிருந்த கண்ணனை நான் காணப் பெற்றேன்.

குறிப்பு:— (1) ஸுவர்க்கத்திலும் பரமபதத்திலும், துக்கம் கலப்பில்லாத ஸுகம் அநுபவிக்கப்படுகிறது. ஆனல் ஸுவர்க்கத்தின் ஸுகத்துக்கு முடிவு உண்டு. பரமபத ஸுகத்துக்கு முடிவில்லை. இந்த பெருமையைக் காட்ட, 'சீர்மைகொள் வீடு' என்று பாட்டில் சொல்லியிருக்கிறது.

(2) 'தேவர்' என்கிற சொல் எல்லா ஜீவன்களுக்கும் உபலக்ஷணம். ஸுகத்தையும் துக்கத்தையும் அநுபவிப்பது தேவர்களுக்குமாத்திரமன்று, அது எல்லாருக்குமுண்டு.

(3) பாட்டில் "பரந்து" என்ற சொல் எம்பெருமான் எங்குமிருப்பதைச் சொல்லுவதாலும், அப்படியிருப்பது நியமநம் செய்வதற்காக இருப்பதாலும், கருத்துரையில் "நியமித்துக் கொண்டு" என்று எழுதியிருக்கிறது.

(4) "கார்முகில் போல்வண்ணன்" என்று எம்பெருமானுடைய திருமேனியைச் சொன்னதாலே அதைப்போல் சுத்த ஸத்துவமென்கிற திரவியத்தாலே செய்யப்பட்ட பரமபதத்திலிருக்கிற எல்லா வஸ்துக்களும் சொல்லப்படுகின்றன. அவைகள் இந்த உலகத்தின் வஸ்துக்களைப்போல பிரகிருதியால் செய்யப்பட்டவைகள் அன்று என்று 'தனிநின்ற' என்கிற சொல் காட்டுகிறது. தனி என்பதற்கு வேறு ஜாதியான என்று பொருள்.

(5) ஆழ்வார் எம்பெருமானை ஆச்ரயுங்கள் என்று உபதேசம்செய்ய, இதைக்கேட்டும் அவர் சொன்னதைச் செய்யாமல் இருந்தவர்களைப்பார்த்து, தாம் அவர்களைப்போலில்லாமல் எம்பெருமானைப் பார்க்கும்படியான பாக்கியம் பெற்றேமென்று திருப்தியடைகிறுர்.

இ—ம். ஈறு, நடுவா - என்கிற சொற்களில், ன என்பது கடைக்குறை. ஈர்மை - இருமை என்கிற சொல்லில் செய்யுளில் முதலில் நீண்டு நடுவில் உகரம் கெட்டிருக்கிறது. (10)

---

கண்டலங்கள் செய்யக் கருமேனி யம்மானை
வண்டலம்புஞ் சோலை வழுதி வளநாடன்
பண்டலையிற் சொன்னதமி ழாயிரத்திப் பத்தும்வல்லார்
விண்டலையில் வீற்றிருந் தாள்வரெம் மாவீடே. (கக)

(ப-ரை) கண் தலங்கள் - கண்களுடைய இடமானது, செய்ய - அதிக சிவப்புள்ளதாக ஆகும்படி, கருமேனி அம்மானை - நீலமான திருமேனியை உடைய ஸ்வாமியைக்குறித்து, வண்டு அலம்பும் சோலை - வண்டுகள் அலைகின்ற சோலைகளை உடைய, வழுதி வள நாடன் - வழுதி என்கிற வளப்பமுள்ள நாட்டில் அவதாரம்செய்த ஆழ்வார், பண் தலையில் - (பண்ணில் கானத்துடன்)சொன்ன, ஆயிரத்து இ பத்தும் வல்லார் - இப் பத்துப் பாட்டுகளைப் படிக்கச் சக்தியுள்ளவர்கள், விண் தலையில் வீற்றிருந்து - விண்ணில் (பரமபதத்தில்) பெருமையுடன் இருந்து, எம்மா வீடு - என்னதான பெரிய பரமபதத்தை, ஆள்வர் - ஆளுவர்கள்.

(கருத்து) சிவப்பான திருக்கண்களையும் கருப்பான திருமேனியையும் உடைய ஸ்வாமியைப்பற்றி, ஆழ்வார் அருளிச்செய்த இந்தப் பத்துப்பாட்டுக்களைப் படிக்கிறவர்கள் பரமபதத்துக்குப் போய் அங்கு பெருமையுடன் இருந்து அதை ஆளுவர்கள். அதாவது—கர்மத்தினுடைய கட்டுப்போய் தங்களுடைய ஸ்வரூபத்தை அடைந்து எம்பெருமானை அநுபவிப்பார்கள்.

குறிப்பு:— ஆழ்வாருடன் சேர்ந்த ஸந்தோஷத்தாலே எம்பெருமானுடைய திருக்கண்கள் மிகவும் சிவந்திருக்கின்றன என்றும், அந்த சிவப்பும் திருமேனியின் கருப்பும் சேர்ந்திருந்தபடியால் ஒரு புதிதான அழகு உண்டாயிற்று என்றும் கருத்து.

---

ஸர்வாகாரோபபத்த்யா ஜநிவிஹரணாதிஸ்வஸ்வ
ஷ்ட்யாதிஸங்கேத நிஷ்டஸ்தோ நந்தே ஸம்பந்ய த உபஜநௌ ரக்ஷணா
யத்நாவதாராஃ । ஸர்வவ்யாப்தாந்தராத்மாவாதிவிஹரணா
த்யாவிர்பாவைர் த்ருவத்வாக்ஷ ஹஸ்தேஷ்டாவஸ்யாஹ்வாதவிய
ஹமஸ்யதேர்மோக்ஷஸௌக்யம் ஸாக்ஷாந்தே ॥ ॥௨0॥

இந்தத் திருவாய்மொழியில் பத்துக் காரணங்களாலே எம்பெருமானே ஸர்வேசுவரன் என்றும், அவனே மோக்ஷமடைந்தவர்களுக்கு இனியவனுயிருக்கிறனென்றும் சொல்லப்படுகிறது. அந்

தக் காரணங்களாவன —(1) ஜீவன்கள் அநுபவிக்கவேண்டிய ஆகாரத்துடன் வைகுந்தத்திலிருப்பது, (2) ஸம்ஸாரத்தைப் போக்குவது, (3)எல்லாவற்றையும் உண்டுபண்ணும் சக்தியுள்ளவனுயிருப்பது, (4) அளவில்லாத ஆநந்தத்தைக்கொடுக்கும் பரமபதத்தை உடையவனுயிருப்பது, (5) எல்லாரையும் ரக்ஷிப்பதற்காக அவதாரம் செய்வது, (6) மிகவும் நன்ருய் பிரஸித்தமான பெருமையை உடையவனுயிருப்பது, (7) ஆச்ரிதர்களுக்காக பலவிதமான லீலைகளைச் செய்தது, (8) ஆச்சரியமாய் எங்கும் ஒரு இடம் விடாமல் வியாபித்திருப்பது, (9) பக்தர்கள் நினைத்தபோது உடனேவந்து அவர்களுக்கு ஸேவை ஸாதிப்பது, (10) எல்லாவிதமான பலன்களை ஜீவன்களுக்குக் கொடுப்பது.

## ஒன்பதாம் திருவாய்மொழி.

அவ— பிராப்பியமானது இரண்டு விதம்— ஸித்த மென்றும், ஸாத்தியமென்றும். இரண்டுவிபூதிகளையுடைய எம்பெருமானுகிற ஸித்தமான பிராப்பியம் இதுவரையில் பேசப்பட்டது. 8-வது திருவாய்மொழியில் 'நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்' என்று நாலாம் பாட்டில் ஸாத்தியமான பிராப்பியம் சொல்லப்பட்டது. அந்த பிராப்பியமானது ஆநந்தம் நிறைந்த உலகத்தை அடைவது. ஸ்வர்க்கலோகம் போகிறவன் தனக்கு ஸுகத்தின் அநுபவம் வேண்டுமென்று ஆசைப்பட்டுக்கொண்டு அங்கே போகிறுன். இங்கே அப்படியன்று என்றும்,எம்பெருமானுடையஸந்தோஷமே முக்கியமாய் ஆசைப்பட வேணுமென்றும், எல்லாவிடங்களிலும் எல்லாக் காலங்களிலும் எல்லா அவஸ்தைகளிலும் அவனுக்கு இஷ்டமான கைங்கரியங்களைச் செய்து அந்த ஸந்தோஷத்தை உண்டுபண்ணவேண்டுமென்றும் இதில் சொல்லப்படுகிறது.

த்வயம் என்கிற மந்திரத்தில் பின்பாதியில் ஸ்ரீமதே என்கிற சொல்லுடன் கூடிய நாராயண என்கிற சொல்லின் பொருள் சொல்லப்பட்டது. இப்போது அதின் கடைசியிலிருக்கும் நான்காம் வேற்றுமையின் பொருளும் நமஸ்ஸின் பொருளும் சொல்லப்படுகின்றன. அவைகளில் எம்பெருமானுடைய கைங்கரியமே வேண்டுமென்றும், அதை நான் செய்கிறேன், எனக்காகச் செய்கிறேன் என்றும், அவன் தன் பிரீதிக்காகக் கொடுக்கும் ஆநந்தத்தை அநுபவிக்கும்போது, அதை நான் அநுபவிக்கிறேன், எனக்காக அநுபவிக்கிறேன் என்றும் உண்டாகக்கூடிய குற்றங்கள் அந்தக் கைங்கர்யத்தில் கலக்கக் கூடாதென்றும் பிரார்த்திக்கப்படுகிறது. ஆகையால் இந்தத் திருவாய்மொழிக்கு ஒருவனுடைய கைங்கரியத்துக்கு எம்பெருமானே உத்தேச்யனென்று காட்டப்படுகிறது.

(கலிவிருத்தம்.)

எம்மா வீட்டுத் திறமுஞ் செப்பநின்
செம்மா பாதபற்புத் தலைசேர்த் தொல்லைக்
கைம்மா துன்பங் கடிந்த பிரானே
யம்மா வடியேன் வேண்டுவ தீதே. (க)

(ப - ரை) எம்மா வீடு திறமும் செப்பம் - எவ்வளவு பெருமையுள்ள வைகுந்தத்தின் பிரகாரத்தையும் நான்(அடையவேண்டியதாகச்)சொல்லமாட்டேன், நின் செம்மா பாதம் பற்பு - கீழே சிவந்ததாயும் மேலே நீலமாயுமிருக்கிற உன்னுடைய திருவடித் தாமரையை, ஒல்லை - சீக்கிரமாக, தலை சேர்த்து - என் தலையில் சேரப்பண்ணு, கைம்மா துன்பம் கடிந்த பிரானே - துதிக்கையை உடைய (கஜேந்த்ராழ்வானாகிய) யானையினுடைய துக்கத்தைப் போக்கின பிரானே! அம்மா - அம்மானே(ஸ்வாமியே) ஈதே - இது ஒன்றுமே, அடியேன் வேண்டுவது.

(கருத்து) பரமபதம் என்பது மிகவும் உயர்ந்த புருஷார்த்தமாக இருந்தபோதிலும் அதை நான் வேண்டவில்லை. எனக்கு வேண்டியது உன்னுடைய அழகான திருவடித் தாமரைகளை என்னுடைய தலையில் சேர்த்தருளுவது. இதை ஸ்ரீகஜேந்திராழ்வானுக்குச் செய்தபடி செய்வது போதாது. அதைச் செய்து கொண்டே இருக்கவேண்டும். இது தவிர நான் வேறொன்றையும் வேண்டுகிறது இல்லை.

குறிப்பு:— எம்பெருமானுடைய திருவடிகளைத் தம்முடைய தலையில் சேர்க்கவேண்டும் என்று பிரார்த்திப்பது ஒரு பலனுக்கு ஸாதநம் அன்று. அதுவே பலன்.

இ — ம். திறமும் - இதில் உம்மைக்கு உயர்வு சிறப்புப் பொருள். செப்பம் - தன்மை வினை முற்று. சேர்த்து - முன்னிலை வினைமுற்று, ஈதே - இது என்பது செய்யுளில் ஈது என்று நீண்டது. இதில் ஏகாரத்திற்கு பிரிநிலைப் பொருள்; மற்றவைகளைப் பிரித்து அவைகளை வேண்டாமென்று சொல்லுகிறது. (1)

---

அவ— கீழே சொன்னதைத் தவிர வேறொன்றையும் தாம் எந்தக்காலத்திலும் வேண்டுகிறது இல்லை என்று இதில் சொல்லுகிறார்:—

ஈதே யானுன்னைக் கொள்வதெஞ் ஞான்றுமென்
மைதோய் சோதி மணிவண்ண வெந்தா
யெய்தா நின்கழல் யானெய்த ஞானக்
கைதா காலக் கழிவுசெய் யேலே. (உ)

(ப - ரை) என் மை தோய் சோதி - நீலநிறமானது உருகி இருந்து தோய்வதுபோலே நெருங்கின நீலவர்ணமுள்ள பிரகாசத்தோடு கூடிய, மணிவண்ண எந்தாய் - ரத்நத்தின் வர்ணமுள்ள என்னுடைய ஸ்வாமியே! எஞ்ஞான்றும் - (வரப்போகிற) எல்லாக் காலத்திலும், ஈதே - இது ஒன்றுமே, யான் உன்னை கொள்வது - நான் உன்னிடம் அடையவேண்டிய புருஷார்த்தம், எய்தா நின் கழல் - (பக்தியோகமில்லாமல்)கிடைக்கமுடியாத உன்னுடைய திருவடிகளை, யான் எய்த - நான் அடையும்படி, ஞானம் கை தா - பக்தியோகமாகிற பிடிப்பை எனக்குக் கொடு, காலம் கழிவு செய்யேல் - காலத்தினுடைய கழிவைச் செய்யாதே.

(கருத்து) இப்போது இதைக் கேட்கிறீர். வருங்காலத்தில் வேறொன்றைக் கேட்டாலோ என்றால், நான் அதைக் கேட்பது இல்லை. இதுதான் நான் எப்போதும் வேண்டுவது. என்னுடைய ஸ்வாமியே! பக்தியோகமில்லாமல் இது கிடைக்குமோ என்றால், அதையும் சீக்கிரமாக நீ கொடுக்கவேண்டும். காலதாமதம் வேண்டாம்.

இ—ம். ஈது - முன்பாட்டின் குறிப்பைப் பார்க்க. செய்யேல் - எதிர்மறை ஏவல் வினைமுற்று. (2)

---

அவ— தாம் இந்த உடம்பைவிட்டு போகும் காலத்திலும் எம்பெருமானுடைய நினைவு வரவேண்டும் என்றும், அதைக் கொண்டு அவனை ஸ்தோத்திரம் பண்ணவேண்டும் என்றும், அப்படி கிருபை செய்யவேண்டும் என்றும் இதில் வேண்டுகிறார்—

செய்யே றீவினை யென்றருள் செய்யுமேன்
கையார் சக்கரக் கண்ண பிரானே
யையார் கண்ட மடைக்கிலு நின்கழ
லெய்யா தேத்த வருள்செய் யெனக்கே. (ஙு)

(ப - ரை) தீவினை செய்யேல் - (விஷயங்களில் மனதுபோய் விழுவதாகிய) கெட்டகர்மத்தைச் செய்யாதே, என்று அருள் செய்யும் - என்று கிருபை செய்கிறவனான,என் கை ஆர் சக்கரம் கண்ண பிரானே - திருக்கையில் பொருந்தியிருக்கிற சக்கிரா

யுதத்தை உடைய என்னுடைய கண்ணபிரானே, ஐயார் கண்டம் அடைக்கிலும் - ச்லேஷ்மம் நிறைந்த தொண்டை பேசவொட்டாமல் செய்தாலும், நின் கழல் - உன்னுடைய திருவடிகளை, எய்யாது - ஓயாமல், ஏத்த - ஸ்தோத்ரம் பண்ண, எனக்கே (அதற்கு வேண்டிய புண்ணியமில்லாத)எனக்கு, அருள் செய் - கிருபை செய்யவேணும்.

(கருத்து) திருவாழியும் கையுமாயிருக்கிற உன் அழகைக் காட்டி, என் மனது வேறு விஷயங்களில் போய் விழாதபடி பண்ணி உன் திருவடிகளில் ஈடுபடும்படி செய்த என்னுடைய கண்ணபிரானே! நான் இந்த உடம்பை விட்டுப் போகும் போது ச்லேஷ்மமானது என் தொண்டையில் நிறைந்து, என்னைப் பேசவொட்டாமல் செய்யலாம். அப்படிச்செய்யும்போதும் நான் உன்னை ஓயாமல் ஸ்தோத்திரம் பண்ணும்படி அதற்கு வேண்டிய புண்ணியம் இல்லாவிட்டாலும் இதை உன்னுடைய கிருபையினாலேயே செய்தருளவேண்டும்.

குறிப்பு:— 1. "தீவினைசெய்யேல்" என்று பாட்டில் சொல்லுவதினால் மோக்ஷோபாயத்தைச் செய்கிறவனுக்குப் புத்திபூர்வமான பாபம் வரக்கூடும் என்றும், அதை விலக்குவதற்காகத் தகுந்த உபாயத்தைச் செய்து எம்பெருமானைப் பிரார்த்திக்க வேணும் என்றும் காட்டப்படுகிறது.

(2) முதற் பாட்டில் உடம்பால் செய்யும் கைங்கரியமும், இரண்டாம் பாட்டில் மனதால் செய்வதும், இந்தப் பாட்டில் வாக்கால் செய்வதும் வேண்டப்படுகின்றன.

இ—ம். செய்யேல் - எதிர்மறை ஏவல் வினைமுற்று. (3)

---

அவ— இப்படி வேண்டப்படுகிற எம்பெருமானுடைய கைங்கரியத்தில் தனக்காகச் செய்கிறேன் என்கிற தோஷம் கலக்கக்கூடாது என்று இதில் பிரார்த்திக்கிறார்—

எனக்கே யாட்செய்யெக் காலத்து மென்றேன்
மனக்கே வந்திடை வீடின்றி மன்னி
தனக்கே யாக வெனைக்கொள்ளு மீதே
யெனக்கே கண்ணனை யான்கொள் சிறப்பே. (௪

(ப - ரை) எக்காலத்தும் - எந்தக் காலத்திலும், எனக்கே ஆள் செய் - வேறு தேவதைகளைவிட்டு எனக்கே நீ கைங்கரியம் செய்யவேண்டும்(என்று திருவாயாலே அருளிச்செய்து), இடைவீடு இன்றி - நடுவில் விட்டுப்போவதில்லாமல், என் மனக்கே வந்து மன்னி - என்னுடைய மனதில்வந்து அதில் நிலையாயிருந்து எனை - என்னை, தனக்கேயாக - (பிறர்க்கில்லாமலும், எனக்கில்லாமலும், எனக்கும் உனக்கும் பொதுவாயில்லாமலும்) உனக்கு மாத்திரமே சேஷமாக, கொள்ளும் ஈதே - கொள்ளுவதாகிய இந்த விஷயமே, எனக்கே கண்ணனை - எனக்குத்தகுந்த கிருஷ்ணனை, யான்கொள் சிறப்பு - நான் பெறவேண்டிய பிரயோஜநம்.

(கருத்து) எந்தக்காலத்திலும் வேறு தேவதைகளை விட்டு எனக்கே கைங்கரியம் செய் என்று திருவாயால் சொல்லி, என் மனதில் வந்து ஒரு க்ஷணமும் அதை விடாமல் நிலையாயிருந்து உனக்கே என்னைச் சேஷமாகப் பண்ணிக்கொள். பிறர்க்காவது எனக்காவது, உனக்கும் எனக்குமாவது சேஷமாகப் பண்ணுமல் உன்னுடைய திருமேனியில் சாத்திக்கொண்டிருக்கிறவைகளைப் போல உனக்கே சேஷமாகப் பண்ணி அருளவேணும். இது தான் நான் உன்னிடம் பெறவேண்டிய பிரயோஜநம்.

குறிப்பு— 1. திருமேனியில் எம்பெருமான் சாத்திக்கொண்டிருக்கிற கஸ்தூரி, சந்தனம், பூமாலை, பீதாம்பரம் இவைகள் அவனுக்கே சேஷமாயிருக்கின்றன. இவைகள் அறிவில்லாதவைகள். அறிவுள்ள தம்மையும் அப்படியே அவனுக்கு சேஷமாக ஏற்றுக்கொள்ளவேணும் என்று ஆழ்வார் கருத்து.

2. இது எம்பெருமானுக்கு தெரிந்திருந்தபோதிலும் ஆழ்வாருக்கு இதில் இருக்கும் ஆவலினுல், ஒரு குழந்தைக்கு பெரியவன் புத்தி சொல்வதுபோல் எம்பெருமானுக்கு இதைச் சொல்லுகிறுர்.

இ-ம். முதலடியில்எனக்கே-ஏகாரத்திற்குப்பிரிநிலைப்பொருள்; வேறு ஒருவருக்கும் ஆட் செய்யாதே என்று பொருள். வீடு - விடுதல் - தொழில் பெயர். தனக்கே - ஏகாரத்திற்கு முன் போலவே பொருள். நான்காம் அடியில் 'எனக்கே' என்கிற விடத்தில் ஏகாரத்திற்கு தகுந்த என்று பொருள்- (4)

அவ— தம்முடைய ஸ்வரூபத்தைப் பார்த்து அநுபவிப்பதும் தான் வேண்டும் பிரயோஜநம் அன்று என்று இதில் சொல்லுகிறார்:—

சிறப்பில் வீடு சுவர்க்க நரக
மிறப்பி லெய்துக வெய்தற்க யானும்
பிறப்பில் பல்பிற விப்பெரு மானை
மறப்போன் றின்றி யென்றும் மகிழ்வனே. (ரு)

(ப - ரை) இறப்பில் - மரணத்தில், சிறப்பில் வீடு - பெருமையையுடைய மோக்ஷத்தையோ, சுவர்க்கம் - ஸ்வர்க்கத்தையோ, நரகு - நரகத்தையோ, எய்துக - நான் அடையட்டும், எய்தற்க - அடையாமல் நாசத்தைஅடையட்டும், யானும்-நானும், பிறப்பில்- (கர்மத்தினுல் ஏற்படும்) பிறப்புகளில்லாமல், பல் பிறவி-பல விதமான அவதாரங்களைச் செய்கிற, பெருமானை - ஸ்வாமியை, மறப்பு ஒன்று இன்றி-கொஞ்சமும் மறதியில்லாதபடி,(அநுபவித்து) என்றும்மகிழ்வேன்-எப்போதும் ஆநந்தத்தை அடையவேணும்.

(கருத்து) கர்மத்தாலே ஏற்படும் பிறப்புகள் இல்லாமல் உன் இச்சையாலேயே பல அவதாரங்களைச் செய்கிற ஸ்வாமியே! நான் என்பது உடம்பாயிருந்து, மரணத்துக்குப் பிறகு அழிந்துபோகட்டும்; அல்லது அதைக் காட்டிலும் வேருய் எப்போதும் இருக்கிற ஜ்ஞாநம் என்கிற குணத்தை உடையவனுய், கர்மங்களின் பலன்களை அநுபவிப்பதற்காக ஸ்வர்க்கத்துக்கோ நரகத்துக்கோ போகட்டும். அல்லது கர்மங்களெல்லாம் கழிந்து பரமபதத்துக்குப் போகட்டும். இந்த விஷயத்தில் எனக்கு ஒரு பிடிவாதமுமில்லை. இப்படியிருக்கிற நான் வேண்டுவது உன்னுடைய அவதாரங்களையும் அவைகளில் நீ செய்த வேலைகளையும், அவைகளால் காட்டப்பட்ட உன்னுடைய குணங்களையும் எப்போதும் அநுபவித்து, ஆநந்தப்படுவதுதான்.

குறிப்பு— ஆழ்வாருக்கு தம்முடைய ஸ்வரூபம் நன்ருய்த் தெரியும். அதில் தமக்கு ஆதரவு இல்லை என்று இந்தப் பாட்டின் கருத்து.

இ—ம். எய்துக, எய்தற்க—இரண்டும் வியங்கோள். இரண்டாவது எதிர்மறை. (5)

அவ:— இப்படி ஐந்து பாட்டுக்களாலே தமக்கு வேண்டிய புருஷார்த்தத்தைச் சொல்லி, அதை இப்போதே பெற வேணும் என்று இதில் எம்பெருமானைக் கூப்பிடுகிறார். எம்பெருமானுடைய தோற்றம் மாத்திரம் இப்போது இருக்கிறது. அது போதாது; தான் கட்டிக்கொள்ளத்தகுந்த ரூபத்துடன் வந்து தம்முடைய கைங்கரியத்தை அவன் பெறவேணும் என்கிறார்—

மகிழ்கோ டேய்வ முலோக மலோக
மகிழ்கோள் சோதி மலர்ந்த வம்மானே
மகிழ்கோள் சிந்தைசோற் செய்கைகோண் டேன்றும்
மகிழ்வுற் றுன்னை வணங்க வாராயே. (சு)

(ப-ரை) மகிழ் கொள் தெய்வம் - ஆநந்தத்தை அநுபவிக்கும் தேவர்களும், உலோகம் - (கண் முதலான இந்திரியங்களாலே பார்க்கக்கூடிய) அசேதநங்களும், அலோகம் - (அப்படிப் பார்க்க முடியாத) சேதநர்களும், மகிழ் கொள் சோதி - (தங்களுக்குப் பிரகாசமிருக்கிறதென்று)ஸந்தோஷப்படும் சந்திரன் ஸூரியன் முதலானவைகளும் ஆக, மலர்ந்த அம்மானே - (இப்படி ஆக வேணுமென்று நினைத்து அந்தரூபங்கள் உள்ளவனாகி) ஆயிருக்கிற ஸ்வாமியே! மகிழ் கொள் சிந்தை - உன்னிடத்தில் பிரீதியோடு மனதால் நினைப்பது, சொல் - வாயால் ஸ்தோத்திரம் பண்ணுவது, செய்கை - உடம்பால் வேலை செய்கிறது இவைகளைக் கொண்டு, என்றும் - எப்போதும், மகிழ்வு உற்று - ஸந்தோஷப்பட்டு, உன்னை வணங்க - உன்னை ஸேவிக்க, வாராய் - எழுந்தருளவேணும்.

(கருத்து) மிகுந்த கருணையாலே இந்த உலகத்திலுள்ள எல்லாவிதமான ரூபங்களையுடையவனாக ஆகியிருக்கிற என் ஸ்வாமியே! உன்னை மூன்று கரணங்களாலும் எப்போதும் அநுபவிப்பதே ஸ்வபாவமுள்ளவனாய் நான் அநுபவிக்கும்படி எழுந்தருளவேணும்.

இ—ம். உலோகம் - பார்க்கப்படுகிறது என்று பொருள் உள்ளதாய், கண்கள் முதலான இந்திரியங்களால் பார்க்கப்படுகிற அசேதநத்தைச் சொல்லுகிறது. தமிழில் லகரம்முதலில் வாராமையால் உ-என்று முதலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அலோ

கம் என்பது உலோகத்தைக்காட்டிலும் வேறானது, அசேதநத்தைக்காட்டிலும் வேறானது சேதநம். வாராய் - முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று. (6)

---

அவ:— கீழ்ச்சொன்ன அநுபவத்தை எம்பெருமானுடைய திருவடிகளை விட்டு அகலாதே எப்போதும் பெறவேணும் என்று இதில் வேண்டுகிறார்—

வாரா யுன்றிருப் பாத மலர்க்கீழ்
பேரா தேயான் வந்தடை யும்படி
தாரா தாயுன்னை யென்னுள் வைப்பிலென்று
மாரா தாயெனக் கென்று மெக்காலே. (எ)

(ப-ரை) உன்னை, என்னுள் வைப்பில் - என் ஹிருதயத்தில் வைக்கும்போது; என்றும் எனக்கு ஆராதாய் - எப்போதும் எனக்கு திருப்தி வராமல் ஆகி, தாராதாய் - உன்னை நான் கட்டிக்கொள்ளும்படியாகக் கொடுக்காதவனே! என்றும் எக்காலே - ஒவ்வொரு நாளும் அதில் ஒவ்வொரு க்ஷணமும், உன் திரு பாதம் மலர் கீழ்-உன்னுடைய அழகான திருவடித்தாமரையின் கீழ்இருந்து,போராதே - அவைகளை விட்டு அகலாமல்,யான்-நான், வந்து அடையும்படி வாராய்.

(கருத்து) உன்னுடைய அளவில்லாமல் இனிதாயிருப்பதை எனக்குக் காட்டி, எனக்கு ஒரு போதும் திருப்தி வராமல்படி செய்தாய். ஆனால் உன்னை நான் கட்டிக்கொண்டு அநுபவிக்கும்படி உன்னை எனக்குக் கொடுக்காதவனே! உன்னுடைய அழகான திருவடித்தாமரைகளின் கீழ் இருந்து ஒரு நாளும் ஒரு க்ஷண்மும் விட்டு அகலாமல் நான் அநுபவிக்கும்படி வந்தருளவேணும்.

இ—ம். போராதே - எதிர்மறை வினையெச்சம். தாராதாய் - தாராதான் என்பதின் விளி வேற்றுமை. தாராதான் என்பது எதிர்மறைவினைமுற்றாயிருந்து பெயர்ச்சொல்லாய் வந்திருக்கிறது. ஆராது - எதிர்மறை வினையெச்சம். (7)

---

அவ:— எம்பெருமானைக் கட்டிக்கொண்டு அவனுக்குக் கைங்கரியம் செய்யும் லாபம் எவருக்கு உண்டோ? என்று

தம்முடைய பரபரப்பின் மிகுதியால் இதில் ஆழ்வார் சொல்லுகிறார்—

எக்காலத் தெந்தையா யென்னுண் மன்னின்மற்
றெக்கா லத்திலும் யாதொன்றும் வேண்டேன்
மிக்கார் வேத விமலர் விழுங்குமென்
னக்காரக் கனியே யுன்னை யானே. (அ)

(ப-ரை) மிக்கார் - எல்லாரைக் காட்டிலும் உயர்ந்தவரான, வேத விமலர் - வேதத்தை அறிந்த தோஷமில்லாதவர்களாலே, விழுங்கும் - உள்ளபடி அநுபவிக்கப்படும், என் அக்காரம் கனியே - அக்காரத்தின் பழமே! (வெல்லமானது ஒரு மரமாய் அதில் ஒரு பழம் உண்டானால் எப்படி இனிமையாயிருக்குமோ, அப்படி எனக்கு இனியவனாயிருக்கிறவனே !) எ காலத்து எந்தையாய் - எல்லாக் காலத்திலும் என்னுடைய எல்லாவிதமான கைங்கரியங்களையும் பெறுகிறவனாய், என்னுள் மன்னில் - என்னுள் நிலையாய் நீ இருந்தால், நான் - (இந்த லாபத்தைப் பெற்ற) நான், உன்னை - (ஸ்வயம்பலமான) உன்னை, எக்காலத்திலும் மற்று யாதொன்றும் வேண்டேன் - ஒரு காலத்திலும் வேறொன்றையும் கேட்க மாட்டேன்.

(கருத்து) வேதத்தை அறிந்து தோஷங்கள் போய் உயர்ந்தவர்களாய் இருக்கிறவர்களாலே உள்ளபடி அநுபவிக்கப் படும், மிகவும் இனியவனான என் ஸ்வாமியே! எப்போதும் என்னுடைய ஹிருதயத்தில் நிலையாயிருந்து என்னுடைய எல்லா விதமான கைங்கரியங்களையும் நீ பெற்றுக்கொள்ளுகிற வனாய் இருந்தால் இனி வேறொன்றையும் கேட்கமாட்டேன். இது எனக்கு இப்போது கிடைக்கவில்லை. இந்த லாபம் எந்த மஹாத்மாவுக்குக் கிடைத்திருக்கிறதோ ?

குறிப்பு— முன்னாலே வேறொன்றையும் கேட்கவில்லை என்று சொன்ன ஆழ்வார் அதை மறுபடியும் சொல்லுவதற் குக் கருத்து—இந்த லாபம் யாருக்குக் கிடைத்திருக்கிறதோ, எனக்கு இப்போது கிடைக்கவில்லையே - என்று சொல்லுவதற் காக என்று. (8)

அவ:— எம்பெருமான் வருவதில் கொஞ்சங்கூட தாமதத்தை ஆழ்வார் பொறுக்கமாட்டார் என்று இதில் சொல்லப்படுகிறது—

யானே யென்னை யறிய கிலாதே
யானே யென்றன தேயேன் றிருந்தேன்
யானே நீயேன் னுடைமையு நீயே
வானே யேத்துமெவ் வானவ ரேறே. (கூ)

(ப-ரை) வானே ஏத்தும் - பரமபதத்திலுள்ளவர்களாலே ஸ்தோத்ரம் பண்ணப்பட்ட, அவானவர் ஏறே-அந்தநித்தியஸூரிகளின் ஸ்வாமியே, யான் நீயே - நான் உனக்கு உடம்பாயிருப்பதாலே நான் நீதான், என்உடமையும்நீயே-என்னதென்றுநான் எண்ணுகிறவைகளும் அப்படியே நீ, யானே - இப்படி எப்போதும் உன்னுடைய ஸொத்தான நானே, என்னை - என் ஸ்வரூபத்தை, அறிய கிலாதே - அறியசக்தியில்லாமல், யானே என் தனதே என்று இருந்தேன் - நானும் என்னுடையதும் எனக்காகவே இருக்கின்றன என்று இவ்வளவு காலம் எண்ணியிருந்தேன்.

(கருத்து) நித்தியஸூரிகளால் கொண்டாடப்பட்ட அவர்கள் ஸ்வாமியே! நானும் என்னதாக எண்ணப்பட்டவைகளும் உனக்கு உடம்பு; ஆகையால் அவைகள் நீயே. இப்படிப்பட்ட என் ஸ்வரூபத்தை அறியமுடியாதவனுய், நானும் என்னுடையவைகளும் எனக்காகவே இருக்கின்றன என்று இவ்வளவு காலம் எண்ணியிருந்தேன். இது என்னுடைய குற்றம். உன்னுடையதன்று. என்னுடைய ஸ்வரூபத்தைத் தெரிந்தபிறகு உன்னை நான் அனுபவிக்கும்படி உடனே எழுந்தருளவேணும். உன்னை ஒரு க்ஷணங்கூட விடாமல், ஞானக்குறைவு கொஞ்சமும் இல்லாமல் பரமபதத்திலிருந்து அநுபவிக்கிறவர்கள் என்ன பாக்கியம் பண்ணினுர்களோ ?

குறிப்பு:— நித்தியஸூரிகளின் அநுபவத்தைச் சொல்லுவதால் ஆழ்வார் அவ்வித அநுபவத்தை இதுவரையில் இழந்திருப்பதால்மிகவும் வருத்தப்படுகிருர் என்பதும், தாம் ஆசைப்பட்டபடி எம்பெருமான் உடனே எழுந்தருளாவிட்டால் தம்மால் தாங்க முடியாது என்பதும் காட்டப்படுகிறது.

அவ:— எம்பெருமானை அடைவதற்குப் பிரதிபந்தங்கள் இருந்தால் அவைகளை அவனே போக்க வேணுமென்று இதில் பிரார்த்திக்கிறார்:—

ஏறே லேழும்வென் றேர்கொ ளிலங்கையை
நீறே செய்த நெடுஞ்சுடர்ச் சோதி
தேறே னென்னையுன் பொன்னடிச் சேர்த்தொல்லை
வேறே போக வெஞ்ஞான்றும் விடலே. (ய)

(ப-ரை) ஏறு ஏழும் வென்று - (நப்பின்னைப் பிராட்டியை அடைவதற்காக) ஏழு காளைமாடுகளை ஜயித்து, ஏர் கொள் இலங்கையை - (ஸீதைப்பிராட்டிக்காக) அழகைக் கொண்ட லங்கையை நீறே செய்த - சாம்பலாகப் பண்ணின, நெடும் சுடர் சோதி - மிகுந்த வீரலக்ஷ்மியையுடையவனாய், (அதாலே பிரகாசிக்கிற) திருமேனியையுடையவனே! உன் பொன் அடி - உன்னுடைய அழகான திருவடிகளில், என்னை - (வருத்தப்படுகிற) என்னை, ஒல்லை - சீக்கிரத்தில், சேர்த்து - சேரும்படி பண்ணி, எஞ்ஞான்றும் - எப்போதும், வேறே போகல் விடல் - (அவைகளை விட்டுப் பிரிந்து) நான் போகும்படி விடக்கூடாது, தேறேன் - (இதை உடனே செய்யாவிட்டால்) தாங்கமாட்டேன்.

(கருத்து) நப்பின்னைப்பிராட்டியை அடைவதற்கு இடைஞ்சல்களாக இருந்த ஏழு காளைமாடுகளை ஜயித்தாய். ஸீதாப் பிராட்டியை அடைவதற்கு இடைஞ்சலாயிருந்த லங்கையை நாசம் செய்தாய். என்னிடம் நான் ஆசைப்பட்டபடி நீ வருவதற்கு இடைஞ்சல்கள் இருந்தால், அவைகளை நீயே போக்க வேண்டாமோ? இதற்கு வேண்டிய வீரலக்ஷ்மி உன்னிடம் இல்லையா? ஆகையால் சீக்கிரத்தில் உன்னுடைய திருவடிகளில் என்னைச் சேர்த்தருளவேண்டும். சேர்த்தபிறகு உன் திருவடிகளின் ரேகைகள் அவைகளை விட்டு எப்படி பிரியமாட்டாதோ அப்படியே நானும் அவைகளை விட்டுப் பிரியாதபடி செய்ய வேணும். இப்படி இந்த க்ஷணமே செய்யாமல்போனால் நான் பொறுக்கமாட்டேன்.

இ—ம். ஏல் - அசைநிலை, தேறேன் - எதிர்மறைத் தன்மை வினைமுற்று. விடல் - எதிர்மறை ஏவல், விடாதே என்று பொருள். (10)

விடலில் சக்கரத் தண்ணலே மேவல்
விடலில் வண்குரு கூர்ச்சட கோபன்சொல்
கெடலி லாயிரத் துள்ளிவை பத்துங்
கெடலில் வீடுசெய் யுங்கிளர் வார்க்கே. (கக)

(ப-ரை) விடல் இல் - என்னை (ஆழ்வாரை) விடுவதில்லாத சக்கரத்து அண்ணலே - திருவாழியையுடைய ஸ்வாமியைப்பற்றி, மேவல் விடல் இல் - (எம்பெருமானுடைய) சேர்க்கையில் உள்ள ஆவலை விடாத, வண் குருகூர் சடகோபன் சொல் - ஆழ்வார் அருளிச்செய்த, கெடல் இல் ஆயிரத்து - (ஜீவன்களுக்கு அநர்த்தரூபமான) நாசம் இல்லாதபடி செய்யும் ஆயிரத்துக்குள், இவை பத்தும் - இந்தப் பத்துப் பாட்டுக்களும், கிளர்வார்க்கு - சிரத்தை உடையவர்களுக்கு, கெடல் இல் வீடு-(அவர்கள் தனக்காகவே இருக்கிறார்கள் என்கிற) தப்பெண்ணம் இல்லாத மோக்ஷத்தை, செய்யும் - கொடுக்கும்.

(கருத்து) இப்படி ஆழ்வார் வேண்ட, எம்பெருமானும் அழகர்மலையில் தோன்றி திருவாழியை விட்டு எப்படிப் பிரிகிறதில்லையோ, அப்படியே அவருடன் பிரிவில்லாதபடி சேர்ந்தான். அவனைப் பற்றி ஆழ்வார் அருளிச்செய்த இந்தப் பத்துப்பாட்டுக்களில் சிரத்தையுடையவர்கள் ஆழ்வார் அடைந்த லாபத்தை அடைவார்கள். (11)

---

श्रेयस्स्वाम्योदयं सौहार्दिकरसं हृत्स्वास-
यञ्ज्यं हेतुं स्वायीकृतप्रवणकारं स्वस्तिकसश्रीता
न्याय्यं वीतिवस्य । स्वार्थे कारणैः कैर्धृत
रसयन्नगात्वमुण्डाहं वेदव्यासायनं वृत
वरिवरणं वक्त्रवाणिं जगाद ॥ ॥௧௧॥

இந்தத் திருவாய்மொழியில் பத்துக்காரணங்களால் ஒருவன் செய்யும் கைங்கரியத்துக்கு எம்பெருமானே உத்தேச்யன் என்பது சொல்லப்படுகிறது. அந்தப் பத்துக் காரணங்களாவன— (1) ஒருவன் ஆசைப்பட்டு வேண்டும்படியான திருவடி

களை உடையவனுயிருப்பது; (2) அவைகளை அடைவதற்கு உபாயமான பக்தியோகத்தைக் கொடுப்பது; (3) அவைகளை ஸ்தோத்திரம் பண்ணுவதற்கு வேண்டிய சக்தியைக் கொடுப்பது; (4) தனக்காகவே உபகாரம் செய்தது; (5) தன்னை நினைப்பதில் உண்டான ஸந்தோஷத்தாலே மற்றவைகளில் மனது போகாமல் செய்வது; (6) பக்தர்களுடைய பிரீதியால் கட்டுப்படுவது; (7) தன்னை அடைவதில் தாமதத்தைப் பொறுக்காதபடி பண்ணுவது; (8) அமிருதம் போன்ற ரஸத்தைக் கொடுக்கும் தியானத்திற்கு விஷயமாயிருப்பது; (9) ஒருவன் தன்னையும் தன்னுடையவைகளையும் கொடுப்பதற்குத் தகுந்தவனுய் இருப்பது; (10) தன்னை விட்டுப் பிரியாதபடி பண்ணுதல்.

# பத்தாம் திருவாய்மொழி,

அவ:— ஆழ்வார் பிரார்த்தித்தபடி எம்பெருமான் அழகர் மலையில் எழுந்தருளி, அவருடன் சேர்ந்தபோது, அந்த திருமலை அவன் எழுந்தருளின இடமாகையால் வெகுகாலமாக ஆசைப்பட்ட கைங்கரியம் கிடைக்கிற இடமாகையாலும், அவனுடைய மற்ற விபூதிகளைப் போல அதுவும் அவனுடைய விபூதியாகையாலே பிராப்பியத்தில் சேர்ந்திருப்பதாலும், திவ்வியதேசத்தில் கைங்கரியம் செய்வது இவருக்கு அதிக பிரியமாய் இருப்பதாலும் அந்த திருமலையை அநுபவிக்கிருர். இதனாலே எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்வதற்குத் தகுந்த இடத்தில் வந்திருப்பதாகிய அவனுடைய குணம் சொல்லப்படுகிறது.

(கலிவிருத்தம்)

கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவிய கோயில்
வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ் சோலை
தளர்வில ராகிச் சார்வது சதிரே. (க)

(ப-ரை) வளர் ஒளி மாயோன்-மேன்மேலும் அதிகமாகும் காந்தியையுடைய ஆச்சரியமான வேலைகளைச் செய்கிற எம்பெருமான், மருவிய கோயில் - எப்போதும் சேர்ந்திருக்கிற கோயிலான, வளர் இளம் பொழில் சூழ் - வளருகிற இளமையுள்ள சோலைகளாலே சூழப்பட்ட, திருமாலிருஞ்சோலை-திருமாலிருஞ் சோலை மலையை, கிளர் ஒளி இளமை - (ஜ்ஞாநம்) விருத்தியாகும் இளமைப்பருவம், கெடுவதன் முன்னம் - கெட்டுப்போவதற்கு முன்னாலே, தளர்வு இலர் ஆகி - நீங்கள் கிலேசமில்லாதவர்களாக ஆவதற்கு, சார்வது - அடைவது, சதிர் - புத்தியுள்ளவன் வேலை.

(கருத்து) எம்பெருமான் திருமலையில் வந்திருப்பதனால் அதனுடைய இளஞ்சோலையைப் போல், அவனுடைய திருமேனிக்குக் குளுமையும், மேல்மேல் வளர்கிற காந்தியும், யௌவநமும் இவை போன்ற மற்ற நல்ல குணங்களும் உண்டாகி இருக்கின்றன. அப்படிப்பட்ட எம்பெருமான் இருக்கிற திருமலையை உங்களுடைய கண் காது முதலான இந்திரியங்

களின் சக்தி குறைவதற்கு முன்னாலேயே போய்ச்சேரவேண்டியது. அப்படிச் செய்தால் ஸம்ஸாரத்திலுண்டாகும் உங்களுடைய க்லேசம் எல்லாம் போய்விடும். இதுவே ஒருவனுக்கு உயர்ந்த பிராப்பியம்.

இ—ம். தளர்விலராகி என்பதில் ஆகி என்பதற்கு ஆக என்று பொருள். தளர்வு என்பது மற்ற க்லேசங்களுக்கும் உபலக்ஷணம். (1)

---

அவ:— இளமைப்பருவத்தில் விஷயங்களை அநுபவித்து, கிழத்தனத்திலன்றோ அவைகளை விடவேண்டியது என்றால், விஷயங்கள் பிரயோஜநங்கள் அன்று என்று இதில் சொல்லுகிறார்—

சதிரிள மடவார் தாழ்ச்சியை மதியா
அதிர்குரல் சங்கத் தழகர் தங்கோயின்
மதிதவழ் குடுமி மாலிருஞ் சோலைப்
பதியது வேத்தி யெழுவது பயனே. (உ)

(ப-ரை) சதிர் இளம் மடவார் - (புருஷனை வசப்படுத்திக் கொள்வதில்) ஸமர்த்தைகளாகிய இளம்பெண்களிடத்தில், தாழ்ச்சியை - மனது போய் விழுவதை, மதியாதே - பிரயோஜநமாக எண்ணாமல், அதிர் குரல் சங்கத்து - (பிரதிகூலர் மனது) நடுங்கும்படி செய்கிற சப்தத்தையுடைய சங்கத்தை ஏந்திக்கொண்டிருக்கும், அழகர் தம் கோயில் - அழகருடைய கோயிலான, மதி தவிழ் குடுமி - சந்திரன் முழங்காலாலே தவிழும்படி உயர்த்தி உள்ள சிகரங்களையுடைய, மாலிருஞ்சோலை பதி அது - திருமாலிருஞ்சோலை மலை என்கிற திருப்பதியாகிற பிரசித்தமான இடத்தை, ஏத்தி - ஸ்தோத்திரம் பண்ணி, எழுவது - உஜ்ஜீவிப்பதே, பயன் - பிரயோஜநம்.

(கருத்து) இளம் பெண்கள் முதலான பிராகிருத விஷயங்களில், மனது போய் விழுவதை பிரயோஜநமாக எண்ணக் கூடாது. பிரதிகூலர் மனது நடுங்கும்படி செய்கிற ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஏந்திக்கொண்டு, அந்த அழகாலே அழகர் என்று திருநாமம் பெற்ற எம்பெருமான் எப்போதும் வாஸஞ் செய்

யும் இடமாய், பரிபூர்ணமான சந்திர்மண்டலத்தாலே அலங்காரம் செய்யப்பட்ட சிகரங்களை உடைத்தாயிருக்கிற திருமாலிருஞ்சோலைமலை என்கிற திவ்யதேசத்தை ஸ்தோத்ரம் பண்ணி உஜ்ஜீவியுங்கள். அதுவே மிகவுமுயர்ந்த பிரயோஜநம்.

குறிப்பு— 'இளமடவார் தாழ்ச்சியை' என்பது மற்ற பிராகிருத விஷயங்களில் பிடிமானத்துக்கு உபலக்ஷணம். (2)

---

அவ:— விஷயங்களின் அநுபவம் வேண்டாம். ஸ்வர்க்கத்துக்காக அதற்கு ஸாதகமான தர்மங்களைச் செய்யவேண்டாமோ என்றால், அவைகளும் பிரயோஜநம் அன்று என்று இதில் சொல்லுகிறார்—

பயனல்ல செய்து பயனில்லை நெஞ்சே
புயல்மழை வண்ணர் புரிந்துறை கோயில்
மயல்மிகு பொழில்சூழ் மாலிருஞ் சோலை
யயன்மலை யடைவ தது கருமமே. (௩)

(ப - ரை) பயனல்ல செய்து - (முடிவில்லாத) ஸுகத்தைக் கொடுக்காத கர்மங்களைச் செய்வதில், பயனில்லை - பிரயோஜநம் இல்லை, நெஞ்சே - மனதே! புயல் மழை வண்ணர் - வர்ஷிக்கிற மேகத்தின் ஸ்வபாவமுள்ள எம்பெருமான், புரிந்து-(விரும்பி ஆச்ரிதர்களுக்குத் தன்னைக் கொடுப்பதற்காக அவர்களை எதிர்பார்த்துக்கொண்டு), உறை கோயில் - எப்போதும் வஸிக்கிற இடமாய், மயல் மிகு - (அவைகளில் உள்ளே போனவர்களுக்கு) மோஹம் அதிகமாக உண்டாகும்படியான, பொழில்சூழ் - சோலைகளாலே சூழப்பட்ட மலை, மாலிருஞ்சோலை-திருமாலிருஞ்சோலைமலைக்கு, அயல் மலை - கிட்ட இருக்கிற மலையை, அடைவது - அடையுங்கள், அதுவே கருமம் - செய்யவேண்டிய நல்ல வேலை.

(கருத்து) அளவில்லாத நித்யஸுகத்தைக் கொடுக்கமுடியாத கர்மங்களைச் செய்வதில் பிரயோஜநமில்லை. அவைகளைச் செய்ய வேண்டாம். மழை மேகம் மழைபெய்து உலகத்துக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணுவதுபோல், ஆச்ரிதருக்குத் தன்னைக்கொடுத்துக்கொண்டிருக்கும் எம்பெருமான் எப்போதும் வஸிக்கிற இடமாய், தங்களுடைய நிழல் பழங்கள் புஷ்பங்கள் முதலிய போக்கிய வஸ்துக்களாலே அவைகளுக்குள் போகிறவர்களுக்கு

மோஹத்தைக் கொடுக்கும் சோலைகளால் சூழப்பட்டதாய் இருக்கிற திருமாலிருஞ்சோலை மலையின்ஸமீபத்தில்இருக்கிற மலையைச் சேருங்கள். அதுவே நமக்கு மிகவும் உயர்ந்த ஹிதம்.

குறிப்பு:— திருமலையில் ஆழ்வாருக்கு உண்டான மிகுந்த ப்ரீதியினாலே அதின் ஸமீபத்திலிருக்கும் மலையும் அடையவேண்டியது என்று சொல்லுகிறார். (3)

---

அவ— கீழ்ப்பாட்டில் 'மிகவும் உயர்ந்த ஹிதம்' என்று சொன்னதை விஸ்தாரமாய் இதில் சொல்லுகிறார்—

கருமவன் பாசங் கழித்துழன் றுய்யவே
பெருமலை யெடுத்தான் பீடுறை கோயில்
வருமழை தவழு மாலிருஞ் சோலை
திருமலை யதுவே யடைவது திறமே. (ச)

(ப-ரை) கருமம் வன் பாசம் - கர்மங்களாகிய பலமான கயிற்றை, கழித்து - போக்கி, உழன்று - (கைங்கரியங்களைச் செய்வதில்) அலைந்து, உய்யவே - ஜீவன்கள் உஜ்ஜீவிப்பதற்காகவே, பெருமலை எடுத்தான் - கோவர்த்தனம் என்கிற பெரிய மலையை எடுத்து கோபாலர்களை ரக்ஷித்த கண்ணன், பீடு உறை கோயில் - (தாம் ஸர்வேசுவரன்என்கிற) பெருமை தோன்றும்படி வஸிக்கிற இடமாய், வருமழை தவழும் - அந்த இடத்தில் வருகிற மேகங்கள் தவிழ்ந்துபோகும்படி, மால் இரும் சோலை - உயர்ந்த விசாலமான சோலைகளையுடைய, திருமலை அதுவே - அந்த திருமலையையே, அடைவது திறமே - கைங்கரியம் செய்வதற்கு உபாயம்.

(கருத்து) ஜீவன்கள் எம்பெருமானுடைய கைங்கரியங்களுக்கு இடைஞ்சல்களான கர்மங்களைப் போக்கி, அவனுடைய கைங்கரியங்களைச் செய்து உஜ்ஜீவிப்பதே மிகவும் உயர்ந்த புருஷார்த்தம். இதை ஜீவன்கள் அடைவதற்காகவே முன்காலத்தில் கோவர்த்தனத்தைத் தூக்கிப்பிடித்து கோபர்களை ரக்ஷித்த மிகுந்த கருணையுள்ள கண்ணன், தாம் ஸர்வேசுவரன் என்று தோன்றும்படி இந்த திருமலையில் எப்போதும் வாஸஞ்செய்கிறான். எல்லா விதமான தாபங்கள் போகும்படி மழை மேகங்கள் தவிழ்ந்துகொண்டிருக்கும் இந்த திருமலையை அடையுங்கள். அதுவே சொல்லப்பட்ட புருஷார்த்தத்தை அடைவதற்கு உபாயம்.

---

அவ— அயன் மலையை அடையவேண்டாம். அதற்காகப் போவதே மிகவும் உயர்ந்த பிராப்பியம் என்று இதில் சொல்லுகிறார்—

திறமுடை வலத்தாற் றீவினை பெருக்கா
தறமுய லாழிப் படையவன் கோயில்
மறுவில் வண்சுனைசூழ் மாலிருஞ் சோலைப்
புறமலை சாரப் போவது கிறியே. (ரு)

(ப - ரை) திறமுடை வலத்தால் - உபாயத்தோடு கூடிய பலத்தாலே, தீவினை பெருக்காது - கெட்ட கர்மங்கள் பெருகும்படி செய்யாமல், அறம் முயல் - (ஆச்ரிதரை ரக்ஷிப்பதாகிய) தர்மத்தில் (எப்போதும்) முயற்சி செய்கிற, ஆழி படையவன் கோயில் - திருவாழியை ஆயுதமாக வைத்துக்கொண்டிருக்கும் எம்பெருமான் எப்போதும் வஸிக்கிற இடமாய், மறு இல் வண் சுனை சூழ் - கலக்கமில்லாத இனிமையான ஜலத்தையுடைய சுனைகளாலே சூழப்பட்ட, மாலிருஞ்சோலை-திருமாலிருஞ்சோலைக்கு, புறமலை - பக்கத்திலிருக்கும் மலைக்கு, சார போவது - அடைவதற்காகப் போவதே, கிறி - மிகவும் உயர்ந்த பிராப்பியம்.

(கருத்து) ஆச்ரிதரை ரக்ஷிப்பதாகிய தர்மத்தில் எப்போதும் முயற்சி செய்துகொண்டிருக்கிற திருவாழியை ஆயுதமாக ஏந்திக்கொண்டு எம்பெருமான் எப்போதும் வாஸம் செய்யும் இடமாய், தெளிந்தும் இனியதாயும் இருக்கும் ஜலத்தையுடைய சுனைகளால் சூழப்பட்ட திருமலையின் பக்கத்தில் இருக்கிற மலைக்கு, போவதே மிகவும் உயர்ந்த பிராப்பியம். திருடுவது வஞ்சனை செய்வது முதலான உபாயங்களாலும், ஸாஹஸமான காரியங்களைச் செய்வதாலும் கெட்ட கர்மங்களை விருத்தி பண்ணக்கூடாது.

இ—ம். பெருக்காது - பெருக்காமல், வினையெச்சம். (5)

---

அவ:— திருமலைக்கு ஸமீபத்தில் இருக்கிற மலைக்குப் போவதும் வேண்டாம், திருமலையைநினைப்பதே மிகவும் உயர்ந்த பிராப்பியம் என்று இதில் சொல்லுகிறார்—

கிறியேன நினைமின் கீழ்மை செய்யாதே
யுறியமர் வேண்ணே யுண்டவன் கோயில்
மறியோடு பிணைசேர் மாலிருஞ் சோலை
நெறிபட வதுவே நினைவது நலமே. (சு)

(ப-ரை) கிறி என நினைமின் - (மேலே சொல்லப்போகிறதையே) மிகவும் உயர்ந்த பிராப்பியம் என்று நினையுங்கள், உறி அமர் வெண்ணெய்-உறியில் வைத்த வெண்ணெய்யை, உண்டவன் கோயில் - சாப்பிட்டவனாகிய கண்ணன் எப்போதும் வாஸம் செய்யுமிடமாய், மறியொடு பிணை சேர் - குட்டிகளோடு பெண் மான்கள் சேரும், மாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலைமலையை, கீழ்மை செய்யாதே - (விஷயங்களில் மனம் போய் விழுவதாகிய) தாழ்ந்த வேலையைச் செய்யாமல், நெறிபட - வழி படும்படி (வேறு பிரயோஜநத்தைத் தேடாமல்), நினைவது - தியாநம் செய்யுங்கள், அதுவே நலம் - அதுவே மிகவும் உயர்ந்த புருஷார்த்தம்.

(கருத்து) உறியில் வைத்த வெண்ணெய்யைச் சாப்பிட்ட கண்ணன், அதனால் உண்டான முகமலர்ச்சியோடு எப்போதும் வாஸம் செய்கிற இடமாய், பெண்மான்கள் குட்டிகளோடு சேருகிற இடமாய் இருக்கிற திருமலையை, விஷயங்களில் மனம் போய் விழுவதாகிய தாழ்ந்த வேலையைச் செய்யாமலும் வேறு பிரயோஜநத்தைத் தேடாமலும் தியாநத்தைச் செய்யுங்கள். இதுவே மிகவும் உயர்ந்த பிராப்பியம்.

இ—ம். நினைமின் - ஏவல் பன்மை வினைமுற்று. செய்யாதே - செய்யாமல், வினையெச்சம். (6)

---

அவ:— கீழ்ப்பாட்டில் மனதாலே திருமலையைத் தியாநம் பண்ணவேணும் என்றார்; வாயால் செய்யும் ஸ்தோத்திர ரூபமான கைங்கரியம் இரண்டாம் பாட்டில் சொல்லப்பட்டது; இதில் உடம்பாலே செய்யவேண்டிய கைங்கரியத்தைச் சொல்லுகிறார்—

நலமேன நினைமி னரகழுந் தாதே
நிலமுன மிடந்தா னீடுறை கோயில்
மலமறு மதிசேர் மாலிருஞ் சோலை
வலமுறை யெய்தி மருவுதல் வலமே. (எ)

(ப-ரை) நலம் என நினைமின் - (மேலே சொல்லப்போகிறதை) மிகவும் உயர்ந்த பிராப்பியமென்று நினையுங்கள், நிலம் முனம் இடந்தான் - முன்காலத்தில் பூமியை பிரளயஜலத்திலிருந்து தூக்கிக்கொண்டுவந்த எம்பெருமான், நீடு உறை கோயில்- நெடுங்காலம் வஸிக்கிற இடமாய், மலம் அறு மதி சேர் - தோஷமில்லாத ஜ்ஞாநத்தைச் சேர்ப்பிக்கிற, மாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலை மலையை, நரகு அழுந்தாதே - (அவனை விட்டுப் பிரிவதாகிய) நரகத்தில் மூழ்காமல், முறை - முறைப்படி (வேறு பிரயோஜநத்தைத் தேடாமல்), வலம் எய்தி - பிரதக்ஷிணம் செய்து, மருவுதல் - நித்தியம் அங்கே பொருந்தியிருப்பது, வலம் - வரம், உயர்ந்த (சிரேஷ்டமான) ப்ராப்பியம்.

(கருத்து) முன்காலத்தில் பூமியை பிரளயஜலத்திலிருந்து தூக்கிக்கொண்டு வந்த எம்பெருமான் நெடுங்காலம் வஸிக்கிற இடமாய், தோஷம் கலக்காத அவனுடைய ஜ்ஞாநத்தைக் கொடுப்பதாயிருக்கும் திருமாலிருஞ்சோலை மலையை வேறு பிரயோஜநத்தைத் தேடாமல் அதை அடைவதே மிகவும் உயர்ந்த பிரயோஜநம் என்று நினைத்துக்கொண்டு, பிரதக்ஷிணம் செய்துகொண்டு, ஸ்திரமாய் வாஸம் செய்யுங்கள்; இதுவே ப்ராப்பியம். வேறொன்றையும் நினைக்கக்கூடாது. இப்படியிருந்தால் எம்பெருமானை விட்டுப்பிரிவதாகிய நரகத்தில் மூழ்கமாட்டீர்கள்.

இ—ம். இடந்தான் - வினைமுற்று பெயர்ச்சொல்லாய் வந்திருக்கிறது. வினையாலணையும் பெயர். (7)

---

அவ:— கீழ்ப்பாட்டில் திருமலையைப் பிரதக்ஷிணம் பண்ணச் சொன்னார்; அதுவே நம்முடைய ஸ்வரூபத்துக்குப் பொருந்தினது என்று இதில் சொல்லுகிறார்—

வலஞ்செய்து வைகல் வலங்கழி யாதே
வலஞ்செய்யு மாய மாயவன் கோவில்
வலஞ்செய்யும் வானோர் மாலிருஞ் சோலை
வலஞ்செய்து நாளும் மருவுதல் வழக்கே. (அ)

(ப-ரை) வலஞ்செய்யும் - (தன் ஸந்தோஷத்துக்காக) திருமலையைப் பிரதக்ஷிணம் பண்ணிக்கொண்டிருக்கிற, ஆயன் -

கோபனாய் அவதாரம் செய்த, மாயவன் கோயில் - ஆச்சரியமான வேலை செய்கிற எம்பெருமான் எப்போதும் வாஸஞ்செய்கிற இடமாய், வலம் செய்யும் வானோர் - (அவனுடன் கூட) பிரத க்ஷிணம் செய்யும் நித்தியஸூரிகளுக்குப் போக்கியமாய் இருக்கும், மாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலை மலையை, வலம் செய்து - உடம்பின் பலத்தை ஸம்பாதித்து, வைகல் - எப்போதும், வலம் கழியாதே - (அந்த பலத்தை வீண்விஷயத்தில் செல வழித்து) நாசம் செய்யாமல், வலம் செய்து - பிரதக்ஷிணம் செய்துகொண்டு, நாளும் மருவுதல் - ஒவ்வொரு நாளும் சேர்ந்திருப்பது, வழக்கு - நம்முடைய ஸ்வரூபத்துக்குப் பொருந்தினது.

(கருத்து) உடம்பின் பலத்தை ஸம்பாதித்து, அதை வேறு விஷயத்தில் செலவழித்து, நாசம் செய்யவேண்டாம். ஆச்சரியமான வேலைகளைச் செய்கிறவனாய் கோபர்களுக்குப் போல ஆச்ரிதர்களுக்கு ஸுலபனாயிருக்கும் எம்பெருமானும், நித்தியஸூரிகளும் பிரதக்ஷிணம் செய்துகொண்டு அநுபவிக்கிற திருமாலிருஞ்சோலைமலையைப் பிரதக்ஷிணம் செய்துகொண்டு ஒவ்வொரு நாளும் அத்துடன் சேர்ந்திருங்கள். இதுவே நம்முடைய ஸ்வரூபத்துக்குப் பொருந்தினது. (8)

---

அவ.— நாலாம் பாட்டில், எம்பெருமானுடைய கைங்கரியத்துக்கு உபாயம் திருமலையைச் சேருவது என்றார்; அதுவும் வேண்டாம், அதைச் சேருவோம் என்கிற எண்ணமே போதும் என்று இதில் சொல்லுகிறார்—

வழக்கென நினைமின் வல்வினை மூழ்கா
தழக்கொடி யட்டா னமர்பெருங் கோயில்
மழக்களிற் றினஞ்சேர் மாலிருஞ் சோலை
தொழக் கருதுவதே துணிவது சூதே. (௯)

(ப-ரை) வல் வினை மூழ்காது - பலமான கர்மங்களில் மூழ்காமல் (வேறு விஷயங்களைத் தகுந்தவைகள் என்று எண்ணாமல்), வழக்கு என நினைமின் - (மேலே சொல்லப்போகிறதை) தகுந்ததென்று நினையுங்கள், அழன்கொடி அட்டான் - (பிசாசாய் இருந்து ஒரு ஸ்திரீரூபமாய் வந்த) பூதனை என்பவளை நாசம்

செய்த கண்ணன், அமர் பெரும் கோயில் - நிலையாய் வாஸம் செய்யும் அந்த பெரிய இடமான, மழம் களிறு இனம் சேர்-இளமைப்பருவமுள்ள யானைக்கூட்டம் சேருகிற, மாலிருஞ்சோலை - திருமாலிருஞ்சோலை மலையை, தொழ, கருதுவதே - நான் வணங்குவேன் என்று எண்ணுவதில், துணிவது-விச்வாஸமுள்ளவனாய் இருப்பது, சூது - (அவனுக்கு அடிமை செய்வதற்கு) நல்ல உபாயம்.

(கருத்து) வேறு விஷயங்களைத் தகுந்தது என்று பாராமல், மேலே சொல்லப்போவதையே யுக்தமென்று எண்ணுங்கள். ஸ்திரீரூபமாய் வந்த பூதனை என்கிற பிசாசத்தைக் கொன்றதுபோல் ஆச்ரிதவிரோதிகளைப் போக்கும் ஸ்வபாவனான எம்பெருமான் நிலையாய் வாஸம் செய்யும் இடமாய், இளமைப் பருவமுள்ள யானைக்கூட்டங்கள் ஸஞ்சாரம் செய்யும் இடமாய் அதனால் எல்லாருக்கும் போக்கியமாய் இருக்கிற திருமாலிருஞ்சோலை மலையை தொழுவோம் என்று எண்ணுங்கள். இந்த எண்ணமே அவனுடைய கைங்கரியத்தைப் பெறுவதற்கு நல்ல உபாயம்.

குறிப்பு— கொடி - கொடிபோல் அழகான ஸ்திரீ.
இ—ம். அட்டான் - வினையாலணையும் பெயர். (9)

---

அவ:— திருமலையே பிராப்பியமென்று முதல் பாட்டில் சொன்னார்; அதையே இதில் சொல்லி, இந்தத் திருவாய்மொழியை முடிக்கிறார்—

சூதென்று களவுஞ் சூதுஞ் செய்யாதே
வேதமுன் விரித்தான் விரும்பிய கோயில்
மாதுறு மயில்சேர் மாலிருஞ் சோலை
போதவிழ் மலையே புகுவது பொருளே. (ய)

(ப - ரை) முன் வேதம் விரித்தான் - (தானே வேதத்தாலே சொல்லப்பட்டவன் என்கிற) வேதத்தின் அர்த்தத்தை முன்னாலே ஸ்ரீகீதையால் விஸ்தரித்தவனான கண்ணன், விரும்பிய கோயில் - மிகவும் விரும்புகிற இடமாய், மாது உறு மயில் சேர் - பெண் மயில்களுடன் சேர்ந்த ஆண் மயில்கள் ஸஞ்சாரம் செய்கிற இடமாய், மால்இரும் சோலை போது அவிழ் மலை-உயர்த்தியையுடைய

நெருக்கமாயிருக்கிற மரங்களின் புஷ்பங்கள் மலருகிற திரு மலையையே, சூது என்று - இது நல்ல வேலை என்று நினைத்து, களவும் சூதும் செய்யாதே - திருடுவதையும் வஞ்சனை செய்வதையும் பண்ணாதே, புகுவது பொருள் - அடைவதே புருஷார்த்தம்.

(கருத்து) திருடுவதையும் வஞ்சனை செய்வதையும் இவைகள் நல்ல வேலைகள் என்று நினைக்கவேண்டாம். முன்காலத்தில் 'தானே வேதத்தாலே சொல்லப்பட்டவன்' என்கிற அதின் பொருளை விரிவாய் ஸ்ரீ கீதையில் அருளிச்செய்த கண்ணன் பிரீதியுடன் நிலையாய் வாஸம் செய்யும்படியாய், ஆண் மயில்களும் பெண் மயில்களும் கூடி ஸஞ்சாரம் செய்யும் இடமாய், அதின் சோலைகளில் புஷ்பங்கள் மலருகிற இடமாயிருக்கிற திருமலைக்குள் போவதே மிகவும் உயர்ந்த புருஷார்த்தம்.

இ—ம். விரித்தான் - வினையால் அணையும் பெயர். (10)

---

பொருளென் றிவ்வுலகம் படைத்தவன் புகழ்மேல்
மருளில் வண்குருகூர் வண்சட கோபன்
தெருள்கொள்ளச் சொன்னவோ ராயிரத்து ளிப்பத்
தருளுடை யவன்றா ளணைவிக்கு முடித்தே. (கக)

(ப - ரை) பொருள் என்று - இதுவே புருஷார்த்தம்என்று, இ உலகம் படைத்தவன் - இந்த உலகத்தை உண்டுபண்ணின எம்பெருமானுடைய, புகழ்மேல் - நல்ல குணங்களிலே, மருள் இல் வண் குருகூர் வண் சடகோபன் - மோஹமில்லாத ஆழ்வார், தெருள்கொள்ள சொன்ன - நல்ல ஜ்ஞாநம் ஜீவன்களுக்கு வரும்படி சொன்ன, ஓர் ஆயிரத்துள் - ஒப்பில்லாத ஆயிரத்தில், இ பத்து - இந்த பத்துப் பாட்டுக்களும், முடித்து - (செய்யவேண்டியவைகளைச் செய்து) முடித்து, அருளுடைய அவன் தாள் - கிருபையை உடைய அவனுடைய திருவடிகளை, அணைவிக்கும் - சேரும்படி செய்யும்.

(கருத்து) ஸம்ஸாரிகள் நன்றாய் இருப்பதே தமக்குப் புருஷார்த்தம் என்று எண்ணி, அதற்காக உலகத்தை உண்டுபண்ணின எம்பெருமானுடைய நல்ல குணங்களில் கொஞ்சமும் அஜ்ஞாநமில்லாத ஆழ்வார், எல்லாரும் எம்பெருமானைக் கண்

ணாலே பார்ப்பதுபோல் அறியும்படி சொன்ன இந்தப் பத்துப் பாட்டுக்களும் செய்யவேண்டிய வேலையைச் செய்து ஜீவன்களைக் கிருபையையுடைய அவன் திருவடிகளில் சேர்க்கும். (11)

---

தீப்தாஶ்சர்யஸ்வபாவம் த்வனிதஜலஜம் வர்ஷுகாம்போத
வர்ணம் ஶைலச்சத்ராஹிதார்த்தாஶ்ரிததீவியஸஙெதிரோவீத
மவ்யுழ । ஸம்ரம்ஹோக்ஷிப்தஹேதிம் வூணதநாதரணம் வந்த
தநாவெதநாஞம் வந்தவபூாவாயபம் ஶ்ரீதீநாம் ஶாஹஸவி
யமிஸிவ்யாநதோதா நிவிஷ்வெஶ ॥ ||௩௨||

இந்த திருவாய்மொழியில் பத்துக் குணங்களைச் சொல்லி, அழகான ஸமீப ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானை ஆழ்வார் அநுபவிக்கிறார்—

அந்தக் குணங்களாவன— (1) வளர்கிற ஒளியையுடையவனாய், ஆச்சரியமான வேலைகளைச் செய்வதே ஸ்வபாவமாயிருப்பது. (2) தன்னுடைய த்வனியாலே பிரதிகூலர் நடுங்கும்படி செய்கிற ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஆயுதமாக வைத்துக்கொண்டிருப்பது; (3) மழை மேகம்போல் நீல வர்ணமுள்ளவனாயிருப்பது; (4) கோவர்த்தனத்தைக் குடையாய்ப் பிடித்து ஆச்ரிதரை ரக்ஷித்தது; (5) மிகவும் நன்றாய் விளங்குகிற திருவாழியை ஆயுதமாக வைத்திருப்பது; (6) கோபிகைகள் உறியில் வைத்த வெண்ணெய்யைச் சாப்பிட்டது; (7) பரபரப்புடன் பூமியைப் பிரளயஜலத்திலிருந்து தூக்கிக்கொண்டுவந்தது; (8) ஆச்ரிதர்களுக்கு பிரதக்ஷிணம் செய்யவும் நமஸ்காரம் செய்யவும் பலத்தைக் கொடுப்பது; (9) பூதனையை நாசம் செய்தது; (10) வேதத்தின் அர்த்தத்தை முதல் ஆசாரியனாயிருந்து வெளியிட்டது. (32)

இத்யுக்தாத்யஸஹ்யக்ஷணவிரஹதயா ஶாந்தஷெகவ
வரகாக ஸவஷ்வாஷாதக்வஹந்தராவ்யஸநஹரதயாஷாவஸ்திஸம்
வீக்ஷிதாக । வெஶவ்யத்ராஸயொஶாஷிஜஸஹ்யதவநா
நூக்திஸாரஸ்ய ஶாநாக கௌஸல்யாத்ஶ்யஹாவாவஹநிய
யதயா வாதிஹோஶ்யம் ஷிதீயெ ॥ ||௩௩||

இரண்டாம்பத்தில் பத்துக்காரணங்களாலே எம்பெருமான் மிகவும் போக்கியம் என்று அருளிச்செய்கிறார். அவைகளாவன— (1) ஒரு க்ஷணமும் பிரிவதும் பொறுக்கமுடியாதபடி இனியவனா யிருப்பது; (2) மனிதனான அவதாரத்திலும் ஸர்வேசுவரனாய் இருப்பது; (3) எல்லா மதுர வஸ்துக்களுடைய ரஸம் சேர்ந்து இருக்கும்படியான போக்கியதை ; (4) ஆச்ரிதருடைய துக்கத் தைப் போக்குவது; (5) ஆச்ரிதர்களை அடைவதினால் மிகவும் ஸந்தோஷப்படுவது; (6) ஆச்ரிதர்கள் தனக்கு முகம் கொடார் களோ என்று பயப்படுவது; (7) தன்னைச் சேர்ந்தவர்களுக்கு வேண்டியவர்களை ரக்ஷிப்பது; (8) மோக்ஷத்தில் மிகவும் இனிய வனாயிருப்பது; (9) கைங்கரியத்துக்கு உத்தேச்யமாயிருப்பது; (10) கைங்கரியம் செய்யும்படி ஸமீபத்தில் அழகான இடத்தில் இருப்பது. (33)

(இரண்டாம் பத்து முற்றிற்று)